Registered as a News Paper in Sri Lanka

வாரமலர்

# தினச்செய்தி

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

பக்கம் 24 | டிச. 20-26, 2015 | செய்தி - 12

# திருக்குரானை பழித்தவர்களை தாய் தடுத்தாலும் விடேன் - றிசாத் பதியுதீன் சூளுரை



திருக்குரான் ஆண்டவனால் மக்களுக்கு நல்வாழ்க்கை வழிமுறைகளை போதிப்பதற்கு வழங்கப்பட்டதாகும். உலகில் எங்குமுள்ள 1.7 பில்லியன் முஸ்லிம்களினால் புனித நூலாக கருதப்படுகின்றது. இதைப் பொதுபலசேனாவின் செயலாளர் நாயகம் வணக்கத்துக்குரிய கலகொடத்தே ஞானசார தேரர் அவமதிக்கும் விதத்தில் பேசிவருகின்றார். அது கண்டனத்திற்குரிய விடயமாகும். இவ்வாறு செய்வது முஸ்லிம்களை அவமதிப்பதற்குச் சமமாகும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது, என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், வர்த்தகம், கைத்தொழில் அமைச்சரும், வன்னித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியூதீன் கூறியுள்ளார்.



பார்க்க பக்கம் 2இல்

உள்ளே...
04 மூளைச்சலவை
07 காலத்தால் செய்யாத உதவி
10 நண்பேன்டா

## உமாமகேஸ்வரன் ஊர்மிளாதேவி கள்ளக்காதல்

அந்தக் காலத்தில் அழகியான ஊர்மிளாதேவியுடன் உமாகேஸ்வரன் உடலுறவு கொள்கின்றார் என்ற புகாரை பிரபாகரன் நம்பியதுடன், உமாமகேஸ்வரனைப் பார்த்து, உடனடியாக இயக்கத்தை விட்டு விலகுமாறு கேட்டுக்கொண்டார். "நீர் தான் இந்த இயக்கத்தின் தலைவர். தலைவரான நீரே சட்டதிட்டங்களை மீறினால், மற்ற யார் சட்டதிட்டங்களை மதித்து அடங்கிப் போவார்கள்? நீர் இந்த இயக்கத்தை அழிப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக இந்த இயக்கத்தை விட்டுச் செல்லவும்," என்று பிரபாகரன் உமாமகேஸ்வரனுக்குக் கூறினார்.

பார்க்க பக்கம் 8இல்



தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 7539300
E-mail : thinacheithi@gmail.com
Web : www.thinacheithi.com / lk

# கூட்டணியினர் பல்லைக் குத்தி பிறரின் மூக்கில் மணக்க விடக்கூடாது

தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒற்றுமை பற்றி அதன் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே 'தினச்செய்தி' ஆசிரியர் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டணி பெரும் பங்கு வகிக்கவேண்டும். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தான் 'தினச்செய்தி' ஆசிரியர் தலையங்கத்தில் ஒற்றுமையின் அவசியம் பற்றி வற்புறுத்தியது.

தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் குழப்பமும், குத்துவெட்டும் நடைபெற்றால், அது தமிழ் மக்களையே பாதிக்கும் என்பதை நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம். அண்மையில் கடந்த 10, 11 ஆம் திகதிகளில், வடபகுதிக்கு இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கி னேஸ்வரனைச் சந்தித்தபோது, தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் இடம்பெறும் குத்து வெட்டுக்கள் பற்றி கவலையுடன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் ஏற்படும் குழறுபடிகள் இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளதாகவும், கூட்டணிக்குள் காணப்படும் ஒற்றுமையின்மை இந்தியாவிற்கு கவலையளித்துள்ளதாகவும் திரு.சின்ஹா குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹாவை கடந்த 10ஆம் திகதி சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தையின்போது தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் ஒற்றுமையை நிலைநாட்ட எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என உத்தரவாதம் கொடுத்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி, இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக இந்தியத் தூதுவருடன் நடாத்திய பேச்சுக்கள் பற்றி சீ.வி.விக்கினேஸ்வரன் ஊடகவியலாளர்களைச் சந்தித்து பேசும் பொழுது, "கூட்டணிக்குள் குழப்பங்களும், குத்துவெட்டுக்களும் நடந்தால், ஒற்றுமையின்மை நீடித்தால், அதை பெரும்பான்மை சமூகத்தினர் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி தமிழர்களுக்கு கொடுக்கவேண்டிய உரிமைகளையும், சலுகைகளையும் கொடுக்க முன்வரமாட்டார்கள்."

"எனவே, தமிழர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் உருவாகிவரும் இந்தக் காலகட்டத்தில் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று அவர் எடுத்துக்காட்டினார்," எனக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களான ஆர்.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோருடன் கருத்தொருமித்து நடக்குமாறு, இந்தியத் தூதுவர் சின்ஹா வடமாகாண முதலமைச்சரை வற்புறுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக சீ.வி.விக்கினேஸ்வரன் குறிப்பிடுகையில்–

"கொழும்பைச் சேர்ந்த கூட்டணித் தலைவர்களுக்கும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கூட்டணித் தலைவர்களுக்கும் இடையில் கொள்கை வித்தியாசங்கள் இருப்பதாகக் கூறினார்.தமிழர்களின் பிரச்சினைகளை வெவ்வேறு இடங்களிலிருந்து, வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்க்கும் போது வித்தியாசமாகத் தான் இருக்கும் என்றார். யாழ்ப்பாணத்திலுள்ள அரசியல்தலைவரான எனக்கும், கொழும்பிலுள்ள தலைவர்களான சுமந்திரன் போன்றோருக்கும் அடிப்படை வேறுபாடுகள் சில உள்ளன,"என்றார்.

இருந்தபோதிலும் தான் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒற்றுமையை பெரிதும் விரும்புவதாகவும், விரைவில் கூட்டணிக்குள் உள்ள பிரச்சினைகளை கலந்துரையாடல்கள் மூலம் முடிவுக்கு கொண்டு வரப்படும், என்றார்.

சுமந்திரனைப் பற்றி விக்கினேஸ்வரன் குறிப்பிடுகையில், இலங்கை சட்டக் கல்லூரியில் அவர் தனது மாணாக்கர் என்றும், தனது மாணாக்கனுடன் ஆலோசனை மூலம் கருத்து ஒற்றுமையை ஏற்படுத்த எந்தச் சிரமமும் இருக்காது என்றும் குறிப்பிட்டார்.

எனவே, 'தினச்செய்தி' குறிப்பிட்டது போலவும், இந்தியத் தூதுவர் சின்ஹா குறிப்பிட்டது போலவும் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டும். கூட்டணியினர் ஒருமித்த குரலில் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்ப முன்வரவேண்டும்.

ஒரு ஜனநாயக அமைப்பில், கருத்து வேறுபாடுகள் இருப்பது சகஜம். அந்த வேறுபாடுகளை உள் வீட்டுக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

எங்களுடைய பல்லைக் குத்தி பிறரின் மூக்கில் மணக்க விடக்கூடாது.

ஒற்றுமை.. ஒற்றுமை.. ஒற்றுமை! இது தான் தமிழர்களுக்கு அவசியமான விடயமாகும்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு."

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

# திருக்குரானை பளித்தவர்களை...

கடந்த மகிந்த அரசாங்க காலத்தில் பொதுபலசேனாவின் கை ஓங்கியிருந்தது. முஸ்லிம்களுக்கு எதிராக பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. முஸ்லிம்களின் கடைகள், வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டன.

அளுத்கம, பேருவல மற்றும் தர்க்கா நகரம் ஆகிய இடங்களில் கடந்த யூன் 2014 இல் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் வெடித்தது. பல முஸ்லிம்களின் கடைகள், வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. நான்கு பேர் இறந்தார்கள். 80 பேர் காயமடைந்தார்கள். முஸ்லிம்கள் பல இன்னல்களை எதிர்நோக்கினர். முஸ்லிம்களுக்காக அன்று ஆட்சியிலிருந்த மகிந்த அரசாங்கம் எதுவும் செய்யவில்லை. இதன் காரணமாகவே முஸ்லிம்கள் கடந்த மகிந்தவின் அரசாங்கத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். கடந்த ஜனவரி 8 புரட்சிக்கு ஆதரவளித்தனர். ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

"மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு சிறுபான்மை இன மக்களின் மத சுதந்திரத்திற்கு உத்தரவாதம் வழங்கும் என எதிர் பார்க்கின்றோம். திருக்குரானுக்கு எதிராக ஞானசார தேரர் தொடர்ந்து குரல் எழுப்பினால், அதனை இந்த அரசாங்கம் கண்டிக்கத் தவறினால், அதையடுத்து உலக நாடுகளின் தலையீடு எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்,'' என அமைச்சர் றிசாத் பதியுதீன் 'தினச்செய்தி'க்கு வழங்கிய செவ்வியில் கூறினார்.

"உடனடியாக ஜனாதிபதியும், பிரதமரும் தலையிட்டு ஞானசார தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறுபான்மையின மக்களான முஸ்லிம்களின் மதச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் தரவேண்டும்,'' எனக் கேட்டுக்கொண்டார்.

கடந்த 2000 ஆம் ஆண்டளவில் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட வடபகுதி முஸ்லிம்களின் மீள்குடியேற்ற விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் விசமத்தனமாக எதிர்ப்புத் தெரிவித்து வருவதையும் சுட்டிக்காட்டிய அமைச்சர் றிசாத் பதியுதீன், இவ்வாறு இன விரோத செயலில் ஈடுபடவேண்டாம் என்று அவர் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவரின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் குழு ஒன்று தமிழ்த தேசியக் கூட்டணியினரைச் சந்தித்து தங்கள் நிலைப்பாட்டை எடுத்துக்கூற திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

"இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களும் தமிழ் பேசும் மக்களாவார். தமிழர்களை நாம் எமது சகோதரர்களாகவே கருதுகின்றோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மாற்றான்தாய் பிள்ளைகள் போல எம்மை நடாத்துகின்றார்கள். இது எமக்கு மிகவும் வேதனையளிக்கின்றது,'' என்று அமைச்சர் கூறினார்.

"இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சொந்த இருப்பிடங்களை விட்டு நாட்டின் வேறு பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழ்ந்த எம்மை ஆதரித்து எமது சொந்த இடங்களில் குடியமர ஆதரவு அளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டணியினரை முஸ்லிம் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்,'' என்றார் றிசாத் பதியுதீன்.

**தினச்செய்தி தொடர்பான விமர்சனங்கள், ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

***தொடர்புகளுக்கு :***
**தில்லைகட்டி லேன், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**
**தொலைபேசி : 021 7539300**
**தொலைநகல் : 021 7539300**
**இணையம் : thinacheithi@gmail.com**

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பத்திரிகை நிறுவனமொன்றிற்கு பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01. கணக்காளர்**
இத்துறை சார்ந்து அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். அனுபவம், தகுதிக்கேற்ற வகையில் ஊதியம் வழங்கப்படும்.

**02. விநியோக முகாமையாளர்**
பத்திரிகை விநியோகத்தில் அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கலாம்

**03. பக்க வடிவமைப்பாளர்கள்**
(Corel Draw, Photoshop, Pagemaker, In Designing)
அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**04. உதவி ஆசிரியர்கள் - ஒப்புநோக்குநர்**

***பத்திரிகைத்துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது***
***விண்ணப்பங்களை 30.12.2015க்கு முன் அனுப்பி வைக்கலாம்.***

முகவரி : தில்லைகட்டி லேன் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

# அரசே தமிழ் அரசுக் கைதிகளை உடன் விடுதலை செய்யவேண்டும்

தமிழ் சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள். முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் 2010 ஆம் ஆண்டு ஒரு முறை ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட வரும் வடமாகாணசபையின் உறுப்பினரு மான எம்.கே சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

மேலும் தினச்செய்திக்கு அவர் வழங்கிய செவ்வியில் 1971, 87, 89 ஆம் ஆண்டுகளில் அரசுக்கெதிராக மிகமூர்க்கத் தனமாகப் போராடிய மக்கள் விடுதலை முன்னணி போராளிகளுக்கு இலங்கை அரசு ஏற்கனவே பொது மன்னிப்பு வழங்கியுள்ளது. அதேபோல 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அன்று இருந்த ஜே.ஆர் தலைமையிலான அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியிருந்தது. மேலும் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து 12,000 விடுதலைப்புலிகளுக்கு மகிந்த தலைமையிலான அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியது.

இந்த நாட்டிலே பொதுமன்னிப்பு வழங்குவது என்பது புதிய விடயமல்ல. ஏற்கனவே பொது மன்னிப்பு வழங்கப்பட்டதற்கான முன்னுதாரணங்களை தந்துள்ளேன் என்று திரு. சிவாஜிலிங்கம் தினச்செய்திக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. சிவாஜிலிங்கம் தினச்செய்திக்கு வழங்கிய முக்கிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

***தினச்செய்தி :*** **தற்போது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களின் நிலை தொடர்பில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா?**

***சிவாஜிலிங்கம்:*** சிறிய மூச்சு விடுவதற்கான நிலை ஏற்பட்டுள்ளதே தவிர, மக்களது எண்ணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட வில்லை. குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில், அரசாங்கம் தனது இனவாதப் போக்கையே வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளும் பிணையிலேயே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நாம் கூறுவது என்னவெனில் 1971 மற்றும் 1987, 1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுக்கெதிராக ஆயுத மேந்திப் போராடிய ஜே.வி.பி கிளர்ச்சிக்காரர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இதே போன்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், ஆயுத மேந்திப் போராடிய தமிழக் கிளர்ச்சியாளர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அதேமாதிரி பொதுமன்னிப்பை இன்று காராகிரகத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் வழங்க முடியாது.

மற்றொரு கேள்வி – 12 ஆயிரம் விடுதலைப்புலிப் போராளிகள் புனர்வாழ்வு அளித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அதில் கட்டளைத் தளபதிகளாக இருந்தவர்களும் அடக்கம். அப்படியாக இருக்கும் நிலையில் சாதாரணமாக உதவி புரிந்தவர்களை மட்டும் சிறைகளில் வைத்திருப்பதில் என்ன நியாயம்?

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக ஐக்கியநாடுகளின் சென்ற மனித உரிமை சபையின் கூட்டத்தில் அரசு வாக்குறுதி அளித்துள்ளது. அதே பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதானவர்களை விடுதலை செய்யுங்கள். தமிழ் அரசியல் கைதிகளுடன் சிங்கள அரசியல் கைதிகள் உள்ளனர். எனவே இவர்களையெல்லாம் சேர்த்தே விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தின் 2 ஆவது வாசிப்பின் மீது 16 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் ஆதரவாக வாக்களித்தனர். ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐச் சேர்ந்த இருவர் வாக்களிக்கவில்லை. அரசியல் கைதிகளை விடுவிக்காததை அடுத்து தற்போது வரவு செலவுத்திட்ட இறுதி வாக்கெடுப்பில் ரெலோ கலந்து கொள்ளமாட்டாதென அக்கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. இதனால் 16 என்ற ஆதரவில் மேலும் 4 குறைவடையும். 25 வீதம் கூட்டமைப்பில் சறுக்கும். இது ஒரு அபாய அறிவிப்பில்லையா? என்பதனையே நாம் கேட்கிறோம்.




***தினச்செய்தி:*** **அரசாங்கத்தை நாம் தற்போது எதிர்க்கக்கூடாது. தமிழருக்கான தீர்வு 2016 இல் கிடைப்பதற்கான காலம் கனிகிறது என சம்பந்தன் கூறுகிறார். அவர் என்ன முகாந்திரத்தின் அடிப்படையில் கூறுகிறார்?**

***சிவாஜிலிங்கம்:*** சம்பந்தர் ஐயா ஒன்றை நினைக்கிறார். என்னவென்றால், நாடாளுமன்றத்தை ஒரு அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்மொழிய இருக்கிறார். அது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடாளுமன்றம் கூடும் அதேவேளை இந்த அரசியல் நிர்ணய சபையும் கூடும்.

இதேபோன்றே சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்திலும் (1970களில்) இப்படியொரு நிர்ணய சபை டி.எஸ் சேனநாயக்க வித்தியாலயத்தில் கூடியது. இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கலந்துகொண்ட நிலையில், மூவர் அரசு பக்கம் சென்றவேளை, தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணயசபைக் கூட்டங்களுக்கு செல்லாமல் பகிஸ்காரம் செய்தது. அப்போது அரசுக்கு ஆதரவளித்த அகில இலங்கை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மூவரில் திரு. ஆனந்த சங்கரி மற்றும் தியாகராஜா, அருளம்பலம் ஆகியோருக்கு எதிராக தமிழரசுக் கட்சி கண்டனம் தெரிவித்தது. ஆனால் ஆனந்த சங்ககரி மட்டும் இறுதியில் அரசுக்கு வழங்கிய ஆதரவை நிறுத்திவிட்டு வெளியேறினார்.

***தினச்செய்தி:*** **வடமாகாண சபை உறுப்பினராக உள்ள நீங்கள், ஒவ்வொரு சபை அமர்விலும் ஏதோ பிரேரணைகளை சமர்ப்பிக்கின்றீர்கள். அநேகமாக அவைகள் நிறைவேற்றப்படுகின்றன. அதைத்தவிர உருப்படியான செயற்பாடுகள் இல்லை என மக்கள் கூறுகிறார்களே?**

***சிவாஜிலிங்கம் :*** ஊடகங்கள் பல இது தொடர்பாக எழுதுகின்றன. பல்வேறு செயற்பாடுகளை நாம் முன்னெடுத்துள்ளோம். எங்களுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. உதாரணமாக இந்தியாவில் தமிழ் நாட்டிற்கு மத்திய அரசால் நிதி ஒதுக்கப்படும் போது, தமிழக முதல்வரே அதை எவ்வாறு செலவு செய்வதென தீர்மானிப்பார். ஆனால் இங்கு அப்படியல்ல. எமக்கு மத்தியிலிருந்து நிதி வரும் போது, உங்களுக்கு சுகாதாரத்திற்கு ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவிப்பார்கள். இதைவிட என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமெனவும் மத்திய அரசு அறிவிக்கும். அப்படியென்றால் நாம் என்ன செய்வது. சும்மா வந்து இருந்துவிட்டு போவதா?

மேலும் “முதலமைச்சர் நிதியம் என்ற ஒன்று எமக்கு இல்லை.” வெள்ளத்தால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள் என்றால், அவர்களுக்கு சமைத்த உணவைக் கொடுக்க எம்மிடம் நிதி இருக்க வேண்டும். அது கூட எம்மிடமில்லை. அதற்குப் பொறுப்பாக சமூக சேவைகள் திணைக்களத்தையே, மத்திய அரசே வைத்துள்ளது. அதுமட்டுமன்றி கிராம உத்தியோகத்தர்களும் மாகாணசபைக்கு கீழ் இல்லை. அவர்களும் மத்திய அரசுக்கு கீழேயே உள்ளனர். ஆனால் தமிழ் நாட்டில் அப்படியல்ல. அங்கே மாவட்டக் கலெக்டர்கள் அனைவரும் தமிழக அரசுக்கு கீழேயே உள்ளனர். எனவே இதையெல்லாவற்றையும் தாண்டியே நாம் செயற்பட வேண்டியுள்ளது.

நாங்கள் எமது மக்களுக்குத் தேவையான தீர்மானங்களை நிறைவேற்றுவதைக் கண்டு அரசாங்கம் அதிர்ச்சியடைந்துள்ளது. கடைசியாக கடந்த 10 ஆம் திகதி நடந்த அமர்வில் ஐக்கிய நாடுகள் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அடுத்து மறுநாள் யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதுவர் சின்ஹா முதலமைச்சரைச் சந்தித்தவேளை, பதறியடித்துக் கொண்டுவந்த ஆளுநர், என்ன இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளீர்கள்? யார் சிவாஜிலிங்கமா கொண்டு வந்தது? எனக் கேட்டபோது நான் அந்த நேரம் சபையில் இருக்கவில்லை என்று கூறியுள்ளார் முதல்வர். அப்படியென்றால் தீர்மானங்களைப் போடாமல் என்ன செய்யச் சொல்கிறீர்கள்.

***தினச்செய்தி:*** **ஒதுக்கிய நிதியைக் கூட மாகாணசபை உரியமுறையில் பயன்படுத்துவதில்லை எனக் கூறப்படுகிறதே?**

***சிவாஜிலிங்கம்:*** மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு என்றால் ஏப்ரல், மே மாதங்களிலேயே வரும். அதற்கான கேள்வி கோரி, யூன், யூலை, மாதங்களிலேயே வேலை தொடங்கும்.

***தினச்செய்தி:*** **ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைகள் இந்த வருடம் ஓகஸ்ட் மாதமளவிலேயே நிறைவுபெற்றதாகக் கூறப்படுகிறதே?**

***சிவாஜிலிங்கம்:*** இவைகளைப் பற்றியெல்லாம் நாம் கதைத்துக் கொண்டிருக்கலாம். இந்த விடயம் தொடர்பாக நான் மாகாண சபையிலும் கேள்வி எழுப்பியுள்ளேன். என்ன நடக்கின்றதென்றால் எதிர்பார்க்கப்படும் நிதியனெ கணக்கிட்டு நாம் ஜனவரி மாதத்திலேயே கேள்விகளைக் கோருவோம். அதில் நாம் நிதியொதுக்கீடு இந்த வேலைகளுக்குச் செய்யாவிடின் கேள்விப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும். அத்துடன் கேள்வி கோரலுக்கான விண்ணப்பப்படிவத்தை திருப்பித்தரமாட்டோம். மீளளிப்பு வைப்பை வங்கி வட்டியுடன் திருப்பித் தருகிறோம். இவ்வாறு நான் நகர சபையில் இருக்கும்போது செய்தனான். இதைச் செய்வம் என்று கூறினேன். ஐந்து கோடி, பத்துக்கோடி தான் மாகாண சபை அமைச்சுக்கு ஒதுக்கீடு. இதுவும் பிந்தியே வருகிறது. ஏதோ ஐயாயிரம் கோடி ஒதுக்கிறமாதிரி செய்திகள் வரும். எனினும் ஐம்பது இலட்சமோ ஐநூறு இலட்சமோ திரும்பக்கூடாது என்பதுதான் எனது கருத்து. எனவே இது தொடர்பாக ஊடகங்கள் பிரேரணை நிறைவேற்றம், நிதி திரும்புகிறது என்று கூறுவது ஒரு பொருத்தமற்ற செயற்பாடு. இன்று வடபகுதி போரால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு உதவி செய்ய வெளிநாட்டில் உள்ளவர்கள் பணம் அனுப்பத் தயாராக உள்ளனர். ஏனைய மாகாணங்களில் முதலமைச்சர் ஊக்குவிப்பு நிதி இருக்கலாமெனில் ஏன் வடக்கு, கிழக்கில் இருக்கக்கூடாது. அவ்வாறு பணம் வந்தாலும் திறைசேரி ஊடாகவே வரும். எனவே இதனை அரசாங்கம் கணக்காய்வு செய்யலாம். இதைப் பற்றி கேட்க எவருமில்லை. எமது தலைவர்கள் கூட இதனை ஏன் எமது பகுதிகளில் செய்ய முடியாது என கேட்பதற்கு முடியாமலுள்ளது.

***தினச்செய்தி:*** **முன்னர் ஆளுநராக இருந்த ஜி.ஏ. சந்திரசிறி, மற்றும் முன்னாள் பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ் ஆகியோரே மாகாணசபை செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாக இருந்தார்கள் என குற்றஞ்சாட்டினீர்கள். ஆனால் தற்போது அவர்களிருவரும் எம்மத்தியில் இல்லை எனவே ஆளுநருடன் கதைத்து ஏன் இந்த நிதியை முன்கூட்டியே எடுக்க முடியாது?**

***சிவாஜிலிங்கம்:*** ஆளுநருடன் கதைத்தாலும் அவரும் அரசாங்கத்தின் கையாள் தான். அவர்களின் தராதரம் கூடிக் குறைந்ததே ஒழிய எங்களது நியதிச்சட்டங்கள் எதுவும் அங்கீகரிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதற்கு இந்த ஆளுநரே காரணம். இதே ஆளுநரே ஐ.நா சபையில் எமக்கு எதிராக குரல் கொடுத்தவர். மோசமான சந்திரசிறிபோய் அதைவிட ஓரளவு பரவாயில்லாத பள்ளியக்கார வந்துள்ளாரே ஒழியே அவர் எமது மீட்பராக வரவில்லை.

***தினச்செய்தி:*** **சுமந்திரன் விக்கினேஸ்வரன் முரண்பாடு எந்த நிலையிலுள்ளது?**

***சிவாஜிலிங்கம் :*** விக்னேஸ்வரன் ஐயா, சனத்திற்கு நீதி கிடைக்க வேண்டுமென தனக்கு சரியென்று பட்டதை சொல்கிறார்.

*(தொடர்ச்சி 05 இல்......)*

# மூளைச்சலவை அரசியல்

எல்லோரும் சலவை பற்றி நன்கு அறிந்திருப்பார்கள். சலவை செய்வது பழயவை அழுக்கு என்று கருதும்போது அதனைக் கழுவி அகற்றிவிட்டு புதியதாக்கிவிடுவது ஒருவகை சலவை. இன்னொரு விதத்தில் கழுவிய பின் புதிய சேர்மானங்களைச் சேர்த்து புதிய பொருள் ஆக்கிவிடுவது இன்னொரு வகை சலவை. இதுபோன்று மனிதரிடையேயும் மூளைச்சலவை சாதாரணமாக நிகழ்கிறது.

அந்தவகையில் தமிழினம் திடீரென்று 'தொப்' என்று விழுந்ததோ அல்லது வந்தேறு குடிகளோ அல்ல. மாறாக தமிழினத்திற்கு நீண்ட ஒரு வரலாற்றுப் பின்புலம் உண்டு. எந்தவொரு விடயத்தையும் வரலாற்று ரீதியாக நோக்க வேண்டுமென தமிழில் வரலாற்றியல் ரீதியாக மூன்று கலாநிதிகளைப் பெற்றுக்கொண்ட ஒரே ஒரு பேராசான் மறைந்த பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடுவார். அதற்கேற்ப தமிழினம் நீண்டகாலத்தில் இருந்து தமது தாயகமான வடக்கு கிழக்கில் வாழ்ந்து வருகிறது என்பதற்கு கந்தரோடை, தமிழகத்தில் திருநெல்வேலி போன்ற பல இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்படைக்கால சான்றுகள் ஆதாரபூர்வமாக உண்டு.

இவை ஒருபுறமிருக்க தமிழினத்தின் நீண்டகால போராட்டத்தின் முக்கிய பேசு பொருள் 'நிலம்'. அதாவது 'தமது சொந்த நிலத்தில் தாமே தம்மை ஆட்சி செய்வது' இதுதான் இன்று தமிழினம் கேட்கும் உரிமை. இதை தமிழினம் கோரியதற்கு பல மறைபெறுமான விடயங்கள் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்டமையே என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எப்படியாவது சிங்களவரின் அடக்குமுறையிலிருந்து நாம் 'மீளவேண்டுமாயின் எமக்கு இருக்கும் ஒரேதெரிவு 'நம்மை நாமே ஆள வேண்டும்' இதனை சிரமேற்கொண்டே இவ்வளவு காலமும் தமிழினம் போராடியிருக்கிறது. காலம் தனது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப சிறப்பாக, சுவாரசியமாக உலக இயங்கியலை நடாத்த வேண்டுமாயின் அதற்கு சில பிரச்சினைகள் தேவையாய் இருக்கிறது.

இன்று விடுதலைப்புலிகள் இல்லாத சூழ்நிலையில் வடக்கு கிழக்கின் பெரும்பான்மை ஆதரவுத்தளத்தைப் பெற்றுள்ளவர்கள் தமது அரசியல செயற்பாடுகளை எவ்வாறு எடுத்து நடாத்துகின்றனர் என்பது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. அதேவேளை இன்றைய அரசியல்சார் தளவோட்ட நகர்வு 'மூளைச்சலவை அரசியல்' என்றவாறாக இருக்கின்றது என்பது மிகவும் முக்கியமானது.

உலக இயங்கு தளத்தில் ஒரு இனத்திற்கு பல்வேறுபட்ட காலங்களிலும் பல்வேறுபட்ட தலைமைகள் இருந்திருக்கின்றன. அந்த பல்வேறுபட்ட தலைமைகளும் தமக்கென ஒரு தனித்த கூட்டத்தினை தனது இயங்கியலுக்கு சேர்க்க நினைப்பது யதார்த்தமே. ஆனால் அவர்களுக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் மூளைச்சலவை பற்றி மாத்திரமே இப்பத்தியில் வெளிக்காட்ட விரும்புகிறேனே தவிர எவரையும் விமர்சிக்கவோ பழிதீர்க்கவோ எத்தனிக்கவில்லை.

எமது இனம் தந்தை செல்வாவின் இறுதி சகாப்தங்களில் பெருவாரியாக உணர்ச்சிபூர்வ அரசியலை உட்புகுத்திக்கொண்டது. பிரபாகரனது வருகை, உணர்வேற்றப் பேச்சு, கவர்ச்சிதரு செயல்வீரம், புரட்சியாளன் சேஷகுவேராவின் சிந்தனை, உட்பாய்ச்சல் என்பவை எல்லாம் பலமாக கொடுக்கப்பட்டன. இங்கு ஆரம்பமான மூளைச் சலவையைத்தான் எமது இனம் தமது வழிநடத்தல் ஊடகமாக கொண்டு நகர்ந்து வந்திருக்கிறது.

இந்த மூளைச்சலவை போராட்டத்திற்கு அவசியமானதும் கூட. வீட்டில் தாய், தகப்பன், மனைவி, பிறந்த பிள்ளை என்பவற்றுடன் பந்தப்பட்டு இருப்பவனை போராட்டக்களத்திற்கு இழுத்து வருவது இலேசான காரியமல்ல. இதற்கு அது தேவையாய்த்தான் இருந்தது. இதுபோன்ற களச்சாவுகள் 'வீரச்சாவு', 'வீரமரணம்' என்று புனிதப் படுத்தப்பட்டதனால்தான் புலிகளால் பெருவாரியான இளைஞர்களைத் தன்பால் ஈர்க்கக்கூடியதாக இருந்தது.

யுத்தம் முடிந்த பின்பு அவை விட்ட தலைமை இடை வெளியை அரசியல் கட்சிகள் நிரப்ப எத்தனித்தன. கூட்டமைப்பு அதில் வெற்றியும் கண்டது. இங்கு தேர்தல் காலங்களில் 'மூளைச்சலவைதான்' இன்றியமையாத விடயமாக அமைந்திருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகம் இந்த சித்து விளையாட்டை காட்டித்தான் எமது இனத்தைத் தூண்டி தமது அரசியல் நகர்வுத்தளத்தை இன்றுவரை உறுதி செய்து வருகிறது.

அதாவது மேடைகளில் ஏறியவுடன் கைகளை முறுக்கி உயர்த்தி கால்களை உந்தி மேலெழுந்து அடிக்கும் உணர்ச்சி அடி இனப்பற்று மேடைகளை விட்டு இறங்கியவுடன் காற்றுடன் காற்றாகப் போய்விடுகிறது. ஆனால் அவை மக்களை ஏதோ பண்ணிக்கொண்டிருக்கக் கூடியது.

எமது மக்கள் அரசியல் சார்பாக அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. ஏதோ விளக்குமாறு நின்றாலும் தாம் எண்ணும் கட்சியில் நிற்கிறதா? அதுதான் கேள்வி. அதேவேளை மக்கள் அமைப்புகள், ஒன்றியங்கள் ஏதோவொரு நோக்கத்திற்காக விடும் அறிக்கைக்ளும் மக்களது சிந்தனைத்தளத்தில் பெருமளவு தாக்கத்தைச் செலுத்தக் கூடியவை.

அதேவேளை மூளைச்சலவை செய்யக்கூடிய இன்னொரு வடிவம் பத்திரிகைகள். இவை முதலாளித்துவத்தின் வெளிப்பாட்டு வடிவமே. நடுநிலைமை என்பதையும் தாண்டி தனித்தரப்பு நிலைப்பட்ட தத்தமது கொள்கை என்ற ரீதியில் நகர்ந்து செல்கின்றன. இப்பத்திரிகைகள் தத்தமது கருத்தை மக்களிடையே விழுங்க வைத்து அவர்களது கருத்தாக்கத்திலும் சிந்தனையோட்டத்திலும் பெரும் செல்வாக்கைச் செலுத்துபவை. அத்தோடு நுகர்வுப் பைத்தியமாகவும் ஆதிக்கப் பிரிவினரின் கருத்தியலுக்கு தாளங்களாகவும் ஆக்கிவிடுகின்றன. நண்பர் ஒருவர் பேசும்போது சொன்ன விடயம் வடகிழக்கு மக்களுக்கு தேசியக்கட்சிகள் செய்ததை விடவும் கூட்டமைப்பு ஒன்றும் பெரிதாகச் செய்ததாக இல்லை உணர்வுப்பேச்சை விட என்று குறிப்பிட்டதோடு ஏன் கூட்டமைப்பை வீழ்த்த முடியாமல் இருக்கிறது எனவும் கேட்டார்.

அதில் பல உண்மைகளும் இருக்கத்தான் செய்கிறது. அக்கட்சி சாதித்தவை என்ன என்பதுபற்றி வாக்குப்போட்ட மக்களுக்குத் தெரியும். ஆனால் அவ்வெற்றி எவ்வாறு சாத்தியமாகிறது என்றால் அதற்கு விடை மக்களது சிந்தனையில் கூட்டாக தமது இருப்பியலை உறுதி செய்வதாகும். இதற்கு உறுதுணையாக கூட்டமைப்பிற்று ஆதரவாக பத்திரிகைகள் செயற்படுவதுதான்.

புலிசார் ஆதரவுத் தளத்தோடு வந்தது மாத்திரமே கூட்டமைப்பின் வெற்றியே ஒழிய வேறு ஒன்றையும் அவர்கள் சாதிக்கவில்லை என்பதே உண்மை. இன்றும் கூட்டமைப்பை எதிர்த்து மூளைச்சலவை செய்யக்கூடிய வேறு பலமான தரப்பு இல்லை என்பதே உண்மை.

அன்புவழியூர்
ச. திருச்செந்தூரன்
திருகோணமலை.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி:** *இலங்கைக்கான அமெரிக்க அதிகாரிகளின் தொடர்ச்சியான படையெடுப்பு பற்றி?*
பதில்: விரைவில் நாடு அமெரிக்கர்களினால் கபளீகரம் செய்யப்படும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

**றூபன், கொழும்பு.**

கேள்வி: *காணாமற் போனவர்களுக்கு தீர்வு கிட்டுமா?*
பதில்: கிட்டும்... ஆனால் கிட்டாது.

**குமார், கிளிநொச்சி.**

கேள்வி: *மாகாணசபையின் அதிகாரங்களை மத்திய அரசு பிடுங்குவதாக முதல்வர் விக்கி குற்றம் சுமத்தியுள்ளனரே?*
பதில்: மாகாணசபையின் அதிகாரங்கள் என்ன என்பதை முதலில் விக்கி தெளிவுபடுத்தட்டும். அதன் பின் மத்தியரசு பிடுங்கியதா இல்லையா என பின்னர் கூறலாம்.

**வனஜா, யாழ்ப்பாணம்**

கேள்வி: *அமெரிக்காவின் அடிமைகளாக இலங்கையர் மாற்றப்பட்டுள்ளதாக பேராசிரியர் பீரிஸ் விசனம் வெளியிட்டுள்ளமை குறித்து?*
பதில்: அவரைத்தான் கேட்க வேண்டும்.

**சபேசன், மஸ்கெலியா.**

கேள்வி: *வடக்கில் பெண்களை தற்கொலைக் குண்டுதாரிகளாக்கியது நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளே என அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளாரே?*
பதில்: கழுதைதேய்ந்து கட்டெறும்பு முன்பு அவர் முழு அமைச்சர் இப்பொழுது அவர் அரை அமைச்சர்.

**சஞ்சீவன், குருநகர்.**

கேள்வி: *சீனாவிற்கு ஒரு அங்குல நிலமேனும் வழங்கப்படாதென அரசாங்கம் தெரிவித்துள்ளதே?*
பதில்: நிலம் எல்லாம் இப்பொழுது அங்குலத்தில் கொடுக்கமுடியாது. பேர்ச், ஏக்கர் கணக்கிலே தான் கொடுக்கலாம்.

**சர்மிளா, கொட்டாஞ்சேனை.**

கேள்வி: *தமிழரின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதனை பாரதூரமாக எடுத்துக்கொள்ளவில்லையென மாவை எம்.பி கூறியது எந்த அர்த்தத்தில் ?*
பதில்: மாவையின் கூற்றிற்கு அர்த்தம் கற்பிக்க முடியுமா? முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவதே அவரது வாடிக்கையாகும்.

**வர்சி, அளவெட்டி.**

கேள்வி: *புலிகளுடன் தனது தந்தை தொடர்பை பேணவில்லை என்பதனை மக்கள் அறிவரென நாமல் கூறியுள்ளாரே?*
பதில்: 'பச்சா!!'

**அஞ்சனா, ஓமந்தை.**

கேள்வி: *ஆட்சிமாற்றத்திற்கு வெளிநாடுகளுடன் தான் சிறந்த கொள்கைகளை முன்னெடுத்தமையே காரணம் என பிரதமர் ரணில் பெருமை பேசுவது குறித்து?*
பதில்: கூரையில் ஏறி கோழி பிடிக்க தெரியாதவர்கள் எல்லாம்...

**கரன், வவுனியா.**

கேள்வி: *ஒடுக்கப்படுமா ஐ.எஸ். ஐ.எஸ்?*
பதில்: ஆரம்பத்திற்கு எல்லாம் முடிவு உண்டு.

**நேசன், முல்லைத்தீவு.**



# சொன்னார்கள் சொன்னார்கள்...

நாம் அமெரிக்காவின் அடிமைகளாக மாற்றப்பட்டுள்ளோம், எமது நாட்டையும் மக்களையும் அவர்களின் கட்டளையின் கீழ் கொண்டு சென்றுள்ளனர்.

ஆசிய பசுபிக் வலயத்தில் தமது இராணுவத் தளங்களைப் பலப்படுத்தும் நோக்கத்தில் கடந்த காலத்தில் அமெரிக்கா பாரிய முயற்சிகளை முன்னெடுத்தது.



அதேபோல் இந்த இராணு வத் தளங்களை அதி பாதுகாப்பு வலயங்களாக மாற்ற வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இப்போது அந்த முயற்சிகள் அமெரிக்காவிற்கு சாதகமாகவே அமைந்துள்ளன. அதாவது இலங்கையும் இப்போது அமெரிக்காவின் துணை நாடாக மாறியுள்ளதால் அவர்களின் இலக்கு இலகுவாக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதானமாக திருகோணமலை துறைமுகம் தான் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

ஆசிய வலயத்தில் மிகவும் பாதுகாப்பான மையமாகவே திருகோணமலை கருதப்படுகிறது. அதை இலக்கு வைத்தே இந்த முயற்சிகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மீண்டும் எமது நாட்டினுள் இன்னொரு நாட்டின் தளங்களை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு எமது நாடு தள்ளப்பட்டுள்ளது.

அதேபோல் மறுபக்கம் பொருளாதாரத்தை இலக்குவைத்து எமது வளங்களை சுரண்டும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்.

ஆகவே அதை தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் மக்கள் மூலமாக முன்னெடுக்க வேண்டும்.

அரசாங்கம் நாட்டை காட்டிக்கொடுத்து அமெரிக்காவின் அடிமை நாடாக மாற்ற முயற்சித்தாலும் இந்த நாட்டை நேசிக்கும் மக்கள் ஒருபோதும் அவ்வாறான முயற்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது.

**முன்னாள் வெளிவிவகார அமைச்சர், ஜி.எல்.பீரிஸ்**

பிரபாகரனின் தலைக்குள் விசத்தை ஏற்றி, வடக்கில் வாழ்ந்த பெண்கள் தற்கொலை குண்டுதாரிகளாக மாறும் பயங்கரமான நிலைமையை நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளே ஏற்படுத்தின.

பகைமை அரசியல் அதிகார ஆசையே இந்த நிலைக்கு காரணமாக அமைந்தது.

இனி மேலும் எம்மிடையே பகைமை அரசியல் வேண்டாம். அதனை கைவிடுவோம்.



அதற்கு முற்றுப் புள்ளி வைப்போம்.

இலங்கையில் வாழும் சிங்கள தமிழ், முஸ்லிம் மக்கள் இனவாதிகள் அல்ல. ஆனால் அரசியல் வாதிகள் தமக்குள்ள அதிகார ஆசையினால் இனவாதத்தை தூண்டுகின்றனர்அரசியல் வாதிகளே இனவாதிகள்.

இனியும் தேசிய பிரச்சினையோடு கால்பந்து விளையாடாது அதற்கு நிலையான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். எனவே சந்தர்ப்பவாத அரசியலை தூக்கியெறிவோம். உடனடியாக செயலில் இறங்குவோம்.


மீண்டுமொரு பிரபாகரன் உருவாகாத வகையில் புதிய அரசியலமைப்பையும் தேர்தல் முறையையும் ஏற்படுத்தி தேசிய பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்போம்.

**இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா.**

தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள மக்கள் குடியேற்றம் செய்யப்படுகின்றமை பாரதூரமான பிரச்சினை என்றபோதும் அதனை நாம் பெரிதாக பொருட்படுத்தவில்லை

வடக்கில் அரச படைகளின் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகளை எதிர்வரும் ஜனவரிக்குள் விடுவிக்காவிட்டால் கடந்த மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராக முன்னெடுத்ததைப்போன்று போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் சுமார் இரண்டு இலட்சம் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர் 25 வருடங்களாக அவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். யாழில் இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவித்தாலே அந்த மக்கள் மீள்குடியேற முடியும்.



**மாவை சேனாதிராஜா**

## அரசே தமிழ்...

அது சுமந்திரனுக்கு பிடிக்கவில்லையெனில் அதற்கான காரணத்தை அவர் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் அவர் பகிரங்கமாக அவரை நீக்க வேண்டும். வெளியேற்ற வேண்டும் என்று கூறியவர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், மாவை ஆகியோர் அவரின் கருத்து பிழையென கண்டித்தவர்கள். எனவே விக்னேஸ்வரன் ஐயா, சுமந்திரனின் பிரச்சினையை நீட்டிக்கொண்டு போனால் சுமந்திரனை பெரிய ஆளாக்க வேண்டுமென்றில்லை.

***தினச்செய்தி : தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படுமா?***

***சிவாஜிலிங்கம்:*** பதிவு விடயத்தில் தொடர்ந்தும் இழுபறி நிலையே நீடிக்கிறது. பதிவு விடயத்தில் தமிழரசுக்கட்சிக்கு பெருமளவில் உடன்பாடு இல்லை. இருந்தாலும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடுவது தொடர்பாக அனைவரிடமும் நகல்கள் பரிமாறப்பட்டு தொண்ணூறு வீதம் முடிவடைந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அதனைப் பூர்த்தியாக்கக்கூடிய வாய்ப்புள்ளது. 2011ஆம் ஆண்டிற்குப் பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் புதிய கட்சிகளின் பதிவுகளுக்கான விண்ணப்பங்களைக் கோரவில்லை. ஏனெனில் தொடர்ந்து தேர்தல்கள் வந்து கொண்டிருந்தன. 2008 ஆம் ஆண்டு தேர்தல் திருத்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதமே தேர்தல்கள் ஆணையாளர் புதிய கட்சி பதிவிற்கு விண்ணப்பம் கோருவார். இவ்வாறு கோரினாலே நாம் தனிக்கட்சியாக பதிவு செய்யலாம். மற்றைய முறையின்படி நாம் ஒரு முன்னணியாக செயற்படலாம். உதாரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கு தனிச்சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னணி எனப் பதிவு செய்வதால் நாம் எந்தக் கட்சியிலும் தேர்தலில் கேட்கலாம். கட்சிகளின் உறுப்புரிமை இரத்தாகாது.

எனவே 2016 ஆம் ஆண்டு ஆரம்ப காலங்களில் கட்சிப்பதிவு தொடர்பாக நாம் இறுக்கமான முடிவொன்றை எடுக்கக்கூடிய நிலை உருவாகும் என நம்பலாம் – என திரு சிவாஜிலிங்கம் தினச்செய்திக்கு கூறினார்.




# புதிய இடதுசாரி புரட்சிகர இயக்கத்தின் தோற்றம்


அரசியல் இயக்கம் என்பது தனி நபரின் செயற்பாடு அல்ல. மார்க்சிச வரலாறு தனிநபர் வீரதீரச் செயல்களை நிராகரிக்கின்றது. ஆயினும் வரலாற்றை கட்டியெழுப்பும்போது தனி நபர்களின் ஆளுமையை – விஷேடமாக பங்களிப்பினை நிராகரிப்பதில்லை. ஏனென்றால் அவ்வாறான தனிநபர்களின் ஆளுமையானது வரலாற்றுத் தேவையின் நிபந்தனை என்பதனால் ஆகும். ஜே.வி.பியின் உருவாக்கத்தைப் பொறுத்தவரையிலும் அதைப் பற்றிப் பேசும்போது அதற்கு முன்னிலை வகித்த அதற்கான கருத்தியல், தத்துவார்த்த மற்றும் அமைப்பு ரீதியாக வழிகாட்டிய அதற்காக ஆரம்பம் முதல் தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்த தோழர் ரோகண விஜேவீரவை பற்றிக்குறிப்பிடாமல் இருக்க முடியாது.

### நல்ல கம்யூனிஸ்டாவது எப்படி?

தோழர் ரோகண விஜேவீர 1943 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் திகதி தங்காலையில் ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்தார். அவரது முழுப் பெயர் பட்டபெந்திகே தொன் நந்தசிறி விஜேவீரா. தோழர் விஜேவீராவின் தந்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்பாட்டாளராவார். தங்காலையில் பிறந்த போதிலும் சிறுவயதிலேயே வசிப்பதற்கு மாத்தறைக்கு வந்தமையினால் அவரது ஆரம்ப பாடசாலை மாத்தறை கோட்டேகொட கொட உட வித்தியாலயமாகும். பின்னர் 1959இல் அம்பலாங்கொடை தர்மாசோக கல்லூரியில் கல்வி பயின்றார். தந்தை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்பதால் மாத்தறையைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தங்களது வீட்டுக்கு அடிக்கடி வந்ததன் காரணமாக அவர்களுடனான நட்புறவு சிறுபராயத்திலேயே வீஜேவீராவுக்கு கிடைத்தது. அதன் காரணமாக சிறுவயதிலேயே கம்யூனிஸ்ட் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டிருந்தார். பாடசாலை கல்வியை கற்றுக் கொண்டிருக்கும் போதே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை வாசித்தறிந்தார். அது மட்டுமல்ல அவர் லியு ஷா ஓவின் ‘நல்ல கம்யூனிஸ்ட்வாதியாவது எப்படி?’ எனும் புத்தகத்தையும் வாசித்திருந்தார்.

### தோழர் ரோகண லுமும்பா சென்றார்

1960 செப்ரெம்பர் 26ஆம் திகதி மருத்துவ பட்டப்படிப்பிற்கான புலமைப்பரிசில் பெற்று சோவியத் மொஸ்கோ சர்வதேச நட்புறவுப் பல்கலைக்கழகத்திற்கு (பின்னர் அது லுமும்பா நட்புறவு பல்கலைக்கழகமென பெயர் மாற்றப்பட்டது) பிரவேசித்தார். அங்கு மருத்துவக் கல்விக்குப் புறம்பாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பள்ளியில் அரசறிவியல், வரலாற்று பொருள்முதல்வாதம் போன்ற கற்கை நெறிகளையும் கற்றறிந்தன் காரணமாகத் துரிதமாக அரசியலில் பிரவேசித்தார். 1961இல் பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் சோவியத் மொல்டாவியாலிலும், ஜோர்ஜியாவிலும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அதன்போது மோல்டாவியா விவசாயிகளை சந்தித்து உரையாடியுள்ளார். தோழர் ரோகண



விஜேவீர 1961இல் சிறந்த மாணவர்க்குரிய பதக்கமான தங்கப்பதக்கத்தை வென்றதுடன், இலங்கையிலிருந்து சென்ற மாணவர் குழாமில் மிகவும் இளம் வயது மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சோவியத் தேசத்தில் சோஷலிசத்தை தத்துவார்த்த ரீதியாக கற்றுக்கொண்டதனாலும் சோஷலிசத்தை தனது கண்ணால் கண்ணுற்று அனுபவித்ததன் காரணமாகவும் அது பற்றிய அக்கறை இருந்தபோதிலும் கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையில் செயற்படும் செயற்பாடுகள் பற்றி வெறுப்படைந்திருந்தார். 1963இல் சீன–சோவியத் கருத்து முரண்பாடு மேடையேறியவுடன் தோழர் விஜேவீரா தீவிர (ரெடிகல) நிலையை வெளிப்படுத்திய சீனாவுக்கு சார்பாகச் செயற்பட்டார். சீன – சோவியத் கருத்து முரண்பாடுகளுக்கு ஏற்ப உலகிலிருந்த சகல கம்யூனிஸ்ட் கட்சிகளும் இரண்டாக பிளவுபட்டன. இலங்கையிலும் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாக பிளவுபட்டது. அதன்போது சீன அணியாக பிரேமலால் குமாரசிறி சண்முகதாசன் உள்ளிட்ட குழுவினர் பிரிந்தபோது தோழர் விஜேவீரா அவர்களை வாழ்த்தினார்.


இக்காலத்தில் மிகக் கடுமையாக கண்விழித்து கல்வியிலும், தத்து வார்த்த போராட்டத்திலும் ஈடுபட்டதன் காரணமாக சுகவீனமுற்ற தோழர் விஜேவீர விடுமுறையில் 1964இல் இலங்கைக்கு வந்தார்.

ரோகண விஜேவீர, விஜேசேன விதாரண (சனத்) எச்மில்டன், வில்சன் தெதிகம, டபிள்யு.ஈ கருணாரத்ன, தெல்கொட ராஜா மற்றும் சிறிபால அபேகுணவர்தன ஆகிய ஏழு பேரைக் கொண்ட குழு 1965.05.14ஆம்திகதி அக்மீமன கருணாரத்னவின் வீட்டில் கூடியது. சர்வதேச மற்றும் தேசிய அரசியல் நிலமைகள் பற்றி விரிவாக விளக்கிய தோழர் விஜேவீர இந்த நிலைமைகளின் அடிப்படையில் சரியான புரட்சிகர இடதுசாரிய இயக்கத்தின் தேவையை வலியுறுத்தினார். அதற்கிணங்க சீன கிளையை சரியான திசையை நோக்கி கொண்டு செல்வது, அதில் சீனக் கிளையின் முழுநேர உறுப்பினராக தோழர் ரோகண விஜேவீர செயற்படுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

**ஜே.வி.பியின் வரலாறு - 2**

### புதிய புரட்சிகர கட்சியின் உதயம்

1965 மே 14 அக்மீமன கலந்துரையாடலின்படி புதிய புரட்சிகர இயக்கமாக சீன கிளையை மாற்றுவதற்கான முடிவினை எடுத்த தோழர் ரோகண விஜேவீர உள்ளிட்ட குழுவினர் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த போதிலும், இதுபற்றி அப்போதைய சீன கிளையின் பிரதானியான சண் முகதாசனுக்கு தெரிய வந்நததன் காரணமாக தோழர் விஜேவீர சீனக் கிளையிலிருந்து நீக்கப்பட்டார். அதற்கிணங்க சீனக்கிளையை மறுசீரமைக்கும் முயற்சி தோல்வியடைந்தது. ஆனால் புரட்சிகர இயக்கத்திற்கான அரசியல் இடைவெளி நீடித்தது. அதனால் மீண்டும் 1966 இல் அக்மீமனையில் கலந்துரையாடிய இளைஞர் குழுவினர் புதிய கட்சியொன்றை ஆரம்பத்திலிருந்து கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அது மிகவும் கஷ்டமான பணியானது. ஆனால் வரலாற்றுத் தேவையின் நிமித்தமாக அந்த கஷ்டமான பணியில் ஈடுபடுவதற்கு தோழர் விஜேவீராவும் சீன கிளையிலிருந்து நீக்கப்பட்ட சிலரும் இப்பணிக்கு தோள் கொடுத்தனர். அதுவே ஜே.வி.பியின் ஆரம்பமாகும்.



**“சந்தர்ப்பவாதமென்பது அவசரமாக தோன்றியதோ, தற்செயலாக, தவறுதலாக தோன்றியதோ அல்லது தனிநபர்களின் துரோகத்தனமோ அல்ல. அது ஒட்டுமொத்த வரலாற்றில் சமூக உற்பத்தியாகும். சீர்திருத்தவாதத்தின் கட்டாயத் தன்மையைத் தீர்மானிப்பது நவீன சமூகத்தின் வர்க்க மூலங்களாகும். சீர்திருத்தவாதமென்பது சர்வதேச பிரபஞ்சமாகும்”**

### விவசாய ஆராய்ச்சி யுகம்

1966–67அந்த இரண்டு வருடங்கள் என்பது ஜேவிபி ஒரு அமைப்பாக செயற்பட்ட மிகவும் கஷ்டமான காலமாகும். இந்த காலகட்டம் “விவசாய ஆராய்ச்சி யுகம்” என அழைக்கப்பட்டது. இலங்கை தொழிலாளர் வர்க்கம் பழைய இடதுசாரிகளால் காட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் அப்போது தொழிலாளர் வர்க்கத்தை அமைப்பு ரீதியாக அணிதிரட்டுவது மிகவும் கஷ்டமான விடயமாக இருந்தது. தொழிலாளவர்க்கம் இடதுசாரிகள் மீதான நம்பிக்கையை இழந்திருந்தது. இதற்கிணங்க பழைய இடது சாரிகளால் கைவைக்கப்படாதிருந்த விவசாயிகளின் மத்தியில் கட்சி வேலைகளை செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டது. இது புரட்சிவாதிகளை திரட்டுகின்ற வேலை முறையாகும். விவசாயிகளிடம் வேலைசெய்வது வேறுவிதமான அனுபவமாகும். அவர்கள் அமைப்பு ரீதியான பிரிவினர் அல்ல. அரசியலில் கூருணர் வுமிக்கவர்களும் அல்லர். ஆனால் ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருந்தனர். அதன்படி மிகவும் கஷ்டமான நிலையில் விவசாயிகளுடன் தோழர் விஜேவீர வேலையை ஆரம்பித்தார். இக்காலத்தில் போக்குவரத்திற்கு பணமின்றியும், சாப்பிடுவதற்கு உணவின்றியும் பசிக்கொடுமையை சகித்துக் கொள்ள வேண்டிய நிலை யேற்பட்டது. ஒரு தடவை பஸ் கட்டணத்தை கட்டிக் கொள்வதற்காக திஸ்ஸ மாராமை பஸ் நிலையத்தில் தோழர் விஜேவீர இன்னும் ஒருவருடன் மூட் டை தூக்கினார். பின்னர் அதையும் கைவிடும் நிலையேற்றப்பட்டது. இக்காலத்தில் கிரிந்த பிரதேசத்தில் பண்ணை யொன்றை ஆரம்பித்ததுடன், அதுவே அவர்களின் தங்குமிடமாகவும் மாறியது. அந்த பண்ணையை அடிப்படையாக வைத்து தோழர் ரோகண விஜேவீர கட்சிக்கு புதிய ஆட்களைத் திரட்டினார்.

### சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக

ஜே.வி.பி புதிய அரசியல் இயக்கமாக உதயமாவது இலங்கையில் இடதுசாரிய இயக்கத்தில் நிலை கொண்டிருந்த சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக மிகவும் சரியான புதிய புரட்சிகர இடதுசாரிய இயக்கத்தின் இடைவெளியை நிரப்புவதாக அமைந்திருந்தது. ஜே.வி.பி ஆரம்பித்து இரண்டு வருடங்கள் ஆனபோது தமது இயக்கத்தில் தலை தூக்கிய சந்தர்ப்பவாத மார்க்ஸிய மல்லாத போக்கிற்கு எதிராக போராட வேண்டிய நிலை தோன்றியது. 1967 டிசம்பர் மாதம் அனுராதபுரம் கலத் தேவ பிரதேசத்தில் இடம்பெற்ற ‘கலத்தேவ கலந்துரையாடல்’ அதன் நிமித்தமாக இடம்பெற்ற ஒன்றாகும்.

**“எங்களால் கட்டியெழுப்ப வேண்டிய அமைப்பு என்னவென்பதை முடிவு செய்யும்போது நாம் மீண்டும் சரியாகவே செயற்பட்டிருக்கிறோம். கெரில்லா படையாக அணிதிரட்ட வேண்டுமா அல்லது அரசியல் கட்சியாக ஸ்தாபனப்பட வேண்டுமா? இந்தப் பிரச்சினை சர்வதேச புரட்சிகர இயக்கங்களில் உக்கிரமான கருத்தாடலுக்கும், கருத்துப் போராட்டத்திற்கும் உள்ளாகியிருந்தது. அவ்விரண்டினதும் இடைநிலை உறவுகளைப் புரிந்துகொண்ட நாம் எம்மால் கட்டியெழுப்ப வேண்டியது கட்சியென்றும் அது வர்க்கப் போராட்டத்தின் உக்கிரமான கட்டத்தில் ஆயுதப் போராட்டத்திற்காகத் தயாராகும் கட்சியாகத் தீர்க்கமான கட்டத்தில் புரட்சியின் முன்னணிப் படையாக மக்களுக்கு வழிகாட்டலையும், தலைமை தாங்கி, மக்களை முன்னோக்கி வழிநடாத்துகின்ற முன்னணிப் படையாக ஸ்தாபனப்பட்டாக வேண்டும்”**

1966 / 67 இந்த இரண்டு வருடங்கள் என்பது ஜே.வி.பியை கட்டியெழுப்புவதில் பாரிய இன்னல்களை சந்தித்த காலமாகும். சமூகத்தை மாற்றும் பொதுத் தேவையின் நிமித்தமாக ஆட்களை திரட்டுவதென்பது மிகவும் கடினமாக காணப்பட்டது. ஜே.வி.பிக்கு தலைமை தாங்கிய ரோகண விஜேவீர உள்ளிட்ட தோழர்கள் பெரும் சவால்களை சந்தித்தனர். மார்க்சிய லெனினிச புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்பும் பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. அவ்வாறான கட்சியை கட்டி யெழுப்புவதற்கு கம்யூனி ஸவாதிகள் தேவைப்பட்டனர். ஆனால் பழைய கம்யூனிஸ்டுகள் அப்படியானவர்களை உருவாக்கியிருக்கவில்லை. அதே போன்று ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் குழந்தைகள் கம்யூனிஸ் டுகளாக பிறப்பதில்லை. முதலாளித்துவ முறைக்கு கட்டுப்படுகின்ற அதற்கு பொருத்தமான

(தொடர்ச்சி 14 இல் .....)

# காலத்தால் செய்யாத உதவி

“ஆடுமாடு இல்லாதவன் அடைமழைக்கு ராசா... பெண்டில் பிள்ளை இல்லாதவன் பஞ்சத்துக்கு ராசா” எண்டொரு பழமொழி இருக்கு.

ஆடுமாடு வச்சிருக்கிறவைக்கு அதுக்கான தீன் தேடவும் பட்டியைச் சுத்தமா வச்சிருக்கவும் மாரி காலத்தில சரியான துன்பப்பட வேண்டியிருக்கும். சரி உங்களுக்கு விளங்கத்தக்கனையா எழுதிறன். அதாவது பயங்கர கஸ்டம். மனிசி பிள்ளையள் வச்சிருக்கிறவனுக்கும் மாரியில முணுக்கெண்டவுடன நோய்நொடி உணவுப்பஞ்சம் எண்டு பயங்கரக் கஸ்டம். இந்தக் காலத்தில சாதாரணமா மனிசர் வாழுற இடங்கள் குறுகிப்போனதால ஆடுமாடு வளர்ப்பும் விவசாயமும் தொலைதூரக் கிராமங்களுக்குப் போயிற்றுது.

உணவுப்பழக்க வழக்கமும் நவீன உலக நடைமுறைக்குள்ள போயிற்றுது. வீட்டில நெல் வச்சிருந்து அன்றாடம் உரலில குத்தி உமி தவிடு எல்லாம் வீட்டில பரவி... அதொருபக்கம் மரக்கறி வகையள் ஒருபக்கம். பயறு உழுந்து கடலை செத்தல் மிளகாய் இதெல்லாம் ஒருபக்கம் எண்டிருந்ததும் இப்ப இல்லை. இதை ஏன் சொல்லுறனெண்டா... சனத்துக்கு வீட்டைவிட்டு வெளியால போற தேவை மிக குறைவாத்தான் இருந்தது. ஊருக்குள்ள ஒரு ஒற்றையடிப்பாதை அல்லது வண்டிப்பாதை இதுவே அவர்களுக்குப் போதுமாக இருந்தது.

இப்ப அப்பிடியில்ல. ஆடு மேய்க்கப் போறவனும், மீன்விக்கப் போறவனும், மோட்டச்சயிக்கிள்ளதான் போறான். அப்பிடி மோட்டச்சயிக்கிள் இல்லாதவையும், சந்து பொந்தெங்கும் ஓடுற போக்குவரவு பஸ்ஸில போய் வரக்கூடியதாக இருக்கு. இதுகளெல்லாம் ஓடிவர பாதையும் மாற வேண்டிய தேவையிருக்கு. ஒற்றையடிப்பாதையில ஒரு ஊரும் இல்லை.

இந்தப் பாதைகள் பற்றி சட்டத்தில நான் படிச்ச விசயம் ஒண்டிருக்கு.

“பாதை என்பது யாருக்குச் சொந்தமானது?” இதுக்கான பதிலை நீங்கள் எப்பிடி யோசிச்சு வைச்சாலும் வையுங்க. பதில் என்னண்டா பாதை என்பது பாதசாரிக்கே சொந்தம். அப்ப உந்த சைக்கிள்ள போறவை, மோட்டச்சயிக்கிள்ள போறவை, காரில... பஸ்ஸில போறவை, பாரஊர்தியள்ள போறவை எல்லாம்... சொல்லுறன். இதுகளெல்லாத்துக்கும், அததின்ர பெறுமதிக்கு தக்க மாதிரி வரிகட்டவேணும். இல்லாட்டி இதெல்லாம் பாதையில போக ஏலாது. வருசாந்தம் கட்டிற வரி இதுக்குத்தான்.

வரியை ஒழுங்காக் கட்டுற வாகனங்கள். தங்கட வேலையளுக்காக ஓடவேண்டிய பாதை அதாவது தெரு ஒழுங்காக இல்லையெண்டா எவ்வளவு வேதனை. இனி இதையே நம்பியிருக்கிற மக்கள் போக்குவரத்துக்கு எவ்வளவு கஸ்ரப்படுவினம். அந்த வீதியளத் திருத்திறதுக்கோ புனரமைப்பு செய்யவோ அல்லது புதிசாப்போடவோ அரசாங்கம் நிதி ஒதுக்கத்தான் வேணும். ஒதுக்கிக் கொண்டும்தான் இருக்கு.

ஆனால் வீதியள் திருத்தப்படுதோ என்றால்... ஓம் ஓமெண்டுதான் சொல்ல வேணும். ஆற்ற வீதி எண்டத மட்டும் கேளாதையுங்கோ... நகரங்களுக்க உள்ள வீதியளுக்கான ஒதுக்கீட்ட நகர சபைதான் செய்ய வேணும் இந்த நகர சபை கடந்தால் பிரதேசசபை செய்ய வேணும். பிரதேச சபையும் கடந்தா, ஒட்டுமொத்த பவரில மாகாண சபை இருக்கு... நகர சபையில நீங்கள் ஒரு கேள்வியப் போட்டீங்களெண்டா...

“ஓம் அது நாங்கள் மாகாண சபையோட கதைச்சிருக்கிறம் விரைவில செய்யிறதா வாக்குறுதி குடுத்திருக்கினம்” கவனியுங்கோ வாக்குறுதி குடுத்திருக்கினம் எதுக்கு? விரைவில செய்யிறதா... இந்த விரைவப்பத்தி நான் ஒரு விளக்கம் சொல்லத்தான் வேணும்.

ஆயிரத்தி தொள்ளாயிரத்து நாப்பத்து ஒன்பதில கொடுக்கப்பட்ட நிலங்களில ஒரு தெரு குறிக்கப்பட்டிருக்கு.. அது வயல்நிலம். அந்த நாளயில வெள்ளாமை செய்யிறது மனிசரும் மாடுகளும்தான். அப்ப அவரவர் காணிக்கு நேர வாற ஒழுங்கையையும் தண்ணிய பாய்ச்சி உழுது நாற்று நடுவினம். ஏன் நாத்து நடுறதெண்டா எல்லாரும் விதைச்சு முடியத்தான் ஒழுங்கையில கைவைக்கலாம் அதுவரைக்கும் உழவு மாடுகொண்டு



போக ஒழுங்கை வேணும். முதலே விதைச்வை ஒருபக்கம் விதையக் கூடப்போட்டுவைப்பினம். பிறகு அதைப்பிடுங்கி இதில நடுறது. இது பொது வழக்கம். ரெண்டு காணிக்கு இடையில போற வயலெண்டா ரெண்டு பேருக்கும் பாதி பாதி. அப்ப சனம் நடந்து போகக் கொள்ள பெரீசா ஒரு நடைவரம்பு போடுவினம் ஊருக்கும் சேதமில்லை. ஒழுங்கையும் விளைஞ்சிது.

இப்ப உழுகிறத்துக்கு மிசின் போகவேணும். அரிவிவெட்ட மெசின் போகவேணும்.. ஓ... அரிவிவெட்டுற மிசின் போகாது அவரைக் கொண்டே வயல்ல இறக்கினாத்தான் வேலை செய்வார். அவரை ஏத்திக்கொண்டு ஒரு ரைக்ரர் தான் போகோணும். ரோட்டும் தாராளமான இடவசதி இருக்கோணும். வயலுக்க உள்ள ஒழுங்கையத் திருத்த வேணும் எண்டா.. மாகாண சபையக்கேட்டுச் சொல்லுகிறம் எண்டு நகர பிரதேச அதிகாரியள் சொல்லுகினம். உள்ளுக்கயும் முன்னுக்கா நிலம் வச்சிருக்கிற கமக்காறன் என்னத்துக்கு ஒழுங்கைய எண்ணுறான். பின்னுக்குள்ளவன் கண்ணீரப்பாய்ச்சித்தான் விளைச்சலை வீட்ட கொண்டுவர வேண்டியிருக்குது. இதைப்போல எத்தின கிராமங்களில இந்தப்பிரச்சினை இருக்குது.

அங்க சுத்தி இஞ்ச சுத்தி நான் இன்னும் சொல்லுறன். கிளிநொச்சியின்ர நகர வீதிகளின்ர கவர்ச்சி கண்ணைப்பறிக்குது. ஆனா ஒரு அம்பது மீட்டர் ஒழுங்கையளுக்க. நா...நகர ஒழுங்கையளத்தான் சொல்லுறன். இறங்கினா... இந்த மழைநேரம் சில ஒழுங்கையளுக்கு போட்டிலதான் போகலாம். சில ஒழுங்கயள மக்கள் கைவிட்டிட்டு வளவுகளுக்கால பயணிக்கிறதாயும் கேள்வி... மெய்யே ஒரு சின்ன சந்தேகம் இல்ல கேள்விப்பட்டதுதான். இஞ்ச வா கதை சொல்ல... காதைக் கொண்டா... வடமாகாணசபை அபிவிருத்திக்கு வந்த காசு கனக்க திரும்பி போகப்போகுதாமே.

அபிவிருத்தியக் கணக்கில எடுக்கயில்லயா, இல்ல கவனிக்கவில்லையா? கவனம்இங்கில்லையா? ஒரு பேச்சுக்குத்தான் சொல்லுறன். எங்கட பக்கம் நகர சபைதான் அதுக்க ஒரு வீதியுந்தான் சரியில்ல செருப்பைக் கையில பிடிச்சுக்கொண்டு பிரதான வீதிக்கு வந்து கான்தண்ணியில காலைக் கழுவிப்போட்டு அதுக்குப் பிறகு செருப்பு போட்டுக்கொண்டுதான் நடக்கோணும். கடவுளே ஒரு மோட்டச்சயிக்கில் ஓடாது. ஏதோ வேலையில்லாத மாதிரிகாசை வச்சுக் கொண்டிருந்திச்சினமோ?

ரெண்டாயிரத்து பதின்மூண்டாம் ஆண்டில வந்து மக்களத் திரட்டி ஒரு கூட்டம் போட்டு உங்களுக்கு என்ன தேவை எண்டத ஒவ்வொருவரா எழுதி போட்டில ஒட்டச்சொல்லி... அதில எதுக்கு முதலிடம் கொடுக்கிறதெண்டு மக்கள வாக்களிக்கச் சொல்லி வாக்குசீட்டுக் கொடுத்து, தேர்ந்தெடுத்த வேலையள்ள, இந்தா ரெண்டாயிரத்துப் பதினாறும் வந்திட்டுது, இன்னும் கைவைக்கேல்ல. வரியெல்லாம் ஒழுங்கா கட்டுற சனந்தான்.

சனம் என்னெண்டா கிராமிய மட்டத்தில கோரிக்கைய வைச்சு கிராமச்சங்க நிர்வாகத்தின்ர வாயைப் பாத்துக் கொண்டிருக்குதுகள். கிராமச்சங்க நிர்வாகம் நகர பிரதேசசபை நிர்வாகங்களிட்ட மண்டியிட வேண்டியிருக்கு. அவையளும் அங்கால மாகாண்சபையக் கேக்க வேண்டியிருக்கு. மாகாண சபை என்னண்டா... வருசத்துக்கொரு உறுப்பினருக்கு பதவியப் பங்கு போடுறதில மும்முரமாயிருக்கு.

போன வரியம் பொன்னையா விட்ட சொன்ன பிரச்சினைய இந்த வரியம் சின்னையாவிட்டயும் சொல்ல வேணும். ஒரு உறுப்பினருக்கு ஐந்து வருசமாவது முயன்றால்தால் தன்ர பிரதேச மக்கள இனங்காண ஏலும். ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏலும். இந்த ஒரு வருச பதவியாளர்களுக்கு கொஞ்ச வேலையும் செய்ய முடியுமா எண்டது சந்தேகமே... பின்ன இவரிட்டப்போய் ரோட்டப்பத்திக்கேட்டா...

“ஐயோ அவ்வளவுக்கு என்ர நிதி ஒதுக்கீடு இல்லைப்பாருங்கோ நான் முழு உறுப்பினரா வந்தா கட்டாயம் செய்வன். எல்லாம் உங்கட கையிலதான் இருக்கு” எண்டிட்டார். அவரென்ன செய்ய? போன வரியம் இவருக்கு முன்னால இருந்தவர் ராஜிநாமா செய்து இவருக்கு விட்டபதவி இவர் இந்த வரியத்தோட மற்றாளுக்கு விடோணும். என்ன வேதனையான வேலை பாருங்கோ... சும்மா சொல்லக் கூடாது. ஏதோ வாற சம்பளத்தை எல்லாரும் கொஞ்சம் கொஞ்சம் வாங்குறது நல்ல பழக்கந்தானே... எட நாசமாப் போவாரே சனத்தின்ர அபிவிருத்திக்கு வந்ததையும் நேரகாலத்துக்கு சிலவழிச்சிருந்தா...என்ன?

“பிரதேச சபையளுக்கு பத்து லச்சம் வரும். அதை அவை சிலவழிச்சு முடிய அடுத்த பத்து லச்சம் வரும். நீங்க போய் அவையட்டையும் கேட்டுப் பாருங்கவன் எண்டுறாராப்பா? நாங்கள் வந்தா சனத்துக்கு என்ன சொல்லுறது” எண்ட கவலை ஒரு அடிமட்டக் கிராமச்சங்கத் தலைவருக்கு..

வீதி வேலை செய்யிற விதமும் ஒண்டிருக்கு இந்த மழை துவங்கினதுக்குப்பிறகு பாத்தா பார வாகனங்களும் உழவுயந்திரமும் ஓடியோடி தெருவெங்கும் குண்டும் குழியுமா பெரிய பெரிய பள்ளங்கள்.

ஒரு நகரக்காறன் சொன்னானாம் “வெளிநாடுகள்ள என்ன சுத்தமப்பா. சுக், ரோட்டில சோறு போட்டுத் தின்னலாம்” எண்டு. அதுக்கு நம்ம ஊரவன் சொன்னானாம் ,

“அட போப்பா எங்கட ஊர் ரோட்டில் சொதிவிட்டே தின்னலாம் அப்பிடி குண்டும் குழியும்...” எண்டு

இந்தமாதிரிப்பள்ள ரோட்டை ஒப்பந்தத்தில எடுக்கிறவை முதலிருந்த பள்ளத்துக்க, பக்கத்து கானுக்குள்ள உள்ள ஊர் மண்ணை போட்டு நிரவிவிடுவினம். பிறகு அதை முடி கிரவலைப் போட்டு நிரப்பி பழுவேத்தி மட்டப்படுத்துவினம். பெரிய மழை வந்திட்டுதெண்டா ரோட்டுக்கு இரண்டு கரையிலும் தண்ணி நிக்கிற இடங்கள்ள கனக்க பெய்த மழைத்தண்ணி அருகா உள்ள இடமெல்லாம் ஊறும். பள்ளத்துக்க போட்ட ஊர் மண்ணும் கொதகொதக்கும் இப்ப அதுக்குமேல பார வாகனம் ஏறினா பிதுங்கிப்போகுமோ இல்லையோ.. பிதுங்கிப்போகும். அப்ப ‘பழையகுருடி கதவைத்திறவடி’ எண்டு அந்தப்பள்ளம் பள்ளமாவே போகும் இப்பிடிப்பள்ளங்களை அதாவது தொடர் பள்ளங்களை எல்லா ஊரிலும் காணலாம். ம்.. அதென்ன பழைய குருடியோ உது தெரியாதே.

‘ஒருகாலத்தில ஒரு சிவபக்தர் இருந்தார். பணக்காறர் பாடிப்பாடி ஊஞூராச்சுத்துறவர் தான தர்மம் செய்து செய்தே சொத்துகளைத் துலைச்சிட்டு நடோடியா சாமியாராத் திரிஞ்சார் போற வழியில காட்டோரமா ஒரு குடில் சரி எப்பன் தங்கிப் போவம் எண்டு போனார். பாத்தா அந்த வீட்டில நல்ல அழகான பொம்பளை ஆனா குருடி. இவரை உபசரிச்சு உணவு குடுத்தாள். இவரும் மகிழ்ச்சியில இவளுக்கு பார்வை வரவேணும். செல்வம் பெருக வேணும். எண்டு வரங்குடுக்க, அப்பிடியே ஆயிற்று.

(தொடர்ச்சி 23இல்......)

தமிழ்க்கவி

# ஊர்மிளா தேவி– உமாமகேஸ்வரன் கள்ளக்காதல்

ஆரம்பத்தில் ஊர்மிளா– உமா மகேஸ்வரன் பற்றி விடுதலைப் புலிகளின் உறுப்பினர் கூறிய அந்தச் செய்தியை பிரபாகரன் நம்பவில்லை.

ஊர்மிளா கந்தையா என்பவர் கணவரை விவாகரத்துச் செய்த ஒரு இளம்பெண். இந்த ஊர்மிளா கொழும்பில் மூக்குக்கண்ணாடி விற்கும் கடை ஒன்றில் விற்பனையாளராக கடமையாற்றினார்.

அதே நேரத்தில் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொழும்புக் கிளையில் முக்கிய உறுப்பினராக இருந்தார். ஊர்மிளா உமாமகேஸ்வரனின் உறவுக்காரப் பெண். உமாமகேஸ்வரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தலைவரான பிற்பாடு ஊர்மிளாவையும் ஒரு விடுதலைப் புலி உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டார்.

முதன்முதலாக தமிழீழ விடுதலைப் புலிகள் பல கொலைகளையும், கொள்ளைகளையும் உரிமைகோர அன்று எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் தட்டச்சில் தபால் அடித்துக் கொடுத்தவர் இந்த ஊர்மிளா தான். இவரைக் கந்தையா ஊர்மிளாதேவி என்று அழைப்பர்.

ஆரம்பத்தில் உமாமகேஸ்வரன் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் கொழும்புக் கிளைச் செயலாளராக இருந்தார். அவரைப் பிரபாகரனே தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினராக்கி, தலைவர் பதவியையும் வழங்கினார். அவ்வாறு தலைவர் பதவியை வழங்கிய போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடப்பேன் என்று உமாமகேஸ்வரன் சத்தியம் செய்தார்.

அதன்படி, ‘குடும்ப வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டேன். பெண்களுடன் உடலுறவுகளில் ஈடுபடமாட்டேன். மது மற்றும் புகைப் பிடித்தல் போன்ற பழக்கங்களைச் செய்யமாட்டேன். தமிழீழ விடுதலைப் புலிகளை விட்டு விலகினால், அதற்கு எதிரான போட்டி இயக்கங்களை உருவாக்கமாட்டேன்.’ இவ்வாறாக தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட திட்டங்களை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுதான் தலைவர் பதவியை உமாமகேஸ்வரன் ஏற்றார்.

பிரபாகரனிலும் பார்க்க பத்து வயது மூத்தவர் உமாமகேஸ்வரன். புரட்சி இயக்கங்கள் பற்றிய நிறைய அறிவு உடையவராகவும், தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசவும், திறம்பட எழுதும் ஆற்றலும் உடையவராக இருந்தார்.

அந்தக் காலத்தில் அழகியான ஊர்மிளாதேவியுடன் உமாகேஸ்வரன் உடலுறவு கொள்கின்றார் என்ற புகாரை பிரபாகரன் நம்பியதுடன், உமாமகேஸ்வரனைப் பார்த்து, உடனடியாக இயக்கத்தை விட்டு விலகுமாறு கேட்டுக்கொண்டார். “நீர் தான் இந்த இயக்கத்தின் தலைவர். தலைவரான நீரே சட்டதிட்டங்களை மீறினால், மற்ற யார் சட்ட திட்டங்களை மதித்து அடங்கிப் போவார்கள்? நீர் இந்த இயக்கத்தை அழிப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. உடனடியாக இந்த இயக்கத்தை விட்டுச் செல்லவும்,” என்று பிரபாகரன் உமாமகேஸ்வரனுக்குக் கூறினார்.

பிரபாகரனின் இந்தக் குற்றச்சாட்டை உமாமகேஸ்வரன் மறுத்தார். அதையடுத்து 1979 ஆம் ஆண்டு பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைத்துவக் குழுவான மத்திய செயற்பாட்டுக் குழுவை சென்னையில் கூட்டினர். அக்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மற்றும் பிற ஆயுதம் தாங்கிய குழுக்களையும் உடனடியாக அழிக்குமாறு, அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவருடைய மருமகனான இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் வீரதுங்காவுக்கு உத்தரவிட்டார்.

அதையடுத்து பிரிகேடியர் வீரதுங்க தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளையும், பிற போராளிக் குழுக்களையும் பிடிக்க, தேடுதல் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டார். எனவே, யாழ்ப்பாணம் மற்றும் வட பகுதியில் நிலைமைகள் மோசமாக இருந்த காரணத்தினால், பிரபாகரன், உமா மகேஸ்வரன் உட்பட தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர்கள் இலங்கையை விட்டு கடல் மார்க்கமாக வள்ளத்தில் தமிழ் நாட்டிற்கு சென்றனர்.

ஊர்மிளாதேவி, உமா கள்ளக் காதல் சம்பந்தமாக ஆராய்வதற்கு பிரபாகரன் சென்னையில் வைத்து மத்தியசெயற்குழு கூட்டத்தைக் கூட்டினார். அக் கூட்டத்தின் இறுதியில் உமா மகேஸ்வரனுக்கு இரண்டு நிபந்தனைகள் அடங்கிய தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒன்று ஊர்மிளாவைத் திருமணம் செய்வது. இன்றேல், தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வது.

அந்த இரண்டு நிபந்தனைகளையும் ஏற்க உமாமகேஸ்வரன் மறுத்துவிட்டார்.

அதையடுத்து உமா மகேஸ்வரனை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. உமா மகேஸ்வரனை நீக்கும் தீர்மானத்திற்கு நாகராஜா, பரா, ஐயர் ஆகியோருடன் வேறும் சில மத்திய குழு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

“தலைவர் என்றால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்,” என்ற பிரபாகரனின் நிலைப்பாட்டை அவர்கள் ஆதரித்தனர்.



— அரச கேசரி —

“ஏதேனும் துளியளவு சந்தேகம் வந்தால்கூட, தலைவர் என்றிருப்பவர அப்பதவியை உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும்,” என்று நாகராஜா தனது கருத்தைக் கூறினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் உமா மகேஸ்வரன் தனது பதவியை இராஜினாமா செய்ய மறுத்துவிட்டார். அது இயக்கத்தினுள் வாதப், பிரதிவாதங்களை உண்டாக்கிற்று.

அக்காலத்தில், லண்டனிலிருந்த இயக்க ஆதரவாளர்கள் உமா மகேஸ்வரனுக்கு ஆதரவாகவும், எதிராகவுமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள். உமா மகேஸ்வரன், ஈழ இலட்சியத்திற்கு தகுதியற்றவர் என அவர்களால் பலர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்கள்.

“ஒழுங்குமுறை இல்லாத ஒரு தலைவனால் ஒரு போராட்டத்திற்கு மக்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு, வழிநடாத்த முடியாது,” என்றார்கள்.

அப்பொழுது, தமிழீழ விடுதலைப் புலிகளின் லண்டன் பிரதிநிதியாக இருந்த கிருஸ்ணன் இந்தப் பிரச்சினைகளை எவ்வாறாவது தீர்த்து வைக்கவேண்டும் என எண்ணினார். அவருடன் லண்டனில் இணைந்து செயற்பட்ட பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த ஆர்.வி.இராமச்சந்திரனை (அன்ரன் ராஜா என்று அழைக்கப்பட்டவரை) அனுப்பி வைக்கத் திட்டமிட்டார்.

அக்காலத்தில்தான் அன்ரன் ராஜா லண்டனிலுள்ள மூன்றாவது உலக நாடுகளின் புரட்சிகர இயக்கங்களின் காரியாலங்களுக்குச் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும், அவர்களுடைய தமிழீழக் கொள்கைகள் பற்றியும் விளக்கிக் கூறிக்கொண்டிருந்தார். அந்தச் சந்திப்புகளில் எல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவராக உமாமகேஸ்வரன் தான் உள்ளார் என மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த புரட்சிகர இயக்கங்களுக்கு எல்லாம் கூறி வந்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் தான் அன்ரன் ராஜா உதவியை கிருஸ்ணன் நாடினார். அதற்கு பதிலளித்த அன்ரன் ராஜா, “நான் இப்பொழுதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கங்களுக்கு உமாமகேஸ்வரன் தான் தலைவர் என்று எல்லா மூன்றாம் உலகத்தைச் சேர்ந்த எல்லாப் புரட்சிகர இயக்கங்களுக்கும் கூறினேன். ஆனால், நீங்கள் இப்பொழுது அவர் தலைவர் இல்லை. பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். காரணம், உமாமகேஸ்வரன் ஒரு பெண்ணுடன் பாலியல் கள்ளத் தொடர்பு கொண்டுள்ளதே என்று கூறுவதால் எந்தப் பயனும் இல்லை,” என்றார்.

அதேசமயம் சென்னைக்கு வந்த அன்ரன் ராஜா பிரபாகரனைச் சந்தித்து, “உமாமகேஸ்வரன், ஊர்மிளாதேவி விவகாரம் பெரிய விவகாரமா?” என்று கேட்டார்.

“நீங்கள் லண்டனில் வசிப்பவர். உங்களுக்கு அது பெரிய விடயமல்ல. ஆனால் எமது சமுதாயத்தின் மத்தியில் இது ஒரு பெரிய பிரச்சினை. அமைப்புக்குள் இவ்வாறான நிலைமைகள் இருந்தால் எந்தப் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை கற்பழிக்கப்படுவதற்காக இயக்கத்திற்குச் சேர்ப்பார்கள்?” என்று கேட்டார். அதற்கு அன்ரன் ராஜா எவ்வித பதிலும் கூறாமல் லண்டன் புறப்பட்டுச் சென்றார்.

இதற்கிடையில் பிரச்சினைக்கு ஒருவித தீர்வு காணவேண்டும் என்பதற்காக நடவடிக்கைகளைக் கிருஸ்ணன் எடுக்கத் தொடங்கினார்.

அன்றைய காலத்தில், சீ.என்.என் தொலைக்காட்சிக்கு இந்திய பொறுப்பாளராக இருந்த அனுரா பிரதாப்பு முதன்முதலில் 1983 ஆம் ஆண்டு பிரபாகரனைப் பேட்டியெடுத்தார். அந்தப் பேட்டியே பிரபாகரன் கொடுத்த முதல் பத்திரிகைப் பேட்டியாகும்.

அந்தப் பேட்டியில்தான், தமிழீழ விடுதலை புலிகளின் கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள் பற்றி விரிவாகப் பேட்டி கொடுத்திருந்தார். அந்த பேட்டியில் குறிப்பிடுகின்றபொழுது “ஓர் இயக்கத்தின் தலைவர் எப்பொழுதுமே அந்த இயக்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடப்பவராக இருக்கவேண்டும். எப்பொழுது தலைவர் சட்ட திட்டங்களை மீறி செயற்படுகின்றாரோ, அப்பொழுது அவ் இயக்கத்திற்குள் குழப்பம் ஏற்படும். அவ்வமைப்பு அழிவையும் எட்டும்,” எனக் கூறினார்.

மேலும், அனுரா பிரதாப்பிற்கு பேட்டி அளிக்கையில், “இந்த விடயம் உமாமகேஸ்வரனுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு இடையிலுள்ள முக்கியமான பிரச்சினை. எனக்கும் இதில் எந்தவித பங்கும் இல்லை. இந்த பிரச்சினைதொடங்கியதற்கு உமா மகேஸ்வரன் தான்காரணம். உமா மகேஸ்வரன் சட்ட திட்டங்களை மீறினார். எனவே, இயக்கம் அவர் மீதுஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, அவரை பதவி விலக்கிற்று. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்ப கர்த்தா என்ற முறையிலும், உமாமகேஸ்வரனுக்கு தலைவர் பதவியை வழங்கியவன் என்ற முறையிலும், அவரை இயக்கத்தின் மத்திய குழு பதவி விலக்கிய பொழுது, அந்த முடிவை ஏற்கும் நிலையில் நான் உள்ளேன்,” என்று பிரபாகரன் கூறினார்.

அப்பொழுதுதான் கிருஸ்ணன் இப்பிரச்சினையை எப்படியாவது முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அதற்குரிய நடவடிக்கையில் இறங்கினார்.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு, அன்று லண்டனில் மாக்ஷீய சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கம் என்று அழைக்கப்பட்ட ஸ்ரானிஸ்சிலோசின் உதவியை நாடுவது என்று முடிவு செய்தார். இதையடுத்து அன்ரன் பாலசிங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் காலடி எடுத்து வைத்தார்.

தொடரும்

# லங்கா ராணி


*(கடந்தவார தொடர்ச்சி.....)*

“இதெல்லாம் பழைய கதைகள்” இந்த வளாக மாணவன் கூறினான்.

“இவர்கள் இவற்றையெல்லாம் உணர்ந்து திருந்திக் கொண்டிருக்கலாம் வரவேற்கின்றோம். உலகப் பாட்டாளிகளின் புரட்சி என்பதெல்லாம் உயரந்த எண்ணங்கள். உலகம் முழுவதும் சமதர்ம நாடுகளாக மலரவேண்டுமென்ற நியதியை இது குறிக்கின்றது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படவேண்டுமென்பதையே இது குறிக்கின்றது. அத்தோடு இதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இது சோறுபோடாது. மற்றது ஆளும் வர்க்கத்தினர் சிங்களப் பாட்டாளிகளையும், தமிழ்ப் பாட்டாளிகளையும், விவசாயிகளையும் ஒன்றுசேர விடாமல் வைத்திருப்பதற்காக இனப்பிரச்சினையைக் கிளப்பி விட்டுக்கொண்டிருக்கின்றனர். சரி, அதற்கு நாங்கள் ஒன்றுபடவேண்டும், ஒன்றுபடவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்தால் அந்தச் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுப் பொறியில் விழுந்தவர்களாகத்தான் இருப்போம். சரி, ஒன்றாகப் போனாலும் உண்மையிலேயே அந்தப் புரட்சி வெற்றி வெற்றி பெற்றாலும் இனப்பிரச்சினை சுலபமாக தீர்ந்துவிடுமா என்பது சந்தேகம்தான். இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்கின்ற அவர்களுடைய ஆசை வரவேற்கத்தக்கதே. அவற்றை வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுக்காகச் சொல்கிறார்களோ, தங்களுடைய கிளர்ச்சியின் காரணமாகச் சொல்கிறார்களோஅல்லது நாம் ஒரு வேறு இனம் சரித்திர, சமய, மொழி, கலாச்சார, புவியியல் ரீதியாக வேறானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டுதான் சொல்கிறார்களோ தெரியாது. எங்கள் கால்களில் முதலில் சரியாக நிற்கவேண்டும். பின்புதான் நாம் யாரை அணைத்துக் கொள்ளவேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம். ஏற்றுக்கொள்கிறீரா? இப்படி எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன” என்றான் அந்த இளைஞன். வளாக மாணவன் தனது சந்தேகங்கள் தீர்ந்தது போல தலை அசைத்தான்.

இலங்கையில் 1971 ஏப்பிரல் மாதத்தில் ஒரு இளைஞர் கிளர்ச்சி ஏற்பட்டது. இந்தக் கிளர்ச்சியின் அடிப்படை, இலங்கைப் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் கொன்று இலங்கையின் ஆட்சியைப் பிடிப்பதுதான். வெளிநாடுகளின் உதவியுடன் இந்தக் கிளர்ச்சியை அரசு அடக்கிவிட்டது. பதினாறாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்கள் வைத்திருந்த ஆயுதங்களெல்லாம் வெறும் சாதாரண கைத்துப்பாக்கிகளும் உள்ளூரில் தயார் செய்யப்பட்ட கைக்குண்டுகளும்தான்.

இளைஞனது அந்தக் கேள்விக்கு மறுமொழி கூறிவிட்டு இன்றையநிலை உருவாவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை ஆராயமுற்பட்டனர். ஒருவன் தனிச்சிங்களச் சட்டம்தான் இன்றைய பிரச்சினைகளுக்கு காரணம் என்றும், இன்னொருவன் சிங்களக்குடியேற்றம் என்றும்,இளைஞர்களுக்கு உயர்கல்வி மறுப்புத்தான் என்றும் தெரிவித்தனர்.இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறினர்.




“நாங்கள் ஒருதேசிய இனம் என்று எங்களை அழைக்கின்றோம். இதன் பொருள் என்ன?’ என்று வேட்டியுடன் இருந்த இளைஞன் மற்றவர்களை வினவினான்.

அதற்கு வளாக மாணவனொருவன் ‘ஒரு பொதுமையான கலாச்சாரமாக பிரதிபலிக்கப்படும் பாரம்பரியங்களையும் மொழியையும் பூமியையும் பொருளாதார வாழ்க்கை முறைகளையும் கொண்ட மக்களின் தொகுப்பே ஒரு இனம்’ என்று கூறினான். தான் இதை எங்கோ படித்ததாகவும் இதை யார் எழுதியது என்று தனக்கு ஞாபகமில்லை என கூறினான். இன்னுமொருவன் இதன்படி பார்க்கப்போனால் நாம் ஒரு தேசிய இனம் இல்லையென்றும் நிலப்பரப்பால் தமிழர்கள் இலங்கை முழுவதும் இருக்கின்றார்கள் என்றும் ஒன்றுபடாமலும் பாரம்பரியங்களால் வேறுபட்டும் மொழிவகையில் கூட இதுவரை காலமும் ஆங்கிலத்தையே விரும்பி பேசிவருகின்றார்கள் எனவும் கூறினான். இதனைப்பலர் மறுத்தனர். என்ன என்னவாக இருந்தாலும் தமிழர்கள் தமிழர்கள்தான் என்றனர்.

கடைசியில் இளைஞன் குறுக்கிட்டு சகல விதத்திலும் எமது இனத்திற்கான குணாம் சங்களை நிலை நிறுத்துவதற்கு தடங்கல்கள் இருப்பதால்தான் நாங்கள் போராடவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம் இவ்வாறு ஒற்றுமைப்பாட்டுக்கு பாதகமாக வெளிநிலைத் தாக்கங்களை அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினான். நானூறு ஆண்டுகள் அன்னியர் இருந்ததனால் அவர்கள் தமிழ் இனத்தின் நலன்களை என்றும் மனதில் கொண்டிருக்கவில்லை என்பதையும் அதனால் இனத்தின் இலட்சணங்கள் சிதைக்கப்பட்டுள்ளன என்றும் எங்கள் எதிரிகளை நாங்கள் அறிந்து எங்களை பாதுகாத்துக்கொள்ளும் சக்தியை முற்றாக இழந்துபோய் தன் மனிதராகவும் குடும்பம் உறவினர் என்ற நிலையிலும் தப்பித்துக்கொள்வதை மாத்திரம் நோக்கமாக கொண்டு செயற்படும் அந்நியர் ஏற்படுத்திச்சென்ற நிலையே தொடர்ந்து நீடிக்கிறது என்பதையும் அந்தப்போக்கை மாற்றி எங்கள் இனத்திற்கான இலட்சணங்களை நிறைவு படுத்த வேண்டும் என்பதையும் குறிபபிட்டான். மற்றவர்கள் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தனர்.

‘அது சரி, அந்நியன் இங்கிருந்து போய்விட்டான். அதற்காக நாம் ஏன் சிங்களவருடன் மோதவேண்டும்? என்று வளாக மாணவனொருவன் கேட்டான்.


அந்நியர் சட்டத்தின் அரசு,திரூல் ஒவ் லோ, என்ற போர்வையில் சட்டங்களை இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்திக் கொண்டதால் தங்கள் அடக்குமுறைகளைப் பயன்படுத்தியது போல, ஒரே நாட்டுக்குத் தேவையான உயர்ந்த இலட்சியங்களையோ கோட்பாடுகளையோ பொதுமைப் பாட்டையோ முன்வைக்காமல் ஒரே நாடு என்ற போர்வையில் பெரும்பான்மையினரின் பலமே சட்டங்களே மாறும் நிலையால் தொடர்ந்து அடக்குமுறை நீடிப்பதே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம் என்று சொன்னான். தொடர்ந்து கூறுகையில் ஆங்கிலேயர் விட்டுச்சென்றவற்றின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு இவர்கள் தங்களை அறியாமலே ஆங்கிலேயர்களைப்போல் நடந்து கொள்வதனால் தமிழர்கள் தங்கள் நாட்டு சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒரு இனமாக இருப்பதனால் இந்த உரிமையை அதாவது பிரிந்துபோய் தனியான நாடு காணும் உரிமையை சுயநிர்ணய உரிமை, ‘தி ரைட் ருசெல்வ்டிற்றேமினேசன்’’ எங்கள் போராட்டத்திற்கு நாங்கள் பிரயோகிப்பதாக அமையும். இதில் எவ்வாறான தவறுமில்லை என்று கூறினான்.

இலங்கை ஒரே நாடாகத் தொடர்ந்து இருக்க இந்நாட்டு அரசு இரண்டு இனங்களுக்கு மிடையில் ஏற்படும் உடன்பாடாக அமைய வேண்டுமேயொழிய ஒரு நாடு ஒருமொழி வேண்டுமென்ற போர்வையில் ஒரு இனம் தமது மொழியையும் கலாச்சாரத்தையும் திணித்து இன்னொரு இனத்தை சிதைத்து அழிக்க முற்படுவதாக இருக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டான். அது ஆங்கிலேயரை விட மோசமாக நடந்துகொள்வதுபோல் அமையும் என்றும் கூறினான்.

அங்கிருந்த நீர்கொழும்பு இளைஞன் சிங்களக் கடையில் எடுபிடி வேலை பார்த்துவந்தவன். இவற்றையெல்லாம் தன்னால் விளங்க முடியவில்லை என்பதைக் கூறவிரும்பாமல் “இதுகளெல்லாம் இவங்களுக்கு எங்கே விளங்கப்போகுது நாங்கள் எங்கட பாட்டில போறதுதான் புத்தி” எனக்குறிப்பிட்டதும் மற்றவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

பின்தளங்களில் உணவுபரிமாறிமுடிந்த பின் தொண்டர்கள் இந்தத்தளத்திற்கு வந்தனர். படிகளில் நின்றுகொண்டே சாம்பார் தட்டுக்களை கீழ்தளத்திற்கு கொடுத்தனர். பேசிக்கொண்டிருந்த இளைஞர்கள் தட்டுக்களைப் பெற்றுக்கொண்டு சாப்பிடத் தொடங்கினர். விவாதம் தொடர்ந்தது.

மேல் தளத்தில் சரவணனும் நண்பர்களும் வேலையை முடித்துவிட்டிருந்தனர். வேறும் பலரும் உணவை முடித்த பின் மேல் தளத்திற்கு வந்துவிட்டிருந்தனர். டாக்டர் நற்குணம் “வினோல்” என்ற கிருமிநாசினியை கழி விடங்களுக்குத் தெளித்தார். மழைக் கோலம் போட்டு வானத்தை மூடி இருளாக இருந்தது. அந்த வாளிகள் சரியாக வைக்கப்பட்டருக்கின்றனவா என்று சரவணன் மீண்டுமொரு தடவை எட்டிப் பார்த்துச் சிலவற்றை உள்ளே தள்ளிவிட்டான்.




சரவணன் யாழ்ப்பாணக் கல்லூரி ஒன்றில் படித்து வந்தவன். இவனுடைய தகப்பன் புகையிலைத்தோட்டத்தை குத்தகை எடுத்து செய்து வந்தார். மூன்று தங்கைமார் இருக்கின்றனர். “தரப்படுத்தல்” திட்டம் வந்தது. கடினமான நிலையே வீட்டில் தொடர்ந்து நீடித்தது. இனிமேல் படித்தும் பிரயோசனம் இல்லையென்று தெரிந்ததும் இவனுக்குப் படிப்பு ஓடவில்லை. மாணவர் பேரவையில் சேர்ந்தான். கூட்டங்களுக்குப்போவான். ஊர்வலங்களில் முன்னுக்கு நிற்பான். மாணவர்கள் துரோகிகள் பட்டியல் தயாரிப்பதை பொழுதுபோக்காக செய்வார்கள். இவனும் இதில ஈடுபடுவான். துரோகிகள் பட்டியலில் சிங்களவர் பெயர் இடம்பெற முடியாது என்ற கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். சிவகுமாரன் இறக்கிறான். மேலும் கோபமடைகின்றான்.

**இலங்கையில் 1971 ஏப்பிரல் மாதத்தில் ஒரு இளைஞர் கிளர்ச்சி ஏற்பட்டது. இந்தக் கிளர்ச்சியின் அடிப்படை, இலங்கைப் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் கொன்று இலங்கையின் ஆட்சி யைப் பிடிப்பதுதான். வெளிநாடுக ளின் உதவியுடன் இந்தக் கிளர்ச் சியை அரசு அடக்கிவிட்டது. பதினாறாயிரம் சிங்கள இளைஞர் கள் கொல்லப்பட்டனர். பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்கள் வைத்திருந்த ஆயுதங்களெல்லாம் வெறும் சாதாரண கைத்துப்பாக் கிகளும் உள்ளூரில் தயார் செய் யப்பட்ட கைக்குண்டுகளும்தான்.**

கைத்துப்பாக்கிகள் தேடி அலைகின்றான். கிடைக்கின்றது. இப்படி இருக்கும் போதுதான் நண்பன் ஒருவன் வந்து வரதராஜப்பெருமாள் கோவிலுக்கு துரையப்பாவை பார்க்க வரும்படி அழைக்கின்றான்.

இவனுக்கு கார் ஓட்ட அதிகம் தெரியாது. கார் நிப்பாட்டிய பின் சாரதியின் ஆசனத்தில் ஏறி அமரும்படி கூறிக்கொள்கிறார்கள். அதன்படியே எல்லாம் நடக்கிறது. திரும்பி வருகையில் சற்றும் எதிர் பாராதவாறு பொலிஸ் ஜீப் ஒன்று வருகிறது. வேறு வழியில்லை பிரேக் போடுகின்றான். கார் மற்ற பக்கமாகத் திரும்பி வயலுக்குள் பாய்ந்தோடி நிற்கிறது. இளைஞர்கள் நால்வரும் தப்புகின்றனர். அதன்பின் சரவணன் தலைமறைவாகின்றான். கடைசியாக வீடு போயிருந்த போது இவனுக்குப் பணம் தேவைப்பட்டது. வீடு மேய வைத்திருந்த ஐம்பது ரூபாவையும் தாய் கொடுக்க மறுத்துவிட்டாள்.

*(தொடர்ச்சி 19 இல்......)*

# நண்பேண்டா

கும்மிருட்ட ஆள் நடமாட்டமே இல்லை மூச்சு காற்றுக் கூட பாரிய சத்தம் கேட்கும் வேளை நேரமோ இரவு 11 மணி இருக்கும். தூரத்தில் நாய் ஊளையிடும் சத்தம் நெஞ்சை கிலி கொள்ளை செய்யும் நேரம். கள்வர்களும், தீயவர்களும் ஏன் பேய், பிசாசு கூட தங்களது கைவரிசையைக் காட்டும் நேரம்.

பாரதி புரத்தில் கந்தசாமி தெருவில் ஏதோ சத்தம் உற்றுக் கேட்டால், "டேய் மச்சான் சத்தம் போடாம வாங்கடா"

"நீ முதல் வாயப் பொத்திட்டு பேசாமநட..." என குமாரிடம் வினோத் தன் வாயைக் கொடுத்தே ஏச்சு வேண்டிக்கிட்டான். அதைக் கேட்டு குமாரின் பின்னால் வந்த பாலா வாயினுள் சத்தம் வெளிவராமல் சிரித்துக் கொள்கிறான்.

குமரின் கண்களிலும் சரி, வினோத் மற்றும் பாலாவின் கண்களிலும் ஏதோ பெரிய திட்டத்தை நிறைவேற்றுகின்ற வேகம் இருந்தது. அவர்களது காலடி சத்தம் என்பது அமைதியாகவே வந்து கொண்டிருந்தது. நிலா வெளிச்சம் பட குமாரின் கையில் இருந்த கத்தி பளபளக்கிறது. அந்த கத்தியை அவன் விழாது இருக்க அதன் பிடியை கையால் இறுக்கிக் கொள்கிறான்.

மறுபடியும் குமாரைப் பார்த்து வினோத் "டேய், அத செய்யத்தான் வேணுமடா..."

சற்று நின்று வினோத்தைப் பார்த்து குமார் "செய்யத்தான் வேணும். அவன் நமக்கு செஞ்சதுக்கு..." "டேய், அவன் என்னடா பெரிசா செஞ்சான். விடுங்கடா, பயத்திலயே செத்திடப்போறான்,"

"அதுதான் வேணும், அந்த ராஸ்கல் செல்வா நமக்கு பாத்த வேலைக்கு..."

எனபாலா கோபப்பட... அவனது தோளைத் தட்டி குமார் "விடு மச்சான் அவன இன்டக்கி, இந்த கத்தியால...!" இவ்வளவு ஆவேசமா பேசறாங்களே இந்த மூன்று பேருக்கும் செல்வாவிற்கும் என்ன பிரச்சினை. இந்த செல்வா யார்? அறிமுகமாகிய குமார், வினோத், பாலா மூன்று பேரும் செல்வாவோடு படிக்கிற அவனோட நண்பர்கள் தான். செல்வாவை பழிவாங்கும் அளவிற்கு என்ன நடந்திருக்கும்.

பாரதி புரத்தில் வசிப்பவர்கள் தான் மேலே கூறப்பட்ட நான்கு நண்பர்களும். இவர்கள் நால்வரும் கா.பொத உயர்தரம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். செல்வாவிற்கு இரண்டு இல்லங்கள். ஒன்று பழையது. மற்றையது புதியது. புதிய வீட்டிலே குடும்பமாக வசிக்கின்றனர். பழைய வீட்டில் வந்த போவது வழமை. அதனால் நண்பர்களும் நாங்களும் சேர்ந்து செல்வாவின் பழைய வீட்டிலே பரீட்சைக்குப் படிப்பார்கள். அந்த வீட்டின் ஒரு அறையிலே இவர்கள் படிப்பது. அந்த அறையிலே மின்விசிறி ஒன்று, கட்டில் ஒன்று, சுவரில் மணிக்கூடு ஒன்று, மேசையும் நான்கு கதிரைகளும், திகதி கழிக்கும் கலண்டர் என்று பல பொருட்கள் காணப்படும்.

செல்வா, குமார், பாலா மூவரும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வினோத் அப்போது தான் செருப்பைக் கழற்றிவிட்டு புத்தகமும் கையுமாக நெற்றியில் தீருநீற்றுப் பட்டையுடன் வந்து கதிரையில் அமர்ந்தான். வினோத் "மச்சான்... பாகுபலி படம் செம படமாம்டா..."

படித்துக்கொண்டிருந்தவர்கள் வினோத்தைப் பார்க்க, குமார் "நீ படம் பார்த்தியா..."

"இல்லடா குகன் சொன்னான். அவன் அவங்கட மாமாவோட தியேட்டருக்குப் போய் பார்த்தானாம். அதில மன்னர் கால சண்டை எல்லாம் நல்லா இருக்குமாம்டா.


ஒரு கட்டத்துல ஹீரோ சிவலிங்கத்த தோள்ல தூக்கி வச்சிட்டு போவானாம். பார்க்க அப்பிடி இருக்குமாம். சத்தாஜ்ஜும் நடிக்கானாம்டா."

வினோத் படத்தைப்பற்றி சொல்ல பாடப்புத்தகத்தை மூடிவிட்டு வினோத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். குறுக்கிட்ட செல்வா வினோத்திடம் "சத்தியராஜ் வில்லனாடா அந்தப்படத்தல..."

"தெரியல்ல மச்சான். அந்தப்படம் பார்க்கணும் போல இருக்குடா."

"போவம்டா நாளைக்கே போவம். காரைக்குடில இரக்கிற தியேட்டருக்கு போவம். உங்களுக்கு ஓகே வாடா..." என குமார் கேக எல்லோரும் ஓகேடா போவம் என்றார்கள். அதில் செல்வா, "மச்சான் நாளைக்கு காரைக்குடிக்கு போகனும் என்டு அத்தான் சொன்னாருடா. ஏதோ சாமான் வேண்டனுமாம். நாளையண்டைக்கு போவமாடா?"

மற்ற மூவரின் முகங்களும் ஏமாற்றமடைந்தன. அதைக் கவனித்த செல்வா "சொறிடா மச்சான் புரிஞ்சுக்கடா..." செல்வாவைத் தட்டி "ஓகே மச்சான் நாம நாளையண்டைக்கே போவம். போறம், படம் பாக்குறம் கலக்குறம்" என்று கூற படம் பார்க்க போவதையிட்டு உற்சாகம் மேலிட "ஏய்" என சத்தமிட்டு கையில் அடித்துக் கட்டிக் கொள்கின்றனர்.



அடுத்தநாள் காலையில் அத்தானோடு செல்வா காரைக்குடிக்கு செல்கிறான். அங்கு எல்லா வேலைகளும் முடித்த பின்பு நேரம் பார்க்க 12 மணி என கைத்தொலைபேசி நேரம் காட்டியது. செல்வாவின் அத்தான் செல்வாவைப் பார்த்து சாப்பிடப்போவம் வாடா எனக் கூறி ஒரு ஹோட்டலுக்குச் சென்று சாப்பிடுகின்றனர். சாப்பிட்ட பின்னர் படத்துக்குப் போகலாம் எனக் கூறி தியேட்டருக்கு கூட்டிச் செல்கிறார். அவரின் மேல் செல்வா மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததால் ஒன்றும் செல்ல முடியவில்லை. அங்குபோய் படம் தொடங்கிய பின்னரே பாகுபலி படம் என்பதைத் தெரிந்துகொண்டான். நண்பர்களுக்கு துரோகம் செய்கிறேன் என்ற குற்ற உணர்வு இருந்தாலும் படம்பார்க்கும் ஆர்வத்தில் அதை மறக்கிறான்.

அன்று மாலையில் குமார், வினோத், பாலா ஆகிய மூவரும் குமாரின் விட்டின் முன்னே போட்டிருக்கும் தென்னைமரக் குற்றியில் இருந்தபடி கதைக்கின்றனர். இதுதான் அவர்களது அரட்டை அடித்து பொழுது போக்கும் இடம். "டேய், மச்சான் செல்வாட்ட நமக்குத் தெரிந்த மாதிரி காட்டிக்கொள்ளக் கூடாது. அவனுக்கு அப்படி செய்தா...?"

பாலா இவ்வாறு கூறும்போது செல்வா வருகிறான். அதைக் கவனித்த வினோத் "மச்சான் செல்வா வாராண்டா..."

உடனே கதையை மாற்றி வேறுகதை பேசுவதுபோல் கதைத்துக் கொண்டிருக்கின்றனர். செல்வா தான் பாகுபலி படம் பார்த்ததை எக்காரணம் கொண்டும் நண்பர்களுக்குத் தெரியக் கூடாதென்று மனதிற்குள் கூறியவண்ணம் கட்டையில் பாலா தள்ளியிருக்க அவனும் வந்து அமர்கின்றான்.

"என்னடா நாளைக்குப் பாகுபலி படத்துக்குப் போறானேடா..." என குமார் சொல்ல செல்வா படட த் தை மறைத்து "ம்... போகனும்டா, வினோத் சொன்ன அடுத்த நிமிசமே பார்க்கணும் போல இருக்குதடா..." "இண்டைக்கு பார்த்திருக்கலாம் உனக்கு வேலை இல்லாம இருந்திருந்தா..." "சொறிமச்சான்" என்று பாலாவைத் தட்டிக் கொடுக்கிறான் செல்வா.

பின் அரட்டை தொடங்குகிறது. சிறிது நேரத்தின் பின் வினோத் "அந்த பாகுபலி படத்துல ஒரு கட்டத்துல பெரிய சிலை ஒன்றை தூக்கிறவங்க அப்போ... (இடையில் மறந்துவிடுகின்றான் என்றாலும் நண்பர்கள் படம் பார்க்கவில்லை என்பதால் கதைகட்டினாலும் நம்பிவிடுவார்கள் என்றெண்ணி) அப்போ... அந்த சிலையை இழுக்கக்குள்ள விழுந்திடுமாம். அப்போ அத பாகுபலி போய் சிலையைப் பிடிச்சு ரெண்டு கையாலயும் தூக்கி விடுவானாம்.

அது அப்படியல்ல கயிறப்பிடிச்சு இழுக்கிறவன் எண்டு செல்வா சொல்ல எத்தனித்து அமர்ந்து விடுகிறான். தனது கதையை நண்பர்கள் நம்பியதால் மீண்டும் தெரிந்த தெரியாத காட்சிகளை படமாக்கிறான் வினோத்.

'பிறகு வில்லன் எல்லோரையும் அடிச்சுப்போட்டு கடைசியில ஹீரோவும் சாகுறானாம்."

வினோத் சொல்வது பொய் எனத் தெரிந்த செல்வா உண்மைக் கதையைச் சொல்லும் ஆர்வத்தில் செல்வா "இல்ல மச்சான் இவன் சும்மா கதை விடுறான்டா. சிலை விழக்குள்ள அந்த சிலையை கயிற்றைப் பிடிச்சு இழுப்பாண்டா. மற்றையவர்களும் சேர்ந்து இழுக்கிறாடா. கடைசியில பாகுபலி அவங்க அப்பதான் சாகுற, மகன் பாகுபலி இருக்கிறாடா. பாகுபலி ரெண்டு கூட வருமாமடா. இவன்ட கதையை நம்பாத வினோத் இடைப்பட்டு "டேய் நீதான் கதைவிடுற. குகன் சொன்னத தான் சொன்னன். ஏதோ பார்த்தமாதிரி கதைக்கிறா."

ஒருகணம் நிலைமையை மறந்த செல்வா, "ஆமாடா. நான் பாகுபலி படம் பாத்தண்டா..." என்றான். வினோத் திரும்பவும் சிரிப்புடன் "இப்பவாவது நம்புறிங்களாடா இவன் சொல்றத பொய்யெண்டு, இவன் படம் படம் பார்க்கப் போனானாம்.

தன்னை ஏளனம் செய்வதாக நினைத்து செல்வா தான் அத்தானுடன் காரைக்குடிக்கு போய் வேலை முடித்த பின் படம் பார்த்து விட்டு வந்ததாக கூறுகிறான். மற்ற மூவரின் முகம் கறுத்து விடுகிறது.

தேனூர் மைந்தன் கௌசிகன்

(தொடர்ச்சி 23 இல்......)

## சேர்.பொன் இராமநாதன்

# திருமணங்கள், குடும்ப வாழ்க்கை, படித்த இலங்கையருக்கான தேர்தலில் வெற்றி

முதன் முதலாக இராமநாதன் மகளிர் கல்லூரியில் அதிபராக நியமனம் பெற்ற இங்கிலாந்தைச் சேர்ந்த திருமதி. புளோரன்ஸ் பார் எமறி இலங்கைக்கு வரும்போது இங்கிலாந்தில் தனக்கு இருந்த சொத்துக்கள் எல்லவற்றையும் விற்று விட்டு பெட்டி படுக்கையுடன் வந்துசேர்ந்தார்.

அவர் தனது 52 ஆவது வயதில் அதிபர் பதவியை ஏற்றார். இந்துசமய கலாச்சாரத்திற்கு அமைய அந்த இராமநாதன் மகளீர கல்லூரியை நிர்வகித்து வந்தார்.

1916 இல் அவருக்கு மார்பில் கட்டி ஒன்று தோன்றிற்று. அந்தக் கட்டி புற்றுநோய் என அறியப்பட்டது. அந்தக் கட்டியை நீக்குவதற்கு சத்திரச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதற்கிடையில் புற்றுநோய் உடல் முழுவதும் பரவிவிட்டது. அவரது 56ஆவது வயதில் ஏப்ரல் 1917ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள வைத்தியசாலை ஒன்றில் அவர் காலமானார்.

பார் எமறியின் விருப்பத்திற்கு ஏற்ப அவரது ஈமைக்கிரியை இந்து முறைப்படி நடைபெற்று, அவரது பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அவரது அஸ்தியை இந்தியாவிலுள்ள கல்யாணி ஆற்றிற்கு கொண்டு செல்லப்பட்டு இராமநாதனால் கரைக்கப்பட்டது.




இராமநாதன் நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி அவரது 23 ஆவது வயதில் நன்னித்தம்பி முதலியாரின் இரண்டாவது மகளான செல்லாட்சியை 1874 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து திருமணம் செய்தார்.

இவர்களுக்கு மூன்று ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் பிறந்தனர். ஆண் பிள்ளைகள்–இராமநாதன் மகேசன், இராமநாதன் இராஜேந்திரா, இராமநாதன் வாமதேவன். அதேபோல பெண்பிள்ளைகள் – சிவக்கொழுந்து இராமநாதன் – இவர் ‘லொக் இராசநாதனைத் திருமணம் செய்தார். அதேபோல் இரண்டாவது மகளான ருக்மணி இராமநாதன் சோமசுந்தரத்தை திருமணம் செய்து கொண்டார். மூன்றாவது மகளான செல்வி இராமநாதன் தம்பையா முத்துக்குமாரசாமியை திருமணம் செய்து கொண்டார்.

செல்லாச்சி அம்மையார் காலமானதன் பிற்பாடு இராமநாதன் அவர்கள் சொலிசிற்றர் ஜெனரலாக பதவி வகித்த காலத்தில் மீண்டும் ஒரு பெண்மணி அவரது வாழ்கையில் பிரவேசித்தார். மிகவும் நாகரீகமும், கல்வியும், நற்பண்புகளும் நிறைந்த ஆர்.எல்.‘ரிசனே அந்தப் பெண்மணியாகும். இவரது தந்தையார் இங்கிலாந்தைச் சேர்ந்த யோக்சயாரிலுள்ள பிறாட்போட்டைச் சேர்ந்தவர். நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவர் அவுஸ்திரேலியா சென்று, தங்கச் சுரங்கங்கள் வெட்டி தங்கம் தேடும் பணியில் ஈடுபட்டார்.

அந்தக் காலத்தில் செல்வி ‘ரிசன் உண்மையைத் தேடும் பணியில் ஈடுபட்டார். அப்பொழுது அவுஸ்திரேலியாவிலுள்ள பிரம்மஞான சபையில் ஈடுபாடு கொண்டார். அவருடைய ஆத்மஞானம் சம்பந்தப்பட்ட தாகம் அடங்குவதாக இல்லை. அப்பொழுதுதான், இலங்கையில் சமயத்திலும், தத்துவஞானத்திலும் ஈடுபாடுள்ள இராமநாதன் பற்றி தெரிய வந்தது.

அதையடுத்து, இலங்கை வந்து இராமநாதனை குருவாக ஏற்றுக் கொண்டு, அவருக்குப் பணிவிடை செய்யத் தொடங்கினார். அக்காலத்திலே அவருக்கு தமிழ்க் காப்பியங்களில் ஈடுபாடு ஏற்பட்டது. தமிழ் மொழியிலும், சமஸ்கிருதத்திலும் ஆர்வம் காட்டினார். தமிழைத் திறம்பட கற்று தமிழ்க் காப்பியங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

1905 ஆம் ஆண்டு இராமநாதன் அமெரிக்காவிற்கு மதப்பிரசங்கத்திற்குச் சென்ற போது, செல்வி ‘ரிசனையும் அவரது செயலாளராக அழைத்துச் சென்றார்.

அக்காலத்தில், தனது பரபரப்பான பல முகங்களைக் கொண்ட வாழ்க்கைக்கு செல்வி ‘ரிசன் நல்ல உறுதுணையாகவும், நல்ல நண்பனாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டார். அதையடுத்து 1906 ஆம் ஆண்டு, அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து வந்த சமயம் தாரம்இழந்த ஆண்மகனாக இருந்த இராமநாதன் செல்வி ‘ரிசனை இரண்டாவது தடவையாக திருமணம் செய்து, சட்டப்படி அவரைத் தனது மனைவியாக்கிக் கொண்டார்.

அந்தக் காலத்தில் இராமநாதனின் சுக துக்கங்களிலும், அமைதியிலும் தனிப்பட்ட முறையில் பெரிதும் அக்கறை காட்டினார். அவர்கள் இருவருக்கும் சிவஞானசுந்தரி என்ற ஒரே ஒரு மகள் பிறந்தார். பிற்காலத்தில் சிவஞான சுந்தரியை இந்தியாவிலிருந்து வந்த எஸ். நடேசபிள்ளைக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

இந்த நடேசபிள்ளை எவ்வாறு



இராமநாதன் குடும்பத்தில் ஒர் உறுப்பினராக இணைந்து கொண்டார் என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம். இவர் இராமநாதனின் குருவாகிய சுவாமி அருள்பரானந்த தேசிகரின் வம்சாவழியில் தோன்றியவராகும்.

நடேசபிள்ளையை ஒரு சமயம் இராமநாதன் அவர்கள் கொடைக்கானலிலுள்ள வாசஸ்தலத்தில் சந்தித்தார். அப்பொழுதுதான் இளைஞனாக இருந்த நடேசபிள்ளையின் அறிவையும், திறமையையும் பார்த்து இராமநாதன் வியப்படைந்தார். ஒரு முறை இராமநாதன் அவர்கள் நடேசபிள்ளையுடன் நீண்ட சம்பாசணையின் போது, தான் ஒரு பயிற்றப்பட்ட சட்டத்தரணி என்று கூறினார். அதைக் கேட்டவுடன், “சட்டம் என்பது படிக்கப்பட வேண்டியவற்றில் ஒன்று. ஆனால் வழக்காடப்பட அல்ல,” என்று இராமநாதன் கூறினார். மேலும் இராமநாதன் கூறுகையில், “நீ ஏன் சட்டத்தரணியிலும் பார்க்க வேறு ஏதாவது சிறந்த பணியைச் செய்யக் கூடாது?” என்று கேட்டார்.

அந்தக் காலத்தில், இராமநாதன் அவர்கள் கட்டிய ஆண்களுக்கான பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரியின் ஆசிரியர் குழாமில் பணிபுரிய நடேசபிள்ளைக்குச் சந்தர்ப்பம் வழங்கினார். இராமநாதன் அவர்கள் எப்பொழுதும் தமிழ் மொழியில் பேசும் கூட்டங்களுக்கு எல்லாம் நடேசபிள்ளையையும் தனது பக்கத்தில் வைத்துக்கொண்டார்.

நடேசபிள்ளையும் தமிழ் இலக்கியங்களில் பாண்டித்தியம் பெற்றவர். இராமநாதன் மேடைகளில் பேசும் பொழுது ஒரு சில விடயங்களை குறிப்பிடுகையில் மறதியினால் தடுமாறினால் நடேசபிள்ளையிடம் அவர் தொடர்ந்து மேற்கோளை முடிக்குமாறு கேட்டுக்கொள்வார். அப்பொழுதெல்லாம் நடேசபிள்ளை சிறப்பாக இலக்கியம் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய மேற்கோள்களை எல்லாம் கூறிமுடிப்பார்.

நடேசபிள்ளை நீண்டகாலமாக பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராக கடமையாற்றினார்.

அதுமட்டுமன்றி, நடேசபிள்ளை இலங்கை அரசியலிலும் ஈடுபட்டிருந்தார். அவர் இலங்கையின் மேற்சபையின் உறுப்பினராக இருந்தார். அதையடுத்து 1952ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே இலங்கை தமிழரசுக் கட்சியில் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்ட, அன்றைய தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜெ.வி.செல்வநாயகத்தை தேர்தலிலே வென்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

அதையடுத்து, அமைச்சர் பதவி பெற்ற பெருமையும் இவரையே சாரும்.

அதேநேரம் 1910ஆம் ஆண்டளவில் மக்களம் சீர்திருத்தம் ஒன்று 13ஆம் இலக்கச் சட்டமாக அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் சட்டசபை உறுப்பினர்கள் 18 இலிருந்து 21 பேராக உயர்த்தப்பட்டது. அதில் 11 உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள். 10 பேர் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாகும். அந்த உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களில் ஆறு பேர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார்கள். அதில் இருவர் கீழைத்தேய சிங்களவர்கள். இருவர் தமிழர்கள். ஒருவர் கண்டிச் சிங்களவர். மற்றும் ஒருவர் முஸிம் ஆகும். மிகுதி நால்வரும் தெரிவு செய்யப்படுபவர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதில் இருவர் ஐரோப்பியர். ஒருவர் பறங்கியர். மற்றைய ஒருவர் படித்த இலங்கையர் எனத் அறிவிக்கப்பட்டது.

அக்காலத்தில் கல்வி, செல்வம் அடிப்படையிலே இலங்கையில் வாக்குரிமை வழங்கப்பட்டது. நாடு பூராகவும் அப்பொழுது மூவாயிரம் பேரே வாக்குரிமை பெற்றவர்களாகும். குறிப்பாகச் சொல்வதாயின் அந்தப் படித்த இலங்கையர் தேர்தலுக்கு 2938 பெயர்களே நாடு பூராகவும் வாக்களிக்கும் தகுதி பெற்றவர்களாக இருந்தார்கள்.

அத்துடன் வருமானங்களைக் கண்காணிக்கவென நிதி சம்பந்தப்பட்ட ஒரு குழு உருவாக்கப்பட்டது. இதில் காலணிச் செயலாளர், காலணித் தனஅதிகாரி, மற்றும் வருமானக் கட்டுப்பாட்டாளர். அத்துடன் உத்தியோகப்பற்றற்ற தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் அடங்குவர்.

தேசாதிபதி சேர்.ஹென்றி மக்களம் இந்த மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

ஆரம்பத்தில் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் படித்த இலங்கையர் தேர்தலில் போட்டியிட பல முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. அதில் குறிப்பாக அன்றைய தேசாதிபதி சேர். ஹென்றிக் மக்களம் இராமநாதனின் நியமனத்திற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். மேலும், இராமநாதன் தேசாதிபதி என்ற முறையில் தன்னை மதிக்கவில்லை. தன்னை வந்து சந்திக்கவில்லை என்று எல்லாம் குற்றங்கள் சுமத்தினார்.

அதுமட்டுமன்றி கிறிஸ்தவர்கள் பலரும் இராமநாதன் தேர்தலில் போட்டியிட எதிர்ப்புத் தெரிவித்தார்கள். த கத்தோலிக் காடியன் (The Catholic Guardian) தா மோர்னிங் ஸ்ரார் (The Morning Star) ஆகிய பத்திரிகைகள் மத அடிப்படையில் இராமநாதன் நியமனத்தை எதிரத்தன. யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கிறிஸ்தவர்களான ஜெ.எம்.ஹென்ஸ்மன் (J.M.Hensman), ரி.ஹொமர் வன்னியசிங்கம் (T.Homer Vaniasing ham), டபிள்யு.டி. நைல்ஸ் (W.D.Niles), ஜே.எம்.தோமஸ் (J.M.Thomas), ஜீ.சீ.தம்பையா (G.C.Thambiah) மற்றும் வி.ஜோசெப் (V.Joseph) ஆகியோர் இராமநாதன் தேர்தலில் போட்டியிடுவதை மத அடிப்படையில் வன்மையாக எதிர்த்தார்கள்.

இறுதியில், படித்த இலங்கையர் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஒரு பிரபலமான வைத்திய நிபுணர் டாக்டர். மார்கஸ் பெர்ணாண்டோ இராமநாதனை எதிர்த்துப் போட்டியிட முன்வந்தார். இவர் ஒரு கல்விமான். பி.எஸ்.சி மற்றும் எம்.டி போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தார். இவர் கரையாரச் சாதியைச் சேர்ந்த கரையோரச் சிங்களவர் ஆகும். இவரது நியமனத்தை திரு.தோமஸ் எட்வேக் டி சம்யோ பிரேரிக்க திரு.வில்லியம் மேத்தர் ஆமோதித்தார்.

அதேநேரம், இராமநாதனுக்கு நான்கு நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தார்கள்.

முதல் நியமனப் பத்திரத்தை திரு.ஏ.டி.ஏ.செனிவரெட்ண பிரேரிக்க, வீ.காசிப்பிள்ளை வழிமொழிந்தார். இராண்டாவது நியமனப் பத்திரத்தை திரு. ஹெக்ரர் அல்பிறட் ஜெயவர்தனா பிரேரிக்க, பிரான்சிஸ் டி சொயிஷா வழிமொழிந்தார். மூன்றாவது நியமனப் பத்திரத்தை சாஸ்பட்டு வன் ரூ டாவா பிரேரிக்க, எட்வேட் விக்ரர் டி றொசாரியோ வழிமொழிந்தார். நான்காவது நியமனப் பத்திரத்தை திரு. எட்வேட் குணரட்ன பிரேரிக்க, திரு. ஒஸ்ரின் பானார்ண்டோ குணரட்ன வழிமொழிந்தார்.

இலங்கையின் அரசியலின் பரிணாம வளர்ச்சியிலே 13 டிசம்பர் 1911 ஆம் ஆண்டு பொன் எழுத்துக்களால் குறிக்கப்பட வேண்டிய ஒரு நாளாகும். அன்று தான் ஒன்றரை வருடத்திற்கு மேலாக படித்த இலங்கையரைத் தெரிவு செய்வதற்கான



வாக்களிப்பு நடைபெற்றது. மொத்த வாக்காளர் என்று ஏற்கனவே குறிப்பிட்ட 2938 வாக்காளர்கள் இருந்தனர். அதில் 1659 பேர் அதாவது மொத்த வாக்காளர்களில் 56.4 வீதமான வாக்காளர்கள் சிங்களவர்களாகும். 1072 பேர், அதாவது மொத்த வாக்காளர்களில் 36.4 வீதமானோர் தமிழ் வாக்காளர்களாகும்.

(தொடர்ச்சி 23 இல...)



# கவுண்டமணியின் னக்கு வேறெங்கும் கிளைகள் கிடையாது

## ரஜினி – அக்ஷய் குமார் மோதல்



ரஜினி நடிப்பில் பிரம்மாண்டமாக வெளிவந்த 'எந்திரன்' படம் ரசிகர்களிடையே ஏகோபித்த வரவேற்பையும், வசூலில் பெரிய சாதனையையும் படைத்தது. தென்னிந்திய சினிமாவில் மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாகி இந்த படத்தை ஷங்கர் இயக்கியிருந்தார். ஐஸ்வர்யா ராய், கருணாஸ், சந்தானம் உள்ளிட்டோர் நடித்திருந்தனர்.

இந்த படத்தின் மிகப்பெரிய வெற்றியைத் தொடர்ந்து இப்படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக்க ஷங்கர் மும்முரமாக களமிறங்கினார். முதல் பாகத்தைவிட இரண்டாம் பாகத்தை மிக அதிக பட்ஜெட்டில் உருவாக்க முடிவு செய்தார்.

லைக்கா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் பிரமாண்டமாக தயாரிக்கிறது.

எந்திரன்-2 கதாநாயகியாக எமி ஜாக்சன் ஒப்பந்தமாகியுள்ளார். மேலும், இப்படத்தில் வில்லன் வேடத்துக்கு ஆர்னோல்ட் தேர்வாகியிருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் தற்போது பிரபல இந்தி நடிகர் அக்ஷய் குமார் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார்.



## மகளுக்கும் விருது

உலக நாயகன் கமல்ஹாசன் தேசிய விருதுகள், பத்ம விருதுகள் மற்றும் பல விருதுகள் வாங்கி குவித்துள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் புலிக்கு பிறந்தது பூனையாகுமா? என்ற பழமொழிக்கேற்ப கமல்ஹாசனின் இரண்டாவது மகள் அக்ஷராஹாசன், அறிமுகமான முதல் படத்திலேயே விருது பெற்றுள்ளார்.

Reliance Broadcast Network நிறுவனம் ஒவ்வொரு வருடமும் சிறந்த திரையுலக கலைஞர்களை தேர்வு செய்து BIG Star Entertainment Awards என்ற விருதினை வழங்கி வருகிறது. இந்நிலையில் இவ்வருடத்திற்கான இந்த விருது பெற்றவர்களின் பட்டியல் தற்போது வெளிவந்துள்ளது.

இதில் "ஷமிதாப்" படத்தில் அறிமுகமான அக்ஷராஹாசனுக்கு சிறந்த அறிமுக நடிகை என்ற விருது கிடைத்துள்ளது. "ஷமிதாப்" படத்தில் அக்ஷராஹாசன், அமிதாப் மற்றும் தனுசுடன் இணைந்து நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் "பிக்கு" என்ற பொலிவுட் படத்தில் நடித்த அமிதாப்பச்சன் மற்றும் தீபிகா படுகோனேவுக்கு சிறந்த நடிகர் மற்றும் சிறந்த நடிகைக்கான விருது கிடைத்துள்ளது.

விஜய் சேதுபதி நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் 'நானும் ரௌடிதான்'. இதில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நயன்தாரா நடித்திருந்தார். விக்னேஷ் சிவன் இயக்கிய இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்று வெற்றிகரமாக திரையரங்குக ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்திற்குப் பிறகு விஜய் சேதுபதி 'த நடிக்க இருக்கிறார். இதில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக மூன்று இருக்கிறார்கள். இதில் முதல் கதாநாயகியாக தமன்னா தேர்வு அடுத்த கதாநாயகியை தேடி வந்த நிலையில், 'மேகா' படத்தில் செய்துள்ளனர். அடுத்தபடியாக மூன்றாவது கதாநாயகியை தேடும் படலம் நடந்து வருகிறது.



# தென்னிந்தி

## சமந்தா தனுஷ் ஹாட்ரிக்

தனுஷ் நடிப்பில் தற்போது உரு
இதில் தனுசுக்கு ஜோடியாக
நடித்துள்ளார்கள். அனிருத் இ
வேல்ராஜ் இயக்கியுள்ளார்.
காட்சிகள் அதிகம் பேசப்
கூறுகின்றனர். இதே ஜோ
'வடசென்னை' படத்தி
இந்நிலையில், மேலும் ஒரு பு
இருவரும் ஜோடியாக ந
வெளியாகியுள்ளது. அனேக
அண்ணன் செல்வராக
எதிர்பார்க்
சமந்தா தற்போது வி
'தெறி' படத்திலும், சூர்ய
படத்திலும் மகேஷ்பாப
படத்திலும் நடி

# மூன்றாவது கதாநாயகியை தேடும் விஜய் சேதுபதி

னும்
தாரா
கர்கள்
பரங்குகளில்
துபதி 'தர்மதுரை' என்னும் படத்தில்
மூன்று கதாநாயகிகள் நடிக்க
தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
டத்தில் நடித்த சிருஷ்டி டாங்கேவை தேர்வு
யை




## அஜித், விஜய் வெளியே தனுஷ் உள்ளே



அமெரிக்காவிலிருந்து வரும் பத்திரிகை போர்ப்ஸ். இதன் இந்திய பிரிவான போர்ப்ஸ் இந்தியா ஒவ்வொரு ஆண்டும் வருமானம் மற்றும் பிரபலமான ஸ்தானத்தின் அடிப்படையில் முன்னணியில் இருக்கும் 100 பிரபலங்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. கடந்த ஆண்டு இடம்பெற்ற விஜய், அஜித் பெயர்கள் இந்த ஆண்டு இடம்பெறவில்லை. இந்திய அளவில் பொலிவுட் நடிகர் ஷாருக்கான் பட்டியலில் முதலிடம் பிடித்திருக்கிறார். தமிழ் பிரபலங்களில் ஏ.ஆர்.ரஹ்மான் 14 ஆவது இடம், கிரிக்கெட் வீரர் அஸ்வின் 31 ஆவது இடம் பிடித்திருக்கின்றனர். தமிழ் நடிகர்களில் 37 ஆவது இடம் பிடித்து தனுஷ் முன்னணியில் இருக்கிறார். கமல், ரஜினி முறையே 46 மற்றும் 69 ஆவது இடம் பிடித்திருக்கின்றனர். காஜல் அகர்வால் 58, ஸ்ருதி ஹாசன் 61, சூர்யா 71, இயக்குனர் ராஜமவுலி 72 பிடித்துள்ளனர். இந்த பட்டியலில் முதன்முறையாக சந்தானம் 52, ஆர்யா 80 ஆவது இடத்தைக் கைப்பற்றியுள்ளனர். கடந்த ஆண்டு பட்டியலில் இடம்பிடித்த விஜய், அஜித் பெயர்கள் பட்டியலில் இல்லை.



## தூசு தட்டப்படும் மருதநாயகம்

1997 ஆம் ஆண்டு மருதநாயகம் படத்தை கமல் தொடங்கினார். இங்கிலாந்து ராணி எலிசபெத் இந்த தொடக்க விழாவில் கலந்து கொண்டார். கமலே கதை, திரைக்கதை எழுதி இயக்கி நடித்தார். பின்னர் நிதி பற்றாக்குறை காரணமாக அந்தப் படம் கைவிடப்பட்டது.யாராவது தயாரிக்க முன் வந்தால் மருதநாயகம் மீண்டும் தொடங்கப்படும் என்று கமல் கூறி இருந்தார். சில தினங்களுக்கு முன்பு அவர் அளித்த பேட்டியில், லண்டனில் உள்ள தனது நண்பர் இந்தப் படத்தைத் தயாரிக்க முன்வந்து இருப்பதாக தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் திரைப்பட தயாரிப்பு நிறுவனமான ஐங்கரனின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் மருதநாயகம் படத்தின் போஸ்டர் வெளியிடப்பட்டு இருக்கிறது. இதையடுத்து கமலின் மருதநாயகம் மறு பிறவி எடுப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

ரஜினியின் எந்திரன் '2' படத்தை மெகா பட்ஜெட்டில் லைக்கா நிறுவனம் தயாரிக்க இருக்கிறது. இந்த படத்தின் வேலைகள் தொடங்கிய பிறகு மருதநாயகம் படத்தையும் நிறுவனம் தயாரிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருவதாக கோடம்பாக்கம் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வுஷ்

போது உருவாகியுள்ள படம் 'தங்க மகன்'.
ஜோடியாக சமந்தா மற்றும் எமிஜாக்சன்
அனிருத் இசையமைத்துள்ள இப்படத்தை
புள்ளார். இப்படத்தில் தனுஷ் - சமந்தா
ம் பேசப்படும் என்று படக்குழுவினர்
இதே ஜோடி வெற்றிமாறன் இயக்கும்
ன' படத்திலும் நடிக்க இருக்கிறது.
ம் ஒரு புதிய படத்திலும் தனுஷ் - சமந்தா
ஜாடியாக நடிக்க இருப்பதாக தகவல்
. அனேகமாக இந்த படத்தை தனுஷின்
செல்வராகவன் இயக்குவார் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.
போது விஜய்யுடன் இணைந்து
லும், சூர்யாவுடன் இணைந்து '24'
கேஷ்பாபுவுடன் 'பிரம்மோற்சவம்'
திலும் நடித்து வருகிறார்.



# புதிய இடதுசாரி...

வர்களே உருவாகினர். முதலாளித்துவத்தில் உருவான அவ்வாறான மனிதர்களையே மார்க்ஸிய வாதிகளாக. புரட்சிவாதிகளாக உருவாக்க வேண்டியிருந்தது. அது மிகவும் கஷ்டமான பணியாகும். ஊழல் மலிந்து போயுள்ள முதலாளித்துவ சமூகத்தில் ஊழலற்ற மனிதனை உருவாக்குவதென்பது அது எவரையும் உற்சாகமிழக்கச் செய்கின்ற அதற்குப் பதிலாக குறுகிய இலகுவான பாதையை தேடுவதற்கு வற்புறுத்துகின்ற வகையாக கடினமான வேலையாகும்.

## தியாகத்தின் முன்னுதாரணம்

ஜே.வி.பியை ஆரம்பிப்பதற்கு பங்களித்தவர்கள் இந்த கஷ்டங்களுக்கு நன்கு முகம்கொடுத்தனர். ஜே.வி.பியில் நிர்மார்க்ஸிய கருத்துக்கள் இவ்வாறான சூழலிலேயே தோற்றம் பெறுகின்றன. முதலாளித்துவ சமூகத்தில் கம்யூனிஸ்ட்வாத. புரட்சிவாத வெகுஜன இயக்கத்தை கட்டியெழுப்புவதில் முகங்கொடுத்த நெருக்கடியின் காரணமாக அவ்வாறு பரந்தளவிலான கட்சியை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அதை அடைவதற்கான இலகுவான வழிகளைத் தேடுவதற்குச் சிலர் முயற்சித்தனர். அதற்காகச் சிந்திக்கவும் ஆரம்பித்தனர். அதே போன்று தாம் அரசியல் செய்யும் நாட்டின் நிலவும் பொதுவான இயல்புகளைப் போன்றே விசேசமான இயல்பினையும் கவனத்தில் கொண்டு தமது நாட்டு அரசியலில் வாஸ்தவமான யதார்த்தமான இயற்கை இயல் விதிமுறைகளின் வழியாக விளக்கமளித்துக்கொண்ட தமது நாட்டிற்கு பொருத்தமான போராட்டப் பாதையைத் தயார்படுத்திக் கொள்வதை விடுத்து வேறு நாடுகளின் அனுபவங்களை அப்படியே (கொப்பியடித்தல்) பிரதிசெய்வதற்கான முயற்ச்சிகளை சிலர் மேற்கொண்டனர். அது 1967இல் மட்டுமல்ல இன்றும் கூட காணக் கூடியதாயிருக்கிறது. அவ்வாறு வேறு நாடுகளின் வடிவத்தை கையாள்வதற்கு எடுக்கும் முயற்சியானது அந்நபர்களின் அரசியல் வறுமையேயின்றி வேறு ஒன்றுமல்ல.

## கியூப புரட்சியின் தாக்கம்

1967 டிசம்பர் மாதம் ஜே.வி.பியை உருவாக்கிய சில நபர்களிடையே இவ்வாறான போக்குகளைக் காண முடிந்தது. அதன்போது அவர்கள் கியூப புரட்சியை பின்பற்றும் யோசனையை முன்வைத்தனர். 1967 ஒக்டோபர் 08ஆம் திகதி பொலிவியாவில் வைத்து சிரேஷ்ட புரட்சிவாதியான சேகுவேரா கொல்லப்பட்டார். சே பற்றியும் கியூப கெரில்லா போராட்டத்தைப் பற்றியும் உலகத்தில் அனைவரது கவனமும் திரும்பியது. கியூப புரட்சியென்பது புரட்சிவாதிகள் சிலரால் சியேரா மயேஸ்த்ரா மலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் காரணமாக அமைந்ததென மிகவும் குறுகிய விதமாக புரிந்து வைத்திருந்த சிலர், இலங்கைக்கும் கியூப பாணியிலான கெரில்லா போராட்டத்தை முன்மொழிந்தனர். பரந்துபட்ட கட்சியை கட்டியெழுப்புவதைவிட சிறிய குழுக்களால் மேற்கொள்ளப்படும் கெரில்லாப் போராட்டம் இலகுவானதென அவர்கள் கருதினர். கியூப கெரில்லாப் போராட்டம் தோன்றியதன் காரணமாக நாம் செய்ய வேண்டியது என்ன எனும் கேள்வி எழுந்தது. நாமும் கெரில்லாக் குழுக்களை உருவாக்குவதா? அல்லது பரந்தளவிலான கட்சியைக் கட்டியெழுப்புவதா? எனும் விவாதம் எழுந்தது. இதன் போது அப்போதிருந்த உலக நிலைமையை கவனத்தில் கொண்ட தோழர் ரோகண விஜேவீர மார்க்சிய லெனினிஸத்திற்கு ஏற்ப இந்தச் சிக்கலை தெளிவடையச் செய்தார். 1971 போராட்டத்தின் பின்னர் தோழர் விஜேவீர சிறையிலிருந்து எழுதிய 'சில அனுபவங்கள்' எனும் ஆவ ணத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளர்.

**"எங்களால் கட்டியெழுப்ப வேண் டிய அமைப்பு என்னவென்பதை முடிவு செய்யும்போது நாம் மீண்டும் சரியாகவே செயற்பட்டிருக்கிறோம். கெரில்லா படையாக அணிதிரட்ட வேண்டுமா அல்லது அரசியல் கட்சியாக ஸ்தாபனப்பட வேண்டுமா? இந்தப் பிரச்சினை சர்வ தேச புரட்சிகர இயக்கங்களில் உக்கிர மான கருத்தாடலுக்கும், கருத்துப் போராட்டத்திற்கும் உள்ளாகியிருந் தது. அவ்விரண்டினதும் இடைநிலை உறவுகளைப் புரிந்துக்கொண்ட நாம் எம்மால் கட்டியெழுப்ப வேண்டியது கட்சியென்றும் அது வர்க்கப் போராட்டத்தின் உக்கிரமான கட்டத்தில் ஆயுதப் போராட்டத்திற்காகத் தயா ராகும் கட்சியாகத் தீர்க்கமான கட்டத்தில் புரட்சியின் முன்னணிப் படையாக மக்களுக்கு வழிகாட்டலையும், தலைமை தாங்கி, மக்களை முன்னோக்கி வழி நடாத்துகின்ற முன்னணிப் படையாக ஸ்தாபனப்பட்டாக வேண்டும்"** எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜே.வி.பி குழந்தைப் பருவம்

ஜே.வி.பி சிறு குழந்தைப் பருவத்து அரசியல் இயக்கமாக இருந்த போதிலும் கூட அதன் அமைப்பு வடிவங்கள் உருவாக்கப்பட்டிருக்காத, மேலும் கட்சியினுள் தோன்றிய சந்தர்ப்பவாத கருத்தியலுக்கு எதிராகவும், அதனை தெளிவடையச் செய்வதிலும் தோழர் ரோகண விஜேவீர பெரும் பங்காற்றியிருந்தார். அதற்கான காரணம், அரசியல் இயக்கமொன்றின் பயணத்தின்போது கருத்தியல் ரீதியான தெளிவு முக்கியமானது என்பதனாலாகும். பல கருத்துக்கள் வாயிலாக வரும் சந்தர்ப்பவாத போக்குகளை தோற்கடிப்பதென்பது இடதுசாரிய இயக்கத்தின் வெற்றிக்கான அத்தியாவசிய அடையாளமாகும். இது பற்றி லெனினிசக் கோட்பாடு பல விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. லெனின் ஒரு தடவை சந்தர்ப்பவாதமென்பது அவசரமாக தோன்றியதோ, தற்செயலாக, தவறுதலாக தோன்றியதோ அல்லது தனிநபர்களின் துரோகத்தனமோ அல்ல. அது ஒட்டுமொத்த வரலாற்றில் சமூக உற்பத்தியாகும். சீர்திருத்தவாதத்தின் கட்டாயத் தன்மையைத் தீர்மானிப்பது நவீன சமூகத்தின் வர்க்க மூலங்களாகும். சீர்திருத்தவாதமென்பது சர்வதேச பிரபஞ்சமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். லெனின் – மேற்கோள் சந்தர்ப்பவாதமா பாட்டாளி வர்க்க சர்வதேசியமா? (ரோகண விஜே வீர) முதலாளித்துவ சமூகத்தில் இடதுசாரிய இயக்கத்தில் தோன்றும் சந்தர்ப்பவாதமானது முதலாளித்துவ, சிறு முதலாளித்துவத் தின் தேவையாக அமைந்திருக்கி றது. சந்தர்ப்பவாதமென்பது பாட் டாளி வர்க்க இயக்கத்தில் தோன் றும் முகமூடியணிந்த முதலாளித் துவக் கருத்தியலாக கருதப்படுகி றது. எந்தவொரு இடதுசாரிய கட்சியிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சந்தர்ப்பவாதம் எழுவதற்கான வாய்ப்பிருப்பதுடன் அதை இனங்கண்டு தோற்கடிக்க வேண்டியது இடதுசாரிய இயக்கத்தின் கடப்பாடாகும். ஒரு கட்சியில் சந்தர்ப்பவாதம் தோன்றும்போது ஒன்று கட்சி சந்தர்ப்பவாதத்தை நோக்கிச் சென்றாக வேண்டும். அல்லது சந்தர்ப்பவாதத்தை தோற்கடித்து அதை கட்சியிலிருந்து வெளியேற்றியாக வேண்டும். 1967 கலத்தேவ கலந்துரையாடல் அதன் நிமித்தமாக கூடப்பட்ட ஒன்றாகும்.


இராமலிங்கம் சந்திரசேகர்
மத்திய குழு உறுப்பினர்
மக்கள் விடுதலை முன்னணி.

# கிறிஸ்மஸ் விழாவில் பிரிக்க முடியாத அங்கம்

கிறிஸ்மஸ் பண்டிகையில் "கிறிஸ்மஸ் மரம்" இல்லாமல் கொண்டாடுவதில்லை என்கிற அளவுக்கு ஒரு முக்கியத்துவம் பெற்றுவிட்டதை நாமறிவோம். கிறிஸ்தவர்களிடையே எப்படி இந்தப் பழக்கம் உருவானது? அதுமட்டுமன்றி மரம் எப்படி கிறிஸ்மஸ் விழாவின் பிரிக்கமுடியாத அங்கமானது?

ஜெர்மானிய கத்தோலிக்க கிறிஸ்தவ போதகரான புனிதர் St.போனி பேஸ் (St. Boniface) என்பார்தான் இதற்கு மூல காரணமாகக் கருதப்படுகிறார். ஜெர்மானிய பாகான் இனத்தவர்கள் தங்கள் தேவைகளுக்காக 'ஓக்' மரங்களை வெட்டி அழித்து வந்தனர். மின்சாரம் இல்லாத அந்நாட்களில் குளிரை விரட்ட 'ஓக்' உருட்டுக் கட்டைகளைத்தான் வீட்டில் "Fire Place"பயன்படுத்திவந்தனர்.

குடும்பங்களை வெதுவெதுப்பாக, கதகதப்பாக வைத்திருப்பதில் மையப் பொருளாக 'ஓக்' திகழ்ந்தது. இ ப




படியே மரங்கள் வெட்டி அழிக்கப்படுமானால் எதிர்கால சந்ததியினருக்கு மரங்களின் முகவரியே தெரியாமல் போய்விடும். எனவே ஒரு 'ஓக்' மரம் வெட்டப்பட்டால் அந்த இடத்தில் மூன்றாம் நாளே ஒரு மரக்கன்று துளிர் விட வேண்டும். எப்படி, மரித்த மூன்றாம் நாள் கிறிஸ்து உயிர்த்து எழுந்தாரோ அதைப் பிரதிபலிக்க வேண்டும், என்று புனிதர் போனிபேஸ் வேண்டுகோள் விடுத்தார். இதன் பிறகு ஜெர்மானியர்கள் ஒரு 'ஓக்' மரம் வெட்டினால் ஒரு 'ஓக்' மரம் அல்லது ஒரு 'பிர்' மரத்தை நட்டு உயிர்ப்பித்தனர். கிறிஸ்துவின் நினைவாக இதனைச் செய்யத் தலைப்பட்ட ஜெர்மானிய பாகான் இனத்தவர்கள், கிறிஸ்து பிறக்கிற மாதங்களில் தங்கள் இல்லங்களில் 'ஓக்' மரங்களையோ 'பிர்' மரங்களையோ அலங்கரித்து வைப்பதை வழக்கமாகக் கொள்ளத் தொடங்கினர்.

இந்தப் பழக்கம் மெல்லமெல்ல ஐரோப்பா நாடுகளில் பரவியதோடு ஜெர்மானியர்கள் அமெரிக்காவில் குடியேறிய போது அமெரிக்காவிலும் பரவி, அன்றும், இன்றும், என்றும் என கிறிஸ்மஸ்ஸூம் கிறிஸ்மஸ் மரமும் பிரிக்க இயலாத அளவுக்கு ஆகிவிட்டது.

பிதுலா

# ராஜீவ்காந்தி கொலைவழக்கு நளினி மீளவும் மேன்முறையீடு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டணை அனுபவித்து வரும் நளினி சிறிகரன் உரிய காலத்திற்கு முன்பு அவர் மறியல்சாலையில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு தேவையான அறிவுறுத்தலை தமிழக அரசாங்கத்திற்கு வழங்குமாறு உயர் நீதிமன்றத்திற்கு மீண்டும் ஒரு மனுத்தாக்கல் செய்துள்ளார்.



அவர் தற்பொழுது பெண்களுக்கான விசேட சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். நளினி, தான் இதுவரை இருபத்துநான்கு வருடம் மறியலில் இருந்து விட்டதாக மேன்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கு சம்பந்த மாக ஆரம்பத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தீர்ப்பை இந்திய உச்ச நீதிமன்றம் அங்கீகரித்தது. அதையடுத்து இந்திய அரசியல் சட்டத்தின் 161ஆவது சட்டப்படி ஏப்ரல் 24 2004 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

இதுவரையில் 2200 குற்றவாளிகள் பத்து வருடம் சிறை அனுபவித்த பிற்பாடு தமிழக அரசாங்கம் அவர்களை விடுவித்துள்ளது. ஆனால் தனது நிலை வேறு கிருமினல் சட்டத்தின் கீழ் வருவதனால் தனது நிலைப் பாட்டை தமிழக அரசாங்கம் இன்றும் தீர்மானிக்கவில்லை என தனது மனுவில் நளினி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அந்த மனுவில், தமிழக அரசாங்கம் இருபதுவருடகாலம் மறியலில் இருந்தால், அவர்களை விடுதலை செய்யும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு உத்தரவு 10 நவம்பர் 1994 ஆம் ஆண்டு விடுக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாங்க உத்தரவின் கீழ் தன்னை விடுதலை செய்ய உத்தரவிடப்படவில்லை என்றும் நளினி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தான் விடுதலை செய்ய தகுதியுள்ளதாகவும், கடந்த 10 ஒக்ரோபர் 2014 ஆம் ஆண்டு தனது தண்டனைக் காலம் முடிவதற்கு முன் கூட்டியே விடுதலை செய்யுமாறு அரசாங்கத்திடம் தான் மனு அளித்திருப்பதாகவும், ஆனால் அரசாங்கம் அதற்கு எந்தப் பதிலும் தரவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, நியாயமான கால அவகாசத்தினுள் தனது மனுவை விசாரித்து பதில் தருமாறு நளினி உயர்நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார்.

விசாரணை நீதிமன்றத்தினால் நளினிக்கு கடந்த 28 ஜனவரி 1998 ஆம் ஆண்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதையடுத்து தமிழ்நாடு ஆளுநர் கடந்த 24 ஏப்ரல் 2000 ஆம் ஆண்டு அந்த தூக் குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றினார்.

# வடபகுதி நீர்ப்பாசனத்தில் பனையோலைப் பட்டைகள்


பண்டைய இலங்கையின் வடபிரதேச மக்கள் கடலையும், குளத்தையும், வானத்தையும் நம்பி வாழ்ந்தார்கள். இவர்களில் கரையோர மக்கள் தொழிலுக்காக கடலை நம்பி இருந்தார்கள். குடாநாட்டின் நடுப்பகுதி மக்கள் வானத்தையும் குளத்தையும் நம்பி விவசாயத்தில் ஈடுபட்டு வந்தார்கள்.

குளத்தை நம்பியிருந்த மக்கள் நீரைப்பாய்ச்சுதற்கு பல வழிகளைப் பின்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் முதற் கட்டமாக மண் பாத்திரங்களைப் பயன்படுத்தினர். அது நீண்ட பாவனைக்கு உதவாது என்ற நிலையில் பனை ஓலை ஏதனங்களைக் குறிப்பாகச் சீலாப்பட்டை, கிணற்றுப்பட்டை, கோலுப்பட்டை போன்றவற்றினைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

அன்றாட தேவைகளுக்கு ஏற்கனவே குறிப்பிட்ட மண்பானைகளைப் பயன்படுத்தினர். வடபகுதியில் குளங்களுடன் துரவுகளும் இருந்தன. துரவுகள் ஆழமாகத் தோண்டப்படும். நாலு புறத்திலுமிருந்து துரவுக்குள் இறங்கி நீரை கோலுப்பட்டையாலோ மட்பாத்திரத்தாலோ கோலி வருவார்கள். இது பயிருக்கும் ஊற்றப்படும் இதனை வீட்டுப் பாவனைக்கும் எடுப்பார்கள்.

### கோலுப்பட்டை

கோலுப்பட்டை பனையோலைச் சார்வை எடுத்து விரிப்பார்கள் அடிச்சார்வையும் நுணி ஓலையை குண்டாளமாக இணைப்பார்கள். ஒன்றை ஒன்று இணைந்த பகுதிகளாக மெல்லிய நார்மட்டையும் வைத்து ஓலையாலும் நாரினாலும் விவார்கள் அந்தப்பகுதி கைபிடிபோல் வைரமாக இருக்கும். இதனையே கோலுப்பட்டை என்று அழைப்பார்கள். இரண்டு கோலுப்பட்டைகளையும் இரு கைகளிலும் எடுத்து துரவில் இறங்கி நீரைக் கோலிக்கொண்டு மேலே வந்து பயிர்களுக்கு ஊற்றுவார்கள். இந்தமுறைகள் இப்பொழுது மீசாலை, கொடிகாமம், பளை போன்ற இடங்களில் மேற்கொள்வதைக் காணலாம். குளங்களிலும்



துரவுகளிலும் இந்தக் கோலுப்பட்டையைப் பயன்படுத்தி பயிருக்கு நீர் பாய்ச்சியதுண்டு. இந்தக் கோலுப்பட்டைகள் இன்று தகரத்தில் அமைக்கப்பட்டு கடைகளிலும் விற்கிறார்கள். இதனால் நீர்ப்பாய்ச்சலும் நடைபெறுவதை இன்றும் காணலாம்.

### சீலாப்பட்டை

இந்தப் பட்டை வயல் நெல்லுக்கு குளத்துநீரையோ பெரிய வாய்க்கால் நீரையோ ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதன் அமைப்பு முறையைச் சற்றுப் பார்ப்போம். மா அவிக்கும் நீற்றுப் பெட்டியையோ எண்ணெய் ஊற்றும் ஊற்றுப் பெட்டியையோ உங்களுக்குத் தெரியும். அந்த அமைப்பைப் போன்றதுதான் இது. மேல்பக்கம் இரண்டு அடி நீளமானது மேல்பகுதி மெல்லிய பனை மட்டை வைத்துக் கட்டுவார்கள் குறிப்பாக நீள்வட்டமாக வரக் கூடியதாக இருமட்டைகள் வைத்துக் கட்டுவார்கள். நீள்வட்டக் கூர்களில் முறுக்கிய நார்க்கயிறுகள் கட்டப்படும்.

தொகுப்பு : கலாபூஷணம் சு.துரைசிங்கம்

கயிற்று முடிவிலே புள்ளுகள் கட்டப்படும் அடிப்பாகம் அரையடி வரை ஒடுங்கிச் செல்லும். அடிப்பாக அரை அடிக்கு மெல்லிய மட்டைகள் வைத்துக்கட்டி இருபக்க நுனிகளிலும் நார்க்கயிற்றை நான்கு அடிக்குக் கூடாமல் கட்டி முடிவில் புள்ளைக் கட்டுவார்கள் இந்தப் பட்டையின் ஒரு பக்க இருகயிறுகளையும் ஒருவர் இருகைகளிலும் பிடிக்க மறுபக்க இரு கயிறுகளையும் வேறு ஒருவர் பிடித்து குளத்துநீரை வயலுக்குள் ஏற்றுவார்கள். இதே இடத்திலிருந்து இரண்டுக்கு மேற்பட்ட சீலாப்பட்டைகளால் இறைப்பார்கள். இயந்திரத்தால் இறைக்கும் நீரைவிட இதனால் கூட இறைக்க முடியும்.

### கிணற்றுப்பட்டை

பனையோலையால் மூலை ஒன்று வைக்கப்பட்டு மூன்று பக்கங்கள் வரக் கூடியதாக ஒரு அடிக்கு பின்னப்பட்டு இடையில் மூன்று மூலைகள் வைத்து வட்டமாக ஒரு அடிவரை பின்னப்பட்டு வட்டமாக வந்த பகுதிக்கு நார்மட்டை உள்புறமும் வெளிப்புறமும் வைத்து கட்டப்பட்டு அமைந்ததே கிணற்றுப் பட்டையாகும்.

கிணற்றுப்பட்டை மூலம் இறைப்பதற்கு கிணற்றுக்கு அருகில் மிதிகல்லைப் பார்த்தபடி இரு வரிசையில் ஆடுகால்கள் நடப்பட வேண்டும். இவை பச்சைப் பூவரசம் தடிகளாகவே நாட்டப்படும். ஆடுகால்களுக்கேற்ப இருபக்கமும் பேண்கள் கட்டப்பட வேண்டும். பேண்களிலே ஏற்கனவே பனையிலோ தென்னையிலோ சீவிய துலாக்களில் அச்சுலக்கையைச் செருகி துலாவை பேணில் ஏற்ற வேண்டும்.

துலாவின் நுனியில் துலாக்கொடிக் கயிற்றையோ பூவரசந்தடியிலான தடியையோ கொழுவிக் கட்டிவிடுவார்கள். முன்னே குறிப்பிட்ட பட்டையை இணைத்ததன்பின் பட்டை வாயிலில் பெல்லித்தடியைக் கட்டி பெல்லித்தடிகளின் முடிவுகளில் பட்டையைச் சுற்றிக்கட்டப்பட்ட கயிற்றினை துலாக் கொடியில் இணைப்பார்கள்.

துலாவிலே ஒருவரோ இருவரோ ஏறி மிதிக்க துலாக் கொடியில் பிடித்திருப்பவர் கிணற்றுள் பட்டையை விட்டு நீரை எடுத்து பீலிக்குள் ஊற்றுவார்கள். கோலுவதற்கும், ஊற்றுவதற்கும் இதமாக துலா மிதிக்கப்பட வேண்டும். இந்த இறைப்பு நீரை சிறுவாய்க்கால்கள் மூலமாக ஒருவர் பயிர்களுக்குப் பாச்சுவார். இந்தப் பட்டைகளை ஏழாலை மக்கள் ஆக்குவார்கள். ஏழாலையின் ஒரு பகுதியைப் பட்ட மூலை ஏழாலை என்பர்.

### கைப்பட்டை

இது மேற்குறிப்பிட்ட பட்டையின் அமைப்பைக் கொண்டதாக இருக்கும் இதற்கும் பெல்லிகட்டி கயிறும் கட்டி கிணற்றுக்குள் விட்டு நீரை அள்ளி சிறுதேவைகளுக்குப் பயன்படுத்துவார்கள். இப்பட்டைகளை தொண்டமானாறு கோயில் கேணி கிணறுகளில் இன்றும் காணலாம். முன்பு இப்பட்டைகள் சாதாரண வீட்டுக் கிணறுகளில் பாவனைக்கு இருந்தன. இன்று தகரவாளிகள் வந்ததால் பாவனையற்றதாகப் போய்விட்டது. தொண்டமானாறு வல்லிபுரக் கோயில்களில் இப்பட்டைகள் இன்றும் விபூதி போடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இக்காலத்தில் வீட்டிலும் வயலிலும் இயந்திரங்களும் மின்சார மோட்டர்களும் மேற் கூறிய பணிகளைச் செய்கின்றன.

---

# புதிய மனிதன் பிறப்பானா?

பாரதி - மோகன்

கையில் புத்தகத்தோடு நெஞ்சில் நாளைய
எதிர்காலத்தின் கனவுகளை சுமந்து என்
வீட்டிலிருந்து வெளியே வருகிறேன்
வீதியில் கால்கள் படிந்து விறுவிறென்று
நடக்கையிலே சந்தியிலே இளைய
சந்ததிகளின் சந்திப்பில் சந்திக்கிறேன்

அப்பன் காசிலே அடிச்ச பியர் வாசம்
அப்புறம் கொஞ்ச கஞ்சா வோடு
அடிக்கடி காணும் பயல்கள்
வெளிநாட்டு காசில் வாங்கிய
அழிவைதேடிப் பறக்கும் புதிய
மோட்டார் பைக்கிள்கள்

செப்படிவித்தை காட்டும் அவர் செயல்களை
தாண்டி நடக்கையிலே கரிக்குடல்
கையிலேந்திய பயம் எனக்குள்
ஆனபோதும் துணிந்தவளாய்
கடக்கிறேன் கடந்து போகையிலே
தப்பான வார்த்தைகள் ஓர்புறம் காதைகிளிக்க
நில்லென்றான் ஒருத்தன்
நீ செல்லென்றான் இன்னொருத்தன்
நிறுத்தென்றான் இன்னொருவன்
கல்லடிபட்டு கலங்கிய நாயாய்
கத்திட நினைத்தேன்

அப்புறம் எனக்குள் துணிவை வரவழைத்து
உனக்கு இப்ப என்ன வேண்டும் என்றேன்
நீதான் வேண்டுமென்றான்
பருப்பின் கதையை பாரென்றான் ஒருவன்
பருப்பு வாங்க பணத்திற்கு

அப்பனை எதிர்பார்க்கும் உனக்கு
பருப்பின் கதை தெரியுமா என்றேன்
கருகிப்போன ரொட்டி மாதிரி இருக்கும்
உனக்கு இவ்வளவு சத்தமா
என்றானொருவன்
வெளிநாட்டு காசில ஊர்சுத்தும்
உனக்கே இவ்வளவு ஏற்றமென்றா
எனக்கிருக்காத வென்றேன்

கட்டாக்காலிகளாய் சுற்றியவர்களோடு
நெட்டநெடு நேரம் பேசவிரும்பாமல்
சட்டென்று கடந்து ஓட்டமும்
நடையுமாய்
ஓடி நடந்து கடக்கிறேன்
ஆனபோதும் எனக்குள்ளே
சில நெருடல் தட்டிக் கேட்க

பட்டையெடுக்க போட்ட சட்டங்கள்
சட்டைப் பைக்குள் அடங்கிய காசா
காசோடு காவலர் நெஞ்சில் அடங்கியத
இல்லை அடக்கப்பட்டதா?
முடவனுக்கும் நடக்க முடிந்தகாலம்
முடங்கிப்போய் வீரனும் முடவனாய்

வீட்டுக்குள் இருக்க வீதி கடக்க
முடியாத
அவல நிலையில் செல்லும் எம்துயர்
துடைக்க எப்போது
வழிகிடைக்கும் நாளை ஓர்
புதிய மனிதன் பிறப்பானா?
நமக்காக தட்டிக் கேட்க என்ற
ஏக்கத்தோடு புறப்பட்டு புயலாய் கடக்கிறேன்
என்னைய யானே காப்பாற்றி
கொள்வதற்கு திரணியற்ற அபலையாய்.



## குட்டீஸ் பக்கம்



# ஓநாயும் நரியும்

ஒரு காட்டில் ஓநாயும் நரியும் வாழ்ந்து வந்தன. ஓர் நாள் காட்டு வழியில் சென்று கொண்டிருக்கும்போது ஓநாய்க்கு பசி எடுத்தது. அப்போது ஓநாய் கூறியது நரியே நீ எனக்கு உணவு கொண்டுவரவில்லை என்றால் உன்னை உண்டு விடுவேன் என்றது. அதற்கு நரி நான் உடனே பக்கத்து கிராமத்திற்கு சென்று ஓர் ஆடு இரண்டு குட்டி போட்டுள்ளது அதில் ஒன்றைத் தூக்கி வருகிறேன் என்றது. அது உடனே சென்று ஆடு பார்க்காத வேளை ஓர் ஆட்டுக்குட்டியைத் தூக்கி வந்து கொடுத்தது. ஓநாய் அந்த ஆட்டுக்குட்டியை உண்டது. அதற்கு பசி அதிகரித்தது. அதற்கு ஓநாய் கூறியது நானே சென்று தூக்கி வருகிறேன் என்றது. ஓநாய் கிராமத்திற்கு சென்று ஆடு பார்க்காதபோது ஆட்டுக்குட்டியைத் தூக்க நெருங்கியது. ஆடு அதைக் கண்டதும் கத்த ஆரம்பித்தது. அங்கு ஊர் மக்கள் எல்லோரும் திரண்டனர். அந்த ஓநாயை அடித்துவிட்டு சென்றனர். அது காட்டிற்கு நடந்து சென்றது. மறுநாள் வயல் பக்கமாகச் சென்று கொண்டிருக்கும்போது மறுபடியும் ஓநாய்க்கு பசி எடுத்தது. ஓநாய் நரியைப் பார்த்து எனக்கு ஏதாவது உணவு கொண்டுவரவில்லை என்றால் உன்னை உண்டு விடுவேன் என்றது. நரி கூறியது பக்கத்தில் தோட்டக்காரனின் மனைவி ரொட்டி சுட்டுக் கொண்டிருக்கிறாள். உடனே சென்று நான் எடுத்து வருகிறேன் என்று கூறி உடனே சென்று தோட்டக்காரனின் மனைவி பார்க்காதபோது ஆறு ரொட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து ஓநாய்க்கு கொடுத்தது. ஓநாய் உண்டதும் அதற்கு பசி அதிகரித்தது. ஓநாய் கூறியது நானே சென்று எடுத்து வருகிறேன் என்று கூறி வீட்டிற்குள் சென்று ரொட்டியைத திருடும்போது தோட்டக்காரனின் மனைவி கண்டதும் கத்தினாள். அதற்கு தோட்டக்காரன் வந்து ஓநாயை அடித்து விரட்டி அனுப்பினான்.



மறுநாளும் வயல் வெளியில் சென்று கொண்டிருக்கும்போது மறுபடியும் ஓநாய்க்கு பசி எடுத்தது. ஓநாய் நரியைப் பார்த்து எனக்கு நீ உணவு கொண்டுவரவில்லை என்றால் உன்னை உண்டு விடுவேன் என்றது. அதற்கு நரி கூறியது பக்கத்து ஊரில் இறைச்சிக்கடை உள்ளது அங்கு சென்று எடுத்து வருகிறேன் என்றது அதற்கு ஓநாய் நானும் உன்னோடு வருகிறேன் என்றது. அதற்கு நரி சரி இருவரும் செல்வோம் என்றது. இருவரும் அங்கு சென்று இறைச்சியை உண்ண ஆரம்பித்தன. நரி உண்பதும் துளையினால் சென்று பார்ப்பதுமாக இருந்தது. அதற்கு ஓநாய் கேட்டது நரியே ஏன் சென்று சென்று வருகிறாய் எனக் கேட்டது. அதற்கு நரி யாராவது வருகிறார்களா எனப் பார்க்கிறேன் என்றது.

அப்போது இறைச்சிக்கடைக்காரன் வந்தான். நரி துளையினால் ஓடித் தப்பியது. ஓநாயை இறைச்சிக்கடைக்காரன் அடித்துக் கொன்று விட்டான். அதன்பின் நரி சந்தோசமாக வாழ்ந்தது.

**கி.சங்கவி**
**யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்**

# வாரமொரு குறள்



*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்.*

**பொருள் : வாழ்க்கை எனும் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைவோர், தலையானவனாக இருப்பவனின் அடி தொடர்ந்து செல்லாவிடில் நீந்த முடியாமல் தவிக்க நேரிடும்.**

# அம்மா

பொறுமையின் பிறப்பிடமே
கருணையின் உறைவிடமே
கண்தனில் கருணை கொஞ்சும்
களங்கமற்று மனம் மிளிரும்

தூய பரிவுடன் எம்மை
தூக்கமின்றி காத்தவளே
பத்து மாதம் சுமந்தவளே
தாய்த்திரு நாட்டை காத்தவளே

சிறு வயதில் இருந்து
பெரு வயது வரை காத்தவளே
திருமணம் எனும் பந்தையத்தில்
காத்து வந்தவளே


காதலினால் உலகை துறந்தாலும்
சாகாதம்மா உன் மேலுள்ள பாசம்
உலகத்து மாந்தர்க்கெல்லாம்
கண்கண்ட தெய்வம் நீதானே.



**சு.வித்தியா**
**தரம் –06**
**யா/இந்து மகளிர் கல்லூரி**

# சைமன் காசிச்செட்டி

01. இவர் புத்தளம் மேற்கு கரையோரத்தில் பெரிய பட்டணமாகவும், துறைமுகமாகவும் விளங்கிய கற்பிட்டியில் பிறந்தார்.
02. இவர் 1807 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் பிறந்தார்.
03. இவரது தாய், தந்தையர் பெயர் தாய்:மேரிறொசைறோ தந்தை : காபிரியேல் ஆகும்.
04. இவர் ஆரம்பக் கல்வியை தனது சொந்த ஊராகிய கற்பிட்டியில் கற்றார்.
05. இவர் உயர்கல்வியை புத்தளத்திலும், கொழும்பிலையுமலும் கற்றார்.
06. இவர் சிங்களம், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, அரபு, போர்த்துக்கீசம், டச்சு, இலத்தீன், கிரேக்கம், அரேபிய ஆகிய மொழிகளைக் கற்றார்.



07. காசிச்செட்டி அவர்கள் 17 வயது இளைஞனாக கற்பிட்டி நீதிமன்றத்தில் கடமை ஆற்றத் தொடங்கினார்.
08. இவர் அந்நாட்களில் பிரதம நீதியரசராகப் பதவி வகித்த சேர்.சாள்ஸ் மார்ஷல் பிரதம படைத்தளபதியாக இருந்த சேர்.ஜோன்வில்சன் ஆகியோரின் நன்மதிப்புரைகளுடன் "சிலோன் கசற்றியர்" என்னும் பெயரோடு 1834இல் புத்தகத்தை வெளியிட்டார்.
09. 1833 ஆம் ஆண்டிலே, அவரது இருபத்தேழாம் வயதில், அவர் வகித்து வந்த மணியகாரன் பதவியோடு சேர்த்து, மாவட்ட முதலியாராகவும் காசிச்செட்டி அவர்கள் நியமிக்கப்பட்டமை அவரது ஆற்றலைக் கூறாமலே விளக்கி நிற்கின்றன.

**ச.விபூஷன்**
**[யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி]**

# பொது அறிவு

01. உலகின் மிகப்பெரிய தீபகற்பம் எது?
**இந்தியத் தீபகற்பம்**
02. உலகின் மிகச் சிறிய நாடு எது?
**வத்திக்கான்**
03. உலகின் எல்லா வகையான வெப்பநிலையிலும் வாழும் உயிரினம் எது – **நாய்**
04. மனித உடலில் இரத்தம் செல்லாத பகுதி எது?
**கண்ணின் கருவிழி**
05. உலகில் மிகப் பெரிய நன்னீர் ஏரி எது?
**ஐம்பெரும் ஏரி**
06. சீனாவின் துயரம் என அழைக்கப்படும் நதி எது?
**குவாங்கோ நதி**
07. இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது? – **அகலவத்தை**
08. ஈர வலயத்துக்கு எதன் மூலம் மழை கிடைக்கிறது?
**தென்மேல் பருவக்காற்று**
09. இலங்கையின் நிர்வாக நகரை பெயரிடுக?
**ஸ்ரீஜயவர்த்தனபுர**
10. உலகின் இரண்டாவது பெரிய கண்டம் எது?
**ஆபிரிக்கா**
11. உலகின் மிகப் பெரிய ஆழி?
**மரியானாஆழி**
12. நேரத்தை கணிப்பதற்கு பயன்படும் நெட்டாங்கு?
**$0^{o}$ நெட்டாங்கு**
13. இலங்கைஅமைந்துள்ள சமுத்திரம்?
**இந்துசமுத்திரம்**
14. ஆசியாக் கண்டத்தில்
**ஆட்டிக்**
15. இலங்கையில் காணப்படும் மலைகள் எவ் வடிவில் அமைந்துள்ளன? – **நங்கூர வடிவில்**

**ம.கபில்ராஜ் :**
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி

# தேயிலைப் பயிர்ச்செய்கை

மத்திய மலைநாட்டில் மேற் கொள்ளப்படும் ஒரு முக்கியமான விவசாய நடிவடிக்கையாகத் தேயிலைப் பயிர்ச்செய்கை காணப்படுகிறது. இது ஒரு அயன வலயப் பயிராகும். இது பிரித்தானியாவின் ஆட்சிக்காலத்திலேயே இலங்கை க்கு கொண்டுவரப்பட்டது. தேயிலைச்செடி இலங்கைக்கு 1839 இல் அறிமுகம் செய்யப்பட்டது.

இலங்கையில் 1867 இல் பிரித்தானியா நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் ரெயிலர் என்பவரால் தேயிலைத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு விளையும் தேயிலை மிகவும் சுவையானதாக இருப்பதனால் அது வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மத்திய மலைநாட்டுப் பிரதேசங்கள் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற இடமாக காணப்படுவதற்கு அப்பிரதேசத்தில் தரை அமைப்பு அங்கு நிலவுகின்ற காலநிலை என்பன சாதகமாக அமைகின்றன. மத்திய மலைநாட்டைச் சேர்ந்த நுவரெலியா, கண்டி, பதுளை போன்ற மாவட்டங்களில் தேயிலை கூடுதலாகப் பயிரிடப்படுகின்றது. இத்தகைய பிரதேசங்களில் தேயிலை பயிர்ச்செய்கை செழிப்பாக நடைபெறுவதற்குரிய சாதகமான காரணிகள் உள்ளன.

**தொல்காப்பியன்**
தரம் - 08 யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி

# மலையக மாணவர்களின் கல்வி இடைவிலகலுக்கு யார் பொறுப்பு

"என்ர இரண்டு தங்கச்சியையும் பார்க்கிறதுக்கு ஆக்கள் இல்லை. நான் தான் பார்க்க வேணும் அதால நான் பள்ளிக்கூடம் போறதில்லை. நான் தங்கச்சி ஆக்கள அழாம நல்ல வடிவா பார்ப்பன் எனக்கு ரொட்டியும் சுடத்தெரியும்"

இவனுடைய பெயர் கனகவேல் சாந்தகுமார் வயதோ 11. இவன் தரம் 06 இல் கற்க வேண்டியவன் ஆனால் கடந்த நான்கு மாதங்களாக பாடசாலைக்குச் செல்லவில்லை

நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் பிரதேசத்திலுள்ள அப்பஹமுவ கோரளை பிரதேசத்தில் அதிகரித்துவரும் மாணவர்களின் கல்வி இடைவிலகல் தொடர்பில் கலந்துரையாடிய போது பாடசாலையை விட்டு இடைவிலகிய அந்த மாணவன் இவ்வாறு தெரிவித்தான்.

இந்தவிடயம் தொடர்பில் கருத்துத்தெரிவித்த பன்மூர் தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி பி. குமாரசிறி "எங்கட பாடசாலையில படிக்கிற பிள்ளையள்ள இந்த வருடம் 10 பேர் இடை விலகி இருக்கிறாங்க."

குறிப்பாக தாய்மார் வெளிநாடு செல்வதால் தந்தையர் பிள்ளைகளை பராமரிப்பது கிடையாது. அவர்கள் வேறுதிருமணம் செய்துவிடுகின்றனர். இதனால் தமக்கு கீழுள்ள பிள்ளைகளை பராமரிப்பதற்காக பள்ளிக்கு வரும் பிள்ளைகளை நிறுத்தி விடுவாங்கள். மாணவர்களின் பெற் றோர் அவர்களின் கல்வி தொடர்பில் பெரிதும் கரிசனை எடுத்துக்கொள்வதில்லை. தாம் கொழுந்து பறிக்கப் போவதற்காக பிள்ளைகள் மீது அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. அத்

பட்ட "திறி எல் ஆசிரியர்களில் சிலர் பன்மூர் பாடசாலையிலும் இருக்கிறாங்க" அவங்க படிச்சிருப்பது ஓ.எல் மட்டும்தான் இவங்க எப்படி எங்கட பஷங்களுக்கு படிச்சுக் கொடுப்பது.?

இங்கு நிக்கும் நாம் அனைவருமே அதே ஸ்கூல்ல தான் ஓ.எல் வரை படிச்சம் பிறகு ஹயிலன்ட் ஸ்கூல்ல ஏ.எல் படிச்சம் நாங்க எங்கட ஸ்கூல முன்னேற்ற வேணும் எண்டு நினைக்கிறம்.

அதுக்கு அங்கிருக்கின்ற நிர்வாகம் தடையாக இருக்கின்றது. கடந்த 8 வருடமாக பழைய மாணவர் சங்கத்தினையே இயங்க விடுவது இல்லை. எப்படி முன்னேற்றம் வரும்ம என தந்தையொருவர் குறிப்பிட்டார்

பின்னர் "நானும் இந்த ஸ்கூல்ல ஓ.எல்



வரை படிச்சனான். இப்ப பேராதெனிய பல்கலைக்கழகத்தில பீ.ஏ முடிச்சிட்டன்" என்று குறிப்பிட்ட முருகேசு "அமெரிக்காவின் நாசாவில் மூன்று வருட பயிற்சியை முடிக்கிறதுக்கு

முதல் –16 வரையான வயதுகளில் கல்வியிலிருந்து இடைவிலகுவதற்கு பருவக்கோளாறு, காதல்மயம், போதைக்கு அடிமையாதல், மது போன்றனவும் காரணமாக அமைகின்றது.

எனவே நான் எமது மாணவர்களுக்காக பன்னாட்டு உதவிகள் மூலம் சலுகைகளைத் தேடிப் பெற்றுக்கொடுத்து வருகின்றேன். காரணம் இடைவிலகல் என்பது எனது பாடசாலையில் இருக்கக் கூடாது என்பதற்காக பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன்எனத் தெரிவித்தார் அதிபர்.

இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த அப்பகுதி கிராம உத்தியோகத்தர் உதயகுமார் இப்பகுதியில் இடைவிலகிய மாணவர்களில் அனேகமானவர்கள் பொருளாதாரத்தை குற்றம் சாட்டுவது தவறானது.

இங்குள்ள ஒருசிலரைத் தவிர ஏனையவர்களுக்கு கல்வி மட்டத்திலுள்ள போதிய அறிவின்மையும் சரியான வழிகாட்டல் இன்மையுமே காரணமாக இருக்கின்றது.

பெற்றோர்கள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி கொழுந்து பறிக்க தோட்ட வேலைகளுக்கு சென்றுவிட்டு திரும்பி வீடு வந்ததும் இருவரும் ஒன்றாக மது அருந்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதனால் அதனைப் பார்க்கும் இவர்களின் பிள்ளைகளும் அவர்களின் நடவடிக்கையிணைப்பார்த்து சிறுவயது முதல் மது அருந்தும் பழக்க வழக்கங்களையும் சமூக சீர்கேடான பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்கின்றனர்

இது அவர்களின் கல்வியை முற்று முழுதாக பாதிக்கின்றது. இதுவும் மாணவர்களின்



குமாரசிறி இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் தமது பாடசாலைக்கு "திறி எல்" ஆசிரியர்கள் தற்பொழுது வந்துள்ளார்கள்தான் என்றார்.

இதனைக் கேட்ட எமக்கு "திறி எல்" என்றால் அவர்களின் கல்வித் திறமைக்கு வழங்கப்பட்ட பட்டமா என கேட்டபோது இல்லை இல்லை இது அவங்கள் படித்துப் பெற்ற பட்டமல்ல. அவங்க படிச்சிருப்பது ஓல் மட்டும்தான். இவர்களை 5 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கே கற்பிக்க விட்டுள்ளது எமக்கு கவலையளிக்கின்றது. ஆனா இவங்க இப்பதான் தங்களின் பாடத்திட்டத்துக்கான கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு பயிற்சி வகுப்புக்களுக்குச் சென்று வருகின்றார்கள்.

இவர்களை எல்லோரும் "திறி எல்" என்றே குறிப்பிடுவார்கள். இது நாங்க இவர்களுக்கு செய்யவேண்டிய சலுகைகள். "லோன், லீவு, லவ்" இவற்றுக்கு இடமளிக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் எதிர்பார்ப்பு.

துடன் தமது தேவைகளுக்காகவும் வீட்டிலுள்ள வேலைகளைச் செய்வதற்காகவும் ஏனைய பிள்ளைகளைப் பராமரிப்பதற்காகவும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தினை வீணடிக்கின்றோம் என்பது கூட தெரியாமல் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தி விடுகின்றனர்.

எனவே இதுக்குக் காரணம் பெற்றோருடைய அக்கறையின்மையே. இந்தநிலை மாற்றப்பட வேண்டும். என்றார்.

அது மட்டுமன்றி பருவவயதை எய்திய வர்கள் பாலின ஈர்ப்பு, நவநாகரீக மோகம், மது, போதைவஸ்து போன்றவற்றுடன் வயதுக் கட்டுப்பாடற்ற நண்பர்களின் தொடர்பு ஏற்படுவதனாலும் தமக்கு மேற்பட்டவர்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று உழைப்பதன் மூலம் அவர்களின் கைகளில் அபரிமிதமான பணப்புழக்கம் காணப்படுவதும் இவர்கள் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்துவதற்கு முக்கிய காரணமாக அமைவதாக குற்றஞ் சாட்டுகின்றார் அதிபர்.

ஆனால் "எங்கட ஊர்ல இருக்கிற பன்மூர் தமிழ் ஸ்கூல்ல படிக்கிற பஷங்க ஸ்கூலுக்கு போகாததற்கு முக்கிய காரணம் ரீச்சர்மார் தான். என்று வேதனையுடனும் உருக்கத்துடனும் பன்மூர் பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பான அக்கறையுடனும் எதிர்பார்ப்புடனும் தெரிவிக்கின்றார் லட்சுமன் கருணாநிதி

அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டிய வீதிதிருத்தும் வேலைகளை மக்க ளின் நலன்கருதி தாம் செய்வதாக கூறிக்கொண்டு வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஊர் மக்கள் "அப்பகமுவ கோரளை பிரதேசத்தில் பன்மூர் தமிழ் ஸ்கூல்ல அதிகமான பஷங்க ஸ்கூலுக்கு போறதில்லை இதுக்கு முக்கிய காரணம் ஊவா மாகாணத்தில் தெரிவு செய்யப்

இதே ஸ்கூல்ல படிச்ச அமிர்த குணராஜ் போயிருக்கின்றார். அதேபோல பலபேர் அரசாங்க வேலை பார்க்கிறாங்கள்." எனவே திறி எல் ரீச்சஸ்தான் இதுக்குக் காரணம் என சுட்டிக்காட்டுகின்றனர்.

இது இப்படி இருக்கின்றபோது கடந்த எட்டு வருடமாக மட்டும் ஏன் அதிகமான மாணவர்கள் இடை விலக வேண்டும். இங்க

இடை விலகலுக்கு காரணமாக அமைகின்றது.

குறிப்பாக இங்கு சிறந்த கல்வி தரப்படுத்தல் நிலையில் ஆசிரியர்கள் இல்லாததும் இதற்கொரு முக்கிய காரணமாக அமைகின்றது.

அவர்கள் தமக்கான கல்வியினைத் தாமே சிறந்த முறையில் கற்றுக் கொள்ளாத போதும் தாம் கற்பிக்கும் மாணவர்களுக்கு எவ்வாறு கல்வியினை கற்றுக் கொடுக்கப் போகின்றார்



லக்ஷா

ஆசிரியர்களின் கற்பித்தல் திறமை போதாமல் உள்ளதோடு அவர்களுக்கான கல்வி அறிவும் போதாமல் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக பன்மூர் பாடசாலை அதிபர், ஆசிரியர்களிடம் கேட்டபோது

இங்கு அனேகமான மாணவர்கள் 09

கள் என்பது மிகப்பெரும் கேள்விக் குறியாக இருப்பதுடன் இவர்களிடம் கல்வியை கற்பதற்கு விருப்பமின்றி பாடசாலைக்கு மாணவர்கள் வரமறுத்து தொடரச்சியாக இடைவிலகுவதற்குக் காரணமாக அமைகின்றது என குற்றஞ் சாட்டியுள்ளார்.

தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி. பி.

ஏனென்றால் இவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களாம். எங்கட பாடசாலையில தரம் 1-11 வரையான வகுப்புக்களுக்கு 40 ஆசிரியர்களும் 545 மாணவர்களும் கற்கின்றார்கள்.

மாணவர்களை வழி நடாத்த வேண்டிய நேரத்தில் ஆசிரியர்களை வழிநடாத்துவது என்பது சிரமமாகவே உள்ளது. இதுவும் மாணவர்கள் இடைவிலகுவதற்கு காரணமாக அமைந்துவிடுகின்றது என்பது கவலைக்கிடமான விடயமாக உள்ளது.

அத்தோடு தமது வீடுகளுக்கு அருகில் தங்கியுள்ளவர்கள் கொழும்பு காலி, கம்பளை போன்ற பகுதிகளுக்கு வேலைக்கு சென்று விட்டு வீடுதிரும்பி வரும்போது நவநாகரீக பொருட்களுடன் வந்து சுற்றித்திரிவதைப் பார்க்கின்ற மாணவர்கள் தாமும் உழைத்து தமக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொள்ளவேண்டும் எனக்கருதி பாடசாலையைவிட்டு இடைவிலகிச் செல்கின்றனர்.

ஒவ்வொருவருக்கும் பல்வேறுபட்ட விதங்களில் இவ்வாறு பல்வேறுபட்டவர்களை குறையாகக் கூறுவது சரியானதாகவோ அல்லது தவறானதாகவோ பார்க்கவேண்டியது எமது கடமையல்ல. ஆனால் இந்த மாணவர்கள் இடைவிலகுவதற்கு காரணம் குற்றங்களோ அல்லது பெற்றோரோ என்பதை விட கல்வியை ஊக்கத்துடன் தொடர வைக்க சிந்திக்கவேண்டியது அவசிய தேவையாகவே உள்ளது.


இங்கிருக்கின்ற மாணவர்கள் ஒவ்வொருவரும் தமக்கான கல்வியை தகுந்த முறையிலும் தரமான முறையிலும் பெற்றுக் கொள்ள விரும்பாதது தாம் பெற்றோர் மீதும் தம்மை

(தொடர்ச்சி 23 இல்...)

# மன அழுத்தத்துக்கான முகாமைத்துவம்

மன அழுத்தம் என்பது ஒரு நோயல்ல. சூழல் காரணிகளால் ஏற்படுவது. இதன்போது உடலுக்குத் தேவையான சக்தித் தொகுப்பு கூட்டப்படுகின்றது. இது உடற்றொழிலியல் எல்லையைத் தாண்டும்போது நோய்க்காரணியாக அமைகின்றது.

இதன்போது மூளையானது மன உளைச்சலிற்கான சில ஹோர்மோன்களை விடுவிப்பதன்மூலம் உடலின் சக்தித் தொகுப்பு அதிகரிக்கப்படுவதன் விளைவாகக் குருதிக் குளுக்கோஸ், இதயத் துடிப்பு வீதம், குருதியமுக்கம், தசைத் தொழிற்பாடு என்பன அதிகரிக்கப்படுகின்றன. இதனால் உயர் குருதியமுக்கம், சலரோகம், அல்சர் போன்ற நோய்த் தாக்கங்கள் மேலும் அதிகரிக்கப்படுகின்றன.



இதன் அறிகுறிகளாக தலையிடி, வயிற்றுக் கோளாறு, நித்திரைக் குழப்பம், உயர்குருதி அமுக்கம், வாய் உலர்தல், அதிகரித்த தடவை சலம் வெளியேறல், கோபம், உடல் உளத் தாக்கங்கள், பாரிசவாதம் என்பன அடங்கும்.

**முகாமைத்துவம்**

மன அழுத்தம் அவதானிக்கப்படின் அதனைக் கவனிக்காமல் விடாது அதற்கான காரணத்தையும், அதற்கு உடல் எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதையும், அதனை எவ்வாறு தவிர்க்கமுடியும் என்பதையும் அவதானிக்க வேண்டும்.




இதன்போது மிகவும் ஆறுதலாக ஆழமான பெருமூச்சு எடுத்து விடுவதன் மூலம் அதிகரிக்கும் இதயத் துடிப்பு சுவாச வீதத்தைக் கட்டுப்படுத்தலாம். மனதுக்கு அமைதியாக யோகா, தியானம் போன்றவற்றில் ஈடுபடல், பிடித்த விளையாட்டுக்கள் விளையாடல், இதமான இசை இரசித்தல், சித்திரம் வரைதல், ஆன்மிகத் துறைகளில் ஈடுபடல் போன்றனவும் மிகவும் சிறந்தவை. போதிய அளவு நித்திரை அவசியம்.

மன அழுத்தம் ஏற்படுத்துகின்ற காரணிகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் அல்லது அழுவதன் மூலமோ, கோபத்தை வெளிக்காட்டுவதன்மூலமோ வெளிபடுத்துதல் சிறந்தது.

நீண்டநேரம் ஈடுபடும் வேலைகளில் இடையிடையே இடைவேளை எடுத்துக்கொள்ளுதல், அந்த நேரங்களில் மன உளைச்சலை, களைப்பைப் போக்கும் வகையிலான செயல்களில் ஈடுபடல் சிறந்தது. அத்துடன் செய்யும் வேலைகளில் நிதானத்துடன் பதற்றமின்றி ஆறுதலாக இலகுவான முறையில் ஈடுபடுதலுடன் நேர அட்டவணையின் பிரகாரம் ஈடுபடுதலும் மிகவும் சிறந்தது.

மது அருந்துதல், புகைப்பிடித்தலைத் தவிர்த்துக் கொள்வதுவும் மனஉளைச்சலைத் தவிர்ப்பதற்கான வழிகளில் ஒன்றாகும்.

- எஸ். கோபிகா -
மருத்துவபீட மாணவி.

# நீரிழிவு, இதய நோயாளிகள் உருளைக்கிழங்கு உண்ணலாமா?

**நீரிழிவு, இருதய நோயாளிகள் உருளைக்கிழங்கு உண்ணலாமா?**

உருளைக்கிழங்கை விரும்பி உண்ணாதவர்கள் எவருமே இருக்கமாட்டார்கள். சுவையில் மட்டுமல்ல போசணையிலும் உருளைக்கிழங்கு சிறந்த உணவாகும். நீரிழிவு மற்றும் இருதய நோய் உடையவர்களும் உடல் எடையைக் குறைக்க விரும்புவோரும் உருளைக்கிழங்கு ஒரு எட்டாக்கனியாக இருப்பதாக எண்ணி வருந்தத் தேவையில்லை. நீங்களும் உங்கள் உணவில் உருளைக்கிழங்கைச் சேர்த்துக் கொள்ளலாம். எவ்வாறு?

எமது பிரதேசத்தின் பிரதான உணவான அரிசியைச் சோறாகவும், அதன் மாவினைப் பிட்டு, இடியப்பமாக ஆக்கியும் நாம் உண்கிறோம். அரிசியிலுள்ள பிரதான உணவுக்கூறு காபோவைதரேற்று. உருளைக்கிழங்கிலுள்ள பிரதான உணவுக்கூறும் காபோவைதரேற்றே ஆகும்.

ஒருவர் ஒரு நேர உணவின்போது சராசரியாக உண்ணும் அவித்த உருளைக்கிழங்கிலுள்ள காபோவைதரேற்றின் அளவான 1/3 டம்ளர் சமைத்த குத்தரிசிக்கு அண்ணளவாகச் சமனாகிறது.



எனவே, நாம் உருளைக் கிழங்குக் கறியை எமது உணவில் சேர்க்கவிரும்பினால் 1/3 டம்பளர் சோற்றைக் குறைத்து அல்லது ஒரு இடியப்பத்தைக் குறைத்து உண்ணலாம். இதன்மூலம் நாம் மேலதிகமாக எடுக்கும் காபோவைதரேற்றுத் தவிர்க்கப்படுகிறது.

மேலும், அவித்த உருளைக் கிழங்கிற்கும் குத்தரிசிச் சோறு மற்றும் தீட்டாத அரிசி மா போன்றவற்றிற்கும் கிளைசீமிக் இன்டெக்ஸ் (Glycaemic index) என்று சொல்லப்படுகின்ற அதாவது, உண்டபின் குருதியில் குளுக்கோஸ் அதிகரிப்பு ஏற்படும் வீதம் அண்ணளவாகச் சமனாக உள்ளது. இது நீரிழிவு நோயாளிகளுக்கு உகந்ததாக உள்ளது. கிளைசீமிக் இன்டெக்ஸைக் குறைப்பதற்கு நீரிழிவு நோயாளிகள் இவ்வுணவுடன் மரக்கறி வகைகள் மற்றும் இலைக்கறி வகைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். தீட்டாத, அரிசியுடன் (Brown rice) ஒப்பிடும் போது உருளைக்கிழங்கு குறைந்தளவு கொழுப்புச்சத்தைக் கொண்டுள்ளது. அரிசியில் காணப்படாத சில கனியுப்புக்களைக் கொண்டுள்ளது. இவற்றைவிட உருளைக்கிழங்கு மிகவும் குறைந்த அளவிலேயே சோடியத்தைக் கொண்டுள்ளது. எமது குருதியமுக்கத்தைச் சரியான முறையில் பேணுவதற்கு சோடியம் உப்புக் குறைவான உணவுகளும் உதவிபுரிகின்றன.

இவ்வாறு பல நன்மைகள் அவித்த உருளைக்கிழங்கில் இருப்பினும் கறியாகச் சமைக்கும்போது அதில் சேர்க்கப்படும் தேங்காய்ப் பால், உப்பு, எண்ணெய் என்பன உருளைக்கிழங்கின் ஆரோக்கியமான போசணைக் கூறுகளை மாற்றியமைத்து விடுகின்றன. எனவே, உருளைக்கிழங்கை உணவில் சேர்த்துக்கொள்ளும்போது மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டால் சுவையாக உண்டு ஆரோக்கியமாக வாழலாம்.

R .யயோஜனி லக்ஸ்மன்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

# கேள்விக்கு என்ன பதில்

**எனக்கு வயது 60. சிறிது காலமாக எனக்கு முதுகுவலி யும், முழங்கால் மூட்டு வலியு மாக உள்ளது. கல்சியம் மாத் திரைகள் அல்லது கல்சியம் உள்ள பால்மா வகைகள் ஏதா வது பாவிக்கலாமா?**

கல்சியமானது உடலுக்கு மிகவும் அதியாவசியமான கனியுப்பாகும். இது என்புகளின் உருவாக்கம். தசைச்சுருக்கம், நரம்பு கணத்தாக்கம், ஓமோன் சுரப்பு, நரம்பு, மூளை போன்றவற்றின் தொழிற்பாடுகளுக்கு அத்தியாவசியமானதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் நீரில் அதிகளவு கல்சியம் காணப்படுகின்றது. எனவே அன்றாடம் உள்ளெடுக்கும் நீரின்மூலமாகவும், உணவின் மூலமாகவும் உடலுக்குப் போதுமான கல்சியம் கிடைக்கின்றது.

பால், பால் உற்பத்திப் பொருள்களானயோக்கட், சீஸ், மீன், முட்டை, மரக்கறிவகை, தானியவகை, பழச்சாறு என்பவற்றிற் போதியளவு கல்சியம் காணப்படுகின்றது. எனவே கல்சியம் கூடிய அளவுகளில் உள்ள பால்மா வகைகளையும், மாத்திரைகளையும் பாவிக்கவேண்டிய அவசியம் பொதுவாக இல்லை.

நாளொன்றுக்கு உடலுக்குச் சராசரியாகத் தேவையான கல்சியத்தின் அளவு 1000–1300mg ஆகும். சாதாரணமாகக் குருதியில் உள்ள கல்சியத்தின் அளவு 8.5 – 10.2 mg/dl ஆகும். கல்சியம் அதிகளவு உள்ள பால்மா வகைகளையோ அல்லது மாத்திரைகளையோ உள்ளெடுக்கும்போது கல்சியமானது இரத்தக்குழாய்கள், மென் இழையங்கள் போன்றவற்றிற் படிவடைகின்ற தன்மை அதிகரிக்கின்றது.

இருதயக் குருதிக் குழாய்களிற் படிவதன் மூலம் மாரடைப்புப் போன்ற ஆபத்தான நிலைகளும், சிறுநீரகங்களில் தொடர்ந்து படிவதன் மூலம் சிறுநீரகக் கற்கள் உருவாகின்ற நிலையும் ஏற்படுகின்றது.

கல்சியம் மாத்திரைகள் வேறு சில மருந்துகளுடன் இடைத் தாக்கத்தில் ஈடுபடுவதன் மூலம் அவற்றின் செயற்றிறனைப் பாதிக்கின்றது. அதுபோல் சிலவகை மருந்துகளின் அகத்துறுஞ்சலையும் பாதிக்கின்றது.

சில நோய்களைப் பொறுத்தமட்டில் (உதாரணம்– Osteoporosis) மேலதிகக் கல்சியமானது தேவைப்படுகின்றது. எனவே கல்சியம் மாத்திரைகளை மருத்துவர்களின் ஆலோசனையின்றிப் பாவிப்பதைத் தவிர்த்துக்கொள்வது நன்று.

* * *

**HbA1C என்றால் என்ன?**

நீரிழிவு நோயாளர்களின் குருதிக்குளுக்கோசின் அளவு உணவருந்த முன்னும், உண வருந்திய பின்னும் கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அவர்களுடைய சராசரி குருதிக் குளுக்கோசின் அளவும் கட்டுப்பாட்டில் இருந்தால் மட்டுமே அவர்களுடைய நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாக கருதப்படுகின்றது. HbA1C எனும் குருதிச் சோதனை செய்வதன் மூலம் 3 மாதகாலப்பகுதியில் அவரது சராசரி குருதிக் குளுக்கோஸ் மட்டம் எவ்வாறு இருந்தது என்பதை அறிய முடியும். HbA1C பெறுமானம் 6.5 தொடக்கம் 7.0 இற்கு இடைப்பட்டதாக இருப்பின் அவர்களில் பூரணமாகக் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்று கொள்ளப்படும்

- நன்றி -
நீரிழிவு சிகிச்சை நிலையம்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

தங்கையின் தங்கச் சங்கிலியை வாங்கிக் கொண்டு புறப்பட்டு வந்தவன் மீண்டும் வீடு திரும்பவில்லை. அதற்குப் பின்பும் நண்பர்களுடன் சேர்ந்து பல இடங்களுக்கு போய்வருகின்றான்.

மழை தூறத் தொடங்கியிருந்தது. கீழ்த் தளங்களை மூடக்கூடிய இரும்புத்தட்டுகள் இருந்தும் அவற்றை இழுத்து மூடினால் காற்றோட்டமிராது என்ற காரணத்தால் இந்த மூடிகளை ஓரளவு இழுத்து மூடிவிட்டு மிகுதிப் பகுதிகளுக்கு படங்குகளைத் தொங்கவிட்டிருந்தார்கள். மழை தொடங்கியதும் தொண்டர்கள் பலர் சேர்ந்து படங்குகளை இழுத்து கிடங்குகளை மூடினர். படங்குகளுக்கு பொறுப்பாக பெரிய பாரங்களைத் தூக்கி வைத்தனர். மேல்தளத்தில் யாரும் தென்படவில்லை.

தளத்தின் பின்பகுதியில் சிறிய அறை. அதில் சில பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை தும்புச்சிற்பங்கள் என்பது உற்று நோக்கும் போது தெரியவந்தது. இந்த அறையில் சரவணன் உட்கார்ந்திருந்தான்.

மழை தூறலாகத் தொடங்கி பலமாகப் பெய்ய ஆரம்பித்திருந்தது. குளிர்காற்றும் அடித்துக்கொண்டிருந்தது. சரவணன் குளித்துவிட்டு வெறும் மேலுடன் ஈரக்காற்சட்டையுடன் உட்கார்ந்திருந்தான். காற்சட்டை முழங்காலுக்கு மேல் மடித்துவிடப்பட்டிருந்தது. யாரும் எவருடனும் எந்தவிதமான கதைகளிலும் ஈடுபட முன்வராமல் ஒருவர் ஒருவரின் முகத்தை பார்ப்பதைத் தவிர்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

அங்கிருந்தவர்களில் ஒருவர் கிழவர். வயது அறுபது இருக்கும். வேட்டியை உடுத்தி சால்வையைத் தோளில் போட்டிருந்தார். அவர் கையில் ஒரு சிறிய பை. துணியாலான இந்தப் பையில்வேல்முருகன் ஸ்ரோர்ஸ் கொழும்பு 6 என்று எழுதப்பட்டிருந்தது. இந்த விலாசத்திற்கும் அவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமல் இருக்கலாம். இதுதான் அவர் தன் சொத்தாக தன்னுடன்கொண்டு வந்திருந்தது என்பதை ஓரளவு ஊகிக்கக்கூடியதாக இருந்தது. இன்னுமொருவரும் அங்கு இருந்தார். அவருக்கு வயது சற்றுக் குறைவாக இருக்கலாம். அவரும் ஒரு வர்த்தகராக இருக்கலாம் என்பதற்கு அடையாளங்கள் தென்பட்டன. ஒரு சாரத்தை உடுத்தி சேட் அணிந்திருந்தார். அவர் அதை உடுத்தியிருந்த விதத்தில் சாதாரணமாக அதை அணிவதில்லை என்பது நன்கு புலப்பட்டது. அரை மணித்தியாலம் சென்ற பின் அவர்தான் சற்றுத் தயக்கத்துடன் பேச்சைத் தொடங்கினார்.

‘இவங்களுக்கு சும்மா இருக்கேலாது, இந்த வாயை வச்சுக்கொண்டு தனிநாடு தனிநாடு’

எவரும் அவருடைய பேச்சைக் காதில் போடுவதாக இல்லை. இதைக்காட்டிக் கொள்ளாதவனாக சரவணன் யன்னல் வழியாகத் தளத்தை நோட்டம் விடுவதுபோல் பார்த்தான். யன்னல் அவனது பின்புறம் இருந்த தாகையால் திரும்பி குனிந்து பார்க்கவேண்டியிருந்தது. கதைத்தவர் தொடர்ந்தார். ‘கொழும்பில் வந்து கதைக்கிறாங்கள் சிங்களவற்றை இரத்தத்தில் குளிப்பமெண்டு கண்டறியாத தனிநாடு’

யாரும் அவருக்கு பதில்கொடுக்க முன்வரவில்லை. சரவணன் இருந்து கொண்டு தலைமயிரைக் கைகளால் கோதி விட்டான்.

பெரியவர் கேட்டார் ‘நீங்களென்ன கொழும்பா?’


‘ஓம்....... இரண்டு கடை பாருங்கோ, புறக்கோட்டையில் ஒன்று, தெகிவளையில் ஒன்று, போனமாதம்தான் எல்லாம் வாங்கிப் போட்டது. விட்டிட்டு வாறன் நான் நினைக்கவில்லை அங்கை ஏதும் மிச்சம் இருக்குமெண்டு’

‘இதைப்போல எத்தனை?’

‘நீங்கள்...?’

‘நான் நாகலிங்கம் சுருட்டுக்கடை... எனக்கென்ன சேதம் இழுத்து மூடிவிட்டு வாறன். ஒரு நூறு ரூபாய்க்கு சுருட்டு அவ்வளவுதான்.’

இதன் பின்பு நாகலிங்கம் தனது வாழ்க்கையை சுருக்கமாக கூறினார். தான் நாற்பது வருடங்களாக அந்தக் கடையை வைத்திருப்பதாகவும் 1958இலும் கப்பலில்




போனதாகவும் பணம் கொஞ்சம் இருந்ததாகவும் அதைத் தான் ஏற்கனவே வீட்டிற்கு அனுப்பி இருப்பதாகவும் கூறினார். தனக்கு இரண்டு பிள்ளைகள் எனவும் ஒருவர் கிளிநொச்சியில் கமம் செய்வதாகவும் மற்றவர் மட்டக்களப்பில் ஒரு வேலையில் இருப்பதாகவும் கூறினார். கடைசியாக முடிக்கும்போது ‘எனக்கிது வருமெண்டு தெரியும் இனி எங்க திரும்பி போறதெண்டும் அலுத்துக்கொண்டார்.

இதைக்கேட்டு அந்தக்கொழும்பு வியாபாரி தொடர்ந்தார். ‘இனித்தானே எல்லாம் இறக்குமதி செய்யப்போகினமாம். இந்த தட்டுப்பாடுகளெல்லாம் முடிஞ்சுபோட்டுதே. என்ன வேணுமெண்டாலும் வாங்கலாம். ஜப்பான்காரன், ஜேர்மன்காரனெல்லாம் தொழிற்சாலைகள் கட்டப்போகின்றான்கள். இவங்களுக்கு ஜே.ஆரைத் தெரியாது பாருங்கோ. இதனை விட்டுப்போட்டு தனிநாடு தனிநாடு கண்டறியாத தனிநாடு. வெள்ளவத்தையில் என்ர வீட்டையும் விட்டுப்போட்டு வாறன். அங்க அப்படி ஒண்டும் வராது’ இப்படி கொழும்பு வியாபாரி கூறிமுடிக்கவும் நாகலிங்கம் தொடர்ந்தார்.

இந்த அரசாங்கம் வந்து முதல் செய்த வேலைவெங்காயத்தையும் மிளகாயையும் இறக்குமதி செய்ததுதான். அவங்களுக்கு நல்லாத் தெரியும் இதை விளைவிக்கிறதும் தமிழர் விற்கிறதும் தமிழர். நாலாங்குறுக்குத்தெரு ஆட்கள் பாடுதான் கெட்டது. எனி கடைபோடுறதெண்டால் எங்கடை பக்கத்தில்தான் கொண்டுவந்து போட வேணும்.

‘கடை, கடை, கடை, ஆகத் தெரிந்தது கடைதான். பிறகு உழுந்துவடை, மசாலாவடை, பருப்புவடை எண்டு அடி வாங்கிக்கொண்டு எல்லாத்தையும் தூக்கிக்கொண்டு ஓட்டம்.” மேசை மீது உட்கார்ந்து கதைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சரவணன் இவ்வாறு கதைக்கத் தொடங்கினான். தொடர்ந்தான் ‘ஆகத்தெரிந்தது ஒரு கடைதான்”

இருவரும் மௌனமாக இருந்தனர். சிறிதுநேரத்தின் பின்னர் கொழும்பு வியாபாரி சற்றுத் தயக்கத்துடன் நாகலிங்கத்தைப் பார்த்தவண்ணம் கூறத்தொடங்கினார்.

‘இந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் என்ன இருக்கு இண்டைக்கு யாழ்ப்பாணம் இப்படியெல்லாம் இருக்க காரணம் இந்த மணியோடர்தான். பொருளாதாரமெண்டு என்ன இருக்கு பனைதான்’

‘இதெல்லாம் இந்த நூற்றாண்டில கதைக்கிற கதையா? இப்படிச்சொல்லிக்கொண்டு அங்கு போய்க் கடையைப்போடுறது கொள்ளையடிக்கிறது. பிறகு அடிவாங்கிக்கொண்டு ஓடிவாறது” சரவணன், இப்படி பேச மற்றய மூவர்களும் அமைதியாக இருந்தனர்.

நாகலிங்கம் சொன்னார் எல்லாம் மனம் பாருங்கோ மனம். கொழும் புக்கடைக்காரர் கதையை நிறுத்த விருப்பமில்லாமல் தொடர்ந்தார்.

‘தனிநாடு தனிநாடெண்டு சொல்லுறம், நாங்களெல்லாம் இந்தியாவில் இருந்து வந்ததெண்டு சொல்லுறாங்க’

நாகலிங்கம் சொன்னர் சொல்லுவாங்க சொல்லுவாங்க இதைப்போல எத்தனைய சொல்லுவாங்க’.

சரவணன் கூறினான் ‘சிங்களவன்தான் இந்தியாவில் இருந்து வந்தது’

நாகலிங்கம் சுருட்டு ஒன்றை எடுத்து பற்றவைத்து புகையை இரண்டு தடவை இழுத்துவிட்டுக்கொண்டார். பின்பு கூறினார் ‘இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னால் தமிழ் மன்னன் எல்லாளன் இத்தீவு முழுவதையும் ஆண்டிருக்கிறான். அவனுக்குப் பிறகு சிங்களவனும் தமிழனும் மாறி மாறி ஆண்டிருக்கினம்.’

சற்று அமைதிக்குப் பின் கொழும்பு வியாபாரி ‘என்ன சொன்னாலும் அவங்களுக்கு நாட்டுப்பற்று இருக்குது பாருங்கோ, விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.’ நாகலிங்கம் தொடர்ந்தார்’ நாட்டுப்பற்று. நாட்டுப்பற்று நல்லது பாருங்கோ, ஆனால் அவங்கட நாட்டுப்பற்று எல்லை மீறி எங்கடைக்குள் வந்தால்தான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம்.’

‘நீங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சொல்லுறீங்களோ அதென்ன இப்ப வெள்ளைக்காரன் போட்டதுதானே’

‘இல்லை நான் அதுக்கு முந்திய எல்லைகளைச் சொல்லுறன்’

‘எந்த நாளைய கதை சொல்லுறியள்’ என்றார் கொழும்பு வியாபாரி.

‘முதல் துவக்கத்திலே இருந்து தமிழர்கள் வடக்கு கிழக்கு பகுதிலேயும் அநுராதபுரம் பகுதிலேயும் இருந்திருக்கினம். ஆயிரத்து இருநூறில் இருந்து தமிழருக்கு தனியாட்சி இருந்திருக்கு...’

‘எல்லைகள் இருந்திருக்கெண்டு சொல்லுறியளா?’

‘எல்லாம் இருந்திருக்கு வெவ்வேறு பகுதிகளாக பிரிச்சு ஆண்டிருக்கினம்...’

நாகலிங்கம் சுருட்டை சில தடவைகள் இழுத்துவிட்டு நன்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு தொடர்ந்தார். ‘நல்லூர்தான் தலைநகரம். வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று, பச்சிலைப்பள்ளி, கொட்டியாரப்பற்று, கரவாகுப்பற்று, கரைதுறைப்பற்று,கரைச்சிக்குடியிருப்பு, முள்ளியவளை, பனங்காமவன்னிமை, பாணமைவன்னிமை, என்று இருந்திருக்கு. இதில் பாணமை, பழுங்காமம், கொட்டியாரப்பற்று, கரைதுறைப்பற்று, கரவாகுப்பற்று, பனங்காமவன்னிமை, யாழ்ப்பாணமேலாண்மையை ஏற்ற சிற்றரசர்களாக ஆண்டிருக்கினம். இதில பாணமைவன்னிமை என்றால் கும்புக்கன் ஆறு மாணிக்க கங்கை இதுகளை தென்மேற்கு எல்லையாக கொண்டது. கதிர்காமம், குமணை, உகந்நை, பொத்துவில், அம்பாறை இதெல்லாம் இதுக்குள்ள இருந்திருக்கு. மேற்குப்பக்கமாக மகாவலி கங்கையையும் வடக்குப்பக்கமாக வெருகல் ஆற்றையும் கொண்டிருந்ததுதான் பழுங்காம வன்னிமை. மட்டக்களப்பும் வேடர்களின் வர்தனையும் இதில்தான் வருகுது. அடுத்து என்று கூறி நிறுத்திவிட்டு சுருட்டை வாயில் வைத்து இழுத்து ஊதினார். கொழும்பு வியாபாரி நாகலிங்கம் கூறுவதை உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்தார். நாகலிங்கம் தொடர்ந்தார்.

‘கொட்டியாரப்பற்று என்றால் தெற்குப்பக்கமாக வெருகல் ஆற்றையும் வடக்குப்பக்கமாக பறங்கி ஆற்றையும் கொண்டது. சேற்றுவில், மூதூர் தம்பலகாமம், திருகோணமலை, கந்தளாய், பதவில்குளம், பன்குளம், குச்சவெளி, நிலாவெளி, இதெல்லாம் கொட்டியாரப்பற்றுத்தான். மன்னாரைச் சேர்ந்தது தான் பனங்காமவன்னிமை. முல்லைத்தீவு முள்ளியவளையைச்சேர்ந்தது. இப்படித்தான் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது இருந்தது. 1619 இல் தான் யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் பிடிச்சு சங்கிலி மன்னனை நாடு கடத்தி தூக்குப் போட்டது.

**‘தனிநாடு தனிநாடெண்டு சொல்லுறம், நாங்களெல்லாம் இந்தியாவில் இருந்து வந்த தெண்டு சொல்லுறாங்க’ நாகலிங்கம் சொன்னர் சொல்லுவாங்க சொல்லுவாங்க இதைப்போல எத்தனைய சொல்லுவாங்க’. சரவணன் கூறினான் ‘சிங்களவன்தான் இந்தியாவில் இருந்து வந்தது’ நாகலிங்கம் சுருட்டு ஒன்றை எடுத்து பற்றவைத்து புகையை இரண்டு தடவை இழுத்து விட்டுக்கொண்டார். பின்பு கூறினார் ‘இரண்டாயிரம் வருடத்திற்கு முன்னால் தமிழ் மன்னன் எல்லாளன் இத்தீவு முழுவதையும் ஆண்டிருக்கிறான். அவனுக்குப் பிறகு சிங்களவனும் தமிழனும் மாறிமாறி ஆண்டிருக்கினம்.’ சற்று அமைதிக்குப் பின் கொழும்பு வியாபாரி ‘என்ன சொன்னாலும் அவங்களுக்கு நாட்டுப்பற்று இருக்குது பாருங்கோ, விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.’ நாகலிங்கம் தொடர்ந்தார்’ நாட்டுப்பற்று. நாட்டுப்பற்று நல்லது பாருங்கோ, ஆனால் அவங்கட நாட்டுப்பற்று எல்லை மீறி எங்கடைக்குள் வந்தால்தான் இந்தப் பிரச்சினைகள் எல்லாம்.’**

(தொடரும் .....)

# பெண்கள் மீதான வன்முறை

## பாலியல் வல்லுறவு

### ஒரு நோக்கு

**இணக்கம் ஏன் முக்கியமானதாகும்?**

பாலியலையும், உறவுகளையும் தொடர்பாடல், மரியாதை மற்றும் நேர்மை ஆகியன சிறப்பாக்குகின்றன.

இணக்கத்தைக் கேட்பதும், பெறுவதும் உங்களுக்கும், உங்களுடைய கூட்டாளிக்குமான மரியாதையை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் காட்டுகின்றது.

பால்நிலையையும், பாலியலையும் பற்றிய பாரம்பரியக் கருத்துக்களையிட்டு அது கேள்வியெழுப்புகின்றது.

தனது துணைவர் மீது ஒருவர் உணர்ச்சியைக் கொண்டிருக்கலாம் என்ற உரிமையை அது இல்லாதொழிக்கின்றது. உங்கள் உடலோ அல்லது உங்கள் பாலியல் தன்மையோ வேறு ஒருவருக்கும் சொந்தமானவையல்ல.

இணக்கத்திலான நடைமுறையில் உள்ளடக்கப்பட வேண்டும் என பெண்கள் எதிர்பார்ப்பது வழமையானது என்பதுடன், ஆரோக்கியமானதுமாகும்.

**பாலியல் வல்லுறவில் பாதிக்கப்பட்டவர்–தப்பிப்பிழைத்தவர் எதைச் செய்யக்கூடாது?**

* வைத்தியசாலையொன்றில் மருத்துவச் சோதனைக்கு முன்னர் உடலைச் சுத்தம் செய்தல்.
* வைத்தியசாலைக்கும், பொலிஸ் நிலையத்திற்கும் செல்வதற்கு முன் சம்பவத்தின் வேளையில் அணிந்திருந்த ஆடைகளை அகற்றுதல்.
* தன்னைத் தனிப்படுத்தல்.
* சந்தேகத்தில் இருக்கும்போது அமைதியாகத் தொடர்ந்துமிருத்தல். குடும்பத்தினரிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும், வாழ்க்கை தொழில புரிபவர்களிடமிருந்தும் உதவியை மறுத்தல்.

**பாலியல்வல்லுறவில் பாதிக்கப்பட்டவர், தப்பிப்பிழைத்தவர் எதைச் செய்ய வேண்டும்?**

நெருக்கமானதும், நம்பிக்கையானதுமான நண்பரிடம் அல்லது குடும்ப உறுப்பினரிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும். வைத்தியசாலைக்கும், பொலிஸ் நிலையத்திற்கும் உங்களுடன் துணைக்கு வரும்படி அவர்களைக் கேளுங்கள்.

24 மணித்தியாலங்களுக்குள் வைத்தியசாலையொன்றிலிருந்து மருத்துவ அறிக்கையொன்றைப் பெறுங்கள் (ஒன்றில் வைத்தியர் ஒருவரிடமிருந்து அல்லது சட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து). இதுவும் நீதிமன்றத்தில் சாட்சியமாகப் பயன்படுத்தப்படும்.

அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்யுங்கள்.

பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட விபரங்கள் செம்மையானவையா என்பதைப் பார்ப்பதற்கு எப்பொழுதும் சோதியுங்கள்.

பதிவு நீங்கள் புரிந்துகொள்ள முடியாத மொழியொன்றில் இருந்தால், கைச்சாத்திடுவதற்கு முன் மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கேளுங்கள் (அந்த மொழியை நண்பர ஒருவர் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் புரிந்துகொள்ள முடியுமென்றால் உதவியாக இருக்கும்).

முறைப்பாட்டின் அல்லது பதிவின் பிரதியொன்றையும், முறைப்பாட்டை எடுத்த உத்தியோகத்தரின் பெயரையும் கேளுங்கள்.

மேற்கோள் இலக்கமொன்றையும் கேளுங்கள்.

ஆற்றுப்படுத்தல் மற்றும் வாழ்க்கைத் தொழில் உளவியல் உதவியை நாடுங்கள் (ஆற்றுப்படுத்தலை வழங்கும் தாபனங்களுக்கான தொடர்பு) குறிப்புப் புத்தகமொன்றில் சம்பவத்தின் சகல விபரங்களையும் பதிவு செய்யுங்கள்.

பாலியல்வல்லுறவு எதை அடக்கியுள்ளது என்பதையிட்டு நீங்கள் நிச்சயமில்லை என்றால், எவ்வாறு தொடர்ந்து செயற்படுவது என்பதையிட்டு ஆலோசனையை நாடுவதற்காக பால்நிலை அடிப்படையிலான வன்முறை மீது பணியாற்றுகின்ற தாபனமொன்றை நாடுவதன் மூலம் உடனடியாக விடயத்தைத் தெளிவுபடுத்துங்கள்.



**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

**எனக்கு உடல்ரீதியான காயங்கள் இல்லாவிட்டாலும், 'பொலிசாருக்கு' சம்பவத்தை முறையிடலாமா?**

ஆம்! சில வேளைகளில் பாலியல் வன்முறைச் சம்பவங்களில் உடல்ரீதியான காயங்கள் ஏற்படுவதில்லை. இத்தகைய காயங்கள் இல்லாததினால், அது முறையிடுவதிலிருந்து உங்களைத் தடுக்க மாட்டாது.

பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் காயங்கள் உட்புறமாக இருக்கக்கூடும் என்பதுடன், கண்ணுக்குத் தெரியாதவையாகவும் இருக்கும். இத்தகைய மறைந்துள்ள காயங்களைக் கண்டறிவதற்கான உபகரணங்களைப் பெருமளவு வைத்தியசாலைகள் கொண்டுள்ளன.

நீங்கள் காயமடையவில்லை என்று எண்ணினாலும்கூட, மருத்துவப் பராமரிப்பினை நாடுவதுடன், பாலியல் ரீதியில் பரவும் தொற்று நோய்களுக்காகவும், கர்ப்பம் தரிப்பதற்கான சந்தர்ப்பத்திற்காகவும் சோதிக்கப்பட வேண்டும்.

**வழக்கு தொடர்வது எனக்கு அவசியமா என்பது பற்றி நினைப்பதற்கு எனக்கு நேரம் அவசியப்பட்டால்?**

குற்றம் இடம்பெற்ற பின்னர் உடனேயே வழக்குத் தொடர்வது பற்றி தீர்மானமெடுப்பதற்கு பெரும்பாலானோர் தயாராக இருப்பதில்லை என்பது புரிந்து கொள்ளக்கூடியதாகும். தீர்மானம் பற்றி நினைப்பதற்கும், நண்பர்களுடனும், குடும்பத்தினருடனும் பேசுவதற்கும் நேரம் தேவைப்படுவது வழமையானதே.

நீங்கள் வழக்கு தொடர்வது பற்றி நினைகின்ற போதிலும், அதைப்பற்றி நிச்சயமாக இருக்காவிட்டால், சாட்சியம் இன்னுமே பிரச்சன்னமாகி இருப்பதுடன், உங்கள் ஞாபகம் இன்னுமே விளக்கமாக இருக்கும் அதே வேளை, நேரடியாகவே 'பொலிஸ்' அறிக்கையைத் தயாரிக்கும்படி நாம் விதந்துரைக்கின்றோம்.

வழக்கைத் தொடர்வதா, இல்லையா என்பதைச் சட்டமா அதிபர் தீர்மானிப்பார். எனினும், பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டதாகக் கூறப்படும் பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவரின் ஒத்துழைப்பு இன்றி வழக்குகளை நடத்துவது அசாதாரணமானதாகும்.

**தாக்குதலை முடிப்பதற்கு முன் குற்றத்தை இழைத்தவர் பயந்து ஓடிவிட்டார். என்னால் இன்னுமே முறைப்பாடு செய்ய முடியுமா?**

ஆம், பாலியல் வன்முறையை இழைப்பதற்கான முயற்சியொன்று இன்னுமே ஒரு பாரதூரமான குற்றமாகும் என்பதுடன், அது முறைப்பாடு செய்யப்படவும் வேண்டும். உண்மையாகவே இழைக்கப்படுகின்ற அல்லது முயற்சிக்கப்படுகின்ற வன்முறையானது உடல் ரீதியான, பாலியல் ரீதியிலான, உணர்வுபூர்வமான, உளவியல் ரீதியிலான வன்முறையாக விளங்கலாம்.

**எனக்கு தனிப்பட்ட ரீதியில் குற்றத்தை இழைத்தவரைத் தெரியும் என்பதுடன், அவரை நானே வரவழைத்தேன். என்னால் முறைப்பாடு செய்யலாமா?**

ஆம். பெருமளவு விடயங்களில், தம்மீது தாக்குதலை நடத்துபவரைப் பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவர்களுக்குத் தெரியும். அத்துடன் நீங்கள் இருவரும் தன்னிச்சையாகவே ஒன்றாக இருந்தீர்கள் அல்லது உங்கள் வீட்டுக்கு நீங்கள் அவருக்கு வரவேற்பு அளித்தீர்கள் என்ற போதிலும்கூட, ஏதாவது ஒன்றிலும் மாற்றம் இருக்கமாட்டாது.

பாலியல்வல்லுறவை முறையிடுதல்.

உங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய ஒரு நெருங்கிய நண்பருக்கு அல்லது குடும்ப உறுப்பினருக்கு சாத்தியமான விரைவில் சம்பவம் பற்றிக் கூறுவது மிகவும் முக்கியமானதாகும்.

பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் எப்பொழுதும் சம்பவத்தை முறையிடுவதுடன், சுகாதார மற்றும் உளவியல் ஆதரவையும் பெறவேண்டும்.

அங்கீகாரம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து விரைவிலேயே மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். ஏதாவது இருந்தால், தலைமயிர், உடல் திரவங்கள், தசைநார்கள் மற்றும் வேறு சான்று ஆகியவற்றைச் சேகரிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார். ஏதாவது பாரதூரமான உடல் ரீதியிலான காயங்கள் இருந்தால் சட்ட மருத்துவ உத்தியோகத்தருக்கும், பொலிசுக்கும் அறிவிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர்கள் கொண்டுள்ளார்கள்.

அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச செய்யுங்கள்.

பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்வதற்கு முன், பொலிஸ் நிலையத்தில் பெண்கள், சிறுவர் பிரிவொன்று (தொடர்பு) உள்ளதா என விசாரியுங்கள் அல்லது ஆண் கான்ஸ்டபிள் ஒருவருக்குப் பதிலாக பெண் கான்ஸ்டபிள் ஒருவருடன் பேசுவதற்கு விரும்பினால் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கேளுங்கள். சம்பவத்தின் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

வாக்குமூலத்தில் கைச்சாத்திடுவதற்கு முன் அதை வாசிப்பதை உறுதிசெய்யுங்கள்.

வாக்குமூலமொன்றைப் பெறுவதற்கு மேலதிகமாக, உடல்ரீதியிலான சான்றினைப் பொலிசார் சேகரிப்பதுடன், யாரேனும் சாட்சிகள் இருந்தால் அவர்களுடனும் பேசுவார்கள்.

உங்கள் விடயத்தின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகளவு மணித்தியாலங்களைப் பொலிசாரின் விசாரணை எடுக்கும். சில கேள்விகள் எல்லை மீறுவதாக இருக்கும் என்பதுடன், உங்கள் மீதான தாக்குதல் பற்றிய விபரங்களையிட்டு அந்த உத்தியோகத்தர்கள் பல தடவைகள் விசாரிப்பார்கள். குற்றமிழைத்தவருக்கு எதிரான மிகப் பலமான சாத்தியத்திலான வழக்கைத் தாக்கல் செய்வதற்காக துல்லியமாக ஒவ்வொரு விபரத்தையும் பெறுவதற்கான அவசியம் இருப்பதனால், விரிவான விதத்தில் விசாரணை இடம்பெற்றாலும், அது அனேகமாக நியாயப்படுத்தப்படுகின்றது.

இது சாத்தியமான விரைவில் உங்களால் நினைவில் வைத்திருக்கக்கூடிய ஒவ்வொரு விபரத்தையும் எழுதுவதற்கு உதவுகின்றது. இதனால் நீங்கள் விபரங்களைப் பொலிசாருக்கு பரிமாறிக் கொள்ளலாம்.

முறையிடும் நடைமுறையின் ஊடாக சில தாபனங்கள் ஆதரவை வழங்குகின்றன. உங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் அவை தெளிவுபடுத்தும்.

பொலிசுக்கு முறைப்பாடு செய்வதற்கான கால எல்லை

பாலியல் வன்முறையைப் பொறுத்தளவில், விரைவிலேயே குற்றம் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டால், சான்றுகள் சேகரிக்கப்பட்டு, வழக்கு பலமாக விளங்கும்.

எப்பொழுதுமே குற்றத்தை சாத்தியமான விரைவில் முறையிடுங்கள். உங்களுக்கு நடந்தது குற்றமொன்றா என்பதையிட்டு நீங்கள் நிச்சயமற்றிருந்தால், முதலில் பொலிசுக்கு அல்லது வேறு ஆதரவுத் தாபனத்திற்கு (தொடர்பு) முறையீட்டுவிட்டு, அவற்றுடன் விடயத்தைத் தெளிவுபடுத்துங்கள்.

குற்றமொன்றைப் பொறுத்தளவில், குற்றமொன்றை முறையிடுவதற்கு வழங்கப்பட்டுள்ள ஆகக்கூடுதலான சட்டபூர்வமான கால எல்லை இருபது (20) வருடங்களாகும்.

முறையிடும் நடைமுறையின் ஊடாக சில தாபனங்கள் ஆதரவை வழங்குகின்றன. உங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் அவை தெளிவுபடுத்தும். சேவை வழங்குநர்கள் சென்று. சட்டங்கள் சென்று.

பாலியல்வல்லுறவு மீதான 1995 இன் 22ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு, குற்றவியல் சட்டக்கோவையின் பிரிவு 363 இல் பாலியல் வல்லுறவு மீதான சட்டம் காணப்படுகின்றது.

பெண் ஒருவரின் சம்மதமின்றி, அவருடன் பாலியல் உடலுறவை ஓர் ஆண் கொண்டிருந்தால், பாலியல் வல்லுறவுக்கு அந்த ஆண் குற்றவாளியாவார்.

பாலியல் உடலுறவுக்கு உட்புகுத்தல் ஒரேயொரு தேவைப்பாடாகும். விந்து வெளியேற்றம் அவசியமில்லை.

சம்மதமின்றி பாலியல் உடலுறவு இடம்பெற்றுள்ளது என்பதை நிரூபிப்பதற்கு உடல் ரீதியிலான காயங்கள் அல்லது போராடியதற்கான சான்று அவசியமில்லை.

ஒரு கணவரிடமிருந்து மனைவி சட்டரீதியாகப் பிரிந்திருந்தால் மட்டுமே, பாலியல் வல்லுறவுக்கு அக்கணவர் குற்றவாளியாவார். எனினும், தனது மனைவிக்கு எதிரான அத்தகைய பாலியல் வன்முறைக்கு வீட்டு வன்முறையைத் தடுத்தல் சட்டத்தின் கீழ் அவர் பாத்திரவாளியாவார். உள்நாட்டு வன்முறை சட்டத்தின் தடுப்பு.

மனோநிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருவருடன் பாலியல் உடலுறவை ஓர் ஆண் கொண்டிருந்தால், அது பாலியல் வல்லுறவாகும்.

தொடரும்

# தன்வினை

(தொடர்கதை - 6)

சேர் நீங்க இந்தக்கதை சொல்லத்தான் எனக்கு வன்னியில நடந்த சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகுது. கொஞ்ச காலத்திற்கு முன்னம் நான் வன்னியில வேலை செய்யேக்க ஒரு பாடசாலையில பிறின்சிப்பல் மாற்றம் ஒண்டு வந்தது. அவரது மாற்றம் பற்றி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கருத்து வெளியிட்டு போராட்டம் நடாத்தினார்கள். ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்களுடைய அதிகாரம் இதனைக் கருத்தில் கொள்ளாமல் அதிபர் மாற்றத்தை செய்ய, சரி என்று பொறுத்து போனது அப்பாடசாலை சமூகம். ஆனால் அதிகாரவர்க்கத்தினர் தமக்கு சாதகமாக புதிதாக ஒரு அதிபரை கொண்டு வந்தனர். புதிய அதிபரோடு பாடசாலைச் சமூகம் கொஞ்சம் கொஞ்சமாய் இணைந்து செயற்படுகையில் புதிய அதிபருக்கு சார்பாக ஒரு கோஷ்டி, பழைய அதிபருக்கு சார்பாக ஒரு கோஷ்டி என ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பிரிந்தனர்.

ஆனாலும் பழைய அதிபருக்கு அப்பாடசாலையில் அதிகமான செல்வாக்கு. எனினும் புதிய அதிபர் கொஞ்சம் கொஞ்சமாக தனது பணித்திறத்தால் எல்லாரையும் மாற்றி எடுத்திருக்கலாம். ஆனால் அவர் தனது அதிகாரபலத்தை பயன்படுத்த பல வழிகளில் முயன்றிருக்கிறார். அம்முயற்சிகளில் தனக்கு விசுவாசமில்லாத ஆசிரியர்களை இடம்மாற்றுவது அல்லது தேவையற்ற விடயங் களில் மூக்கை நுழைத்து ஆசி ரியர்மீது மாணவர்கள் அல்லது ஏனைய ஆசிரியர்களிடையே கருத்து முரண்பாட்டை ஏற்படுத்திவிடுவது.

இப்படியே காலத்தைக் கடத்தி செல்கையில் ஆசிரியதினத்தின் போது இப்பிரச்சினை பெரிய பூதாகரமாகியது. ஆசிரிய தினத்தின் போது பழைய அதிபரின் பணியைப்பாராட்டி வாழ்த்தெழுதி ஓர் பனர் ஆசிரியர் தின நிகழ்வில் கட்டப்பட்டதும் அது தொடர்பாக மாணவர்கள் சிலரை உடனடியாக அதிபர் இடைநிறுத்தியதும் பெரிய பிரச்சினையாகி எமது ஸ்ரேசன் வரைவந்தது. அதிர்கூட தான் ஒரு காலத்தில் மாணவனாக இருந்து ஆசிரியராகி அதிபராகி வந்தேன் என்பதை மறந்து விட்டு மாணவரோடும் ஆசிரியரோடும் வாக்குவாதம் நடாத்தியதன் விளைவு பிரச்சினை எல்லைதாண்டி மேலிடம்வரை சென்றது.

இவை ஒரு புறம் இருக்க எனக்கு ஒரு ஆசை சேர். அதிபர்கள், ஆசிரியர்கள் எல்லோரையும் கூப்பிட்டு ஒருமுறை கூட்டம் நடர்த்தவேணும் எண்டு. ஏன் தெரியுமோ? சில அதிபர்கள் தமது நிர்வாகத் திறன் என்ற போர்வையில் ஆசிரியர்மார் தொடர்பாக பிள்ளைகளோட தரக்குறைவாக கதைத்துமாணவரிடம் இருந்து ஆசிரியரைப்பற்றிய நிறைகுறைகளை ஆராயுறதும்மாணவர்களை வேவு பார்ப்பவர்களாக மாற்றி மாணவனிடம் கொண்டோடும் பழக்கத்தை தூண்டுவதை நிப்பாட்டச்சொல்லி ஒரு வகுப்பு அவர்களுக்கு நான் எடுக்கவேணும்.

ஆசிரியரின் குறைபாட்டை அதிபரும்,அதிபரின் குறை பாட்டை ஆசிரியரும் மாணவர்கள் மத்தியில் கதைப்பதை முதல்ல நிறுத்தவேணும். ஒரு ஆசிரியரின் குறைபாட்டை விமர்சிப்பதை நிறுத்த வேணும். இதால நிறைய பிரச்சினை உருவாகுது.

நான் றான்சர் ஆகிவரும்போது ஒரு பிரபல்யமான பாடசாலை அதிபர்மீது கேஸ் ஒன்று வந்திச்சு. யாழ்பபாணத்தில் இருந்து வன்னிக்கு வாற ஆசிரியர்மார் எல்லாம் பட்டிமாடுகள் எண்டு சொன்னவராம். அதில் 8மணிக்கு முன்னம் கையொப்பமிடாட்டி லீவு போடுறாராம் எண்டு எங்களுக்கு ஒரு கேஸ் வந்திச்சுது. அது ஒரு பொம்புள ரீச்சர். கடிதமா எழுதி வாக்குமூலம் அனுப்பி இருந்தா. மனுசன்காரன் விடிய ஆறு மணிக்கு முன்னம் வெளிக்கிட பேசுறாராம். ஆறுமணிக்குவெளிக்கிட்டு தான் பஸ்ஏறி வந்தா எல்லா பஸ்காரரும் ஒருமாதிரி இல்லைத்தானே சேர் கொஞ்சம் பிந்தி முந்தி கொண்ணந்து விட்டா, அதிபர் கேற்று வாசலை மாணவர்களுக்கெண்டு பூட்டி வைச்சிட்டு 8.30இற்கு திறக்கிறாராம். சிவப்பு கோட்டை அடிச்சிட்டு 8.25 என்று எழுதிறாராம். யாழ்ப்பாணத்து ரீச்சர்மாரை கண்டபடி பேசுறாராம். இழக்காரமாய் பார்க்கிறாராம். பிள்ளைகளிடமும் தரக்குறைவாக கதை க்கிறாராம் என்று ஆசிரியர்மார்கள் கையொப்பமிட்டு ஒரு கடிதமும் அந்த ரீச்சர் ஒரு கடிதமும் தந்தார்கள்.

அதிபர் மாணவர்களிடையே பிரதேசவாதத்தை தூண்டுவதாக ஆசிரியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பாக அதிபரை கூப்பிட்டு விசாரிச்சா தன்னுடைய கட்டுப்பாடான கடமைக்கு இவர்கள் இடைஞ்சலாய் இருப்பதால் அப்படி பேசுறேனே தவிர தான் அப்படி பிரதேசவாதம் பேசவில்லை என்கிறார் .

ஆனால் ஆசிரியர்கள் இருவர் அழுதழுது சொன்ன கதை இது.விடியற்காலை 3மணிக்கு எழும்பி சமைக்கவேண்டி இருக்கு சமையல் 5மணிக்கு முடிய குளிச்சிட்டு வெளிக்கிட 5.30,6, மணி ஆகும். சரியென்று வீட்டை விட்டுபோவமெண்டால் இந்த நேரத்தில ஆளையாள் தெரியாத இருட்டில போறதை விட ரீச்சர் வேலைய விடு என்கிறார் புருஷன். அதைவிட என்னை விட வேற புருஷன் இருக்கோ என நக்கலாகவும் கேட்கிறார். அவர் கேக்கிறத்திலயும் ஒரு விதத்தில சரி ஏனெண்டா 2.30இற்கு பஸ் ஏறி ஐந்து மணிக்கு வீட்டை வந்து இரவுச்சாப்பாடு தேடிவிட்டு பாடமுன்னாயத்தம் செய்ய நேரம் சரி.பற்றாக்குறைக்கு பிள்ளையள் அழ அதுகளோட விளையாட்டா நித்திரைக்குப்போய் ஈற்றில் நித்திரையாகிவிடுவேன். சனி, ஞாயிறு தவிர புருசன் மீது அக்கறை காட்டுவதில்லை. அவரை சந்தோசப்படுத்துவதில்லை. இதன் காரணமாகவும் அவர் இப்படி கேட்டிருக்கலாம். ஆனால் நாங்கள் இவ்வளவு துன்பத்தின்மத்தியில் படிப்பிக்க வர இவர் இப்படி நடப்பது சரியா? விடிய சாப்பிட்டே இப்ப ஒருவருடம் ஆச்சு. காரணம் நேரமில்லை. சனி,ஞாயிறு விடிய நேரம் கிடைக்கும். அதைக் கூட கண்டபடி பழக்கப்படுத்தினால் கஸ்ரப்படநேரிடும் என்று மதியம் பன்னிரண்டு மணிக்குப் பிறகுதான் சாப்பிடுகிறம். அப்பதான் பாடசாலையில்கூட லீவு கிடைக்காது. அதுக்கு முன்னம் தொடர்பாடம். இன்ரேபிள்நேரம் பிள்ளைகளுக்கு சாப்பாடு பகிரச்சொல்லி கட்டுப்பாடு. இன்ரேபிள்முடிய திருப்ப ஒருபாடம். அதுமுடிய பன்னிரண்டுமணி அப்பதான் சாப்பிடுகிறம். இப்படி எமது துன்பம் இருக்கையில் மேலும் இப்படி இவர் கஸ்ரப்படுத்துறது சரியா? என அவர் கண்ணீர் சிந்தி அழுதழுது கூறியது இன்று வரை எனக்கு ஓர் உந்து தலாக இருக்கிறது.


இது ஒருபுறம் இருக்க இவர்கள் படிப்பிக்காமல் ஒருவருக்கொருவர் கதைச்சுக்கொண்டிருக்கிறவை அதாலதான் அப்படி கஸ்ரப்படுத்திறன். இதை நீங்கள் பிள்ளைகளிடம் கேட்டுப் பாருங்க என அதிபர் சொல்ல மாறிமாறி இரு பகுதியும் புரிந்துணர்வு இல்லாமல் முரணான கருத்துக்களை வெளியிட்டனர்.

இந்த நிலை இங்கும் இப்போது வலுவாகி வருகுது. இதை மாற்றியமைக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கோணும் என இன்ஸ்பெக்ரர் பெடியன் கூறிக்கொண்டிருக்கும் போது திடீரென ஓர் ரெலிபோன் கோல் வந்தது. ஹலோ என இன்ஸ்பெக்ரர் எழும்பிச் செல்ல கந்தப் பண்ணை முருகேசு மாஸ்ரரிட்டை தனது நச்சரிப்பைத் தொடர்ந்தார்.

கார்த்தி

(தொடரும் .....)




No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com

# பேசுவதால் மட்டும் பயனில்லை




மேற்கு இந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள முன்னமேயே அவுஸ்ரேலிய அணியை இவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்று எல்லோரும் எதிர்வு கூறினார்கள். முதல் ஹோபாட் டெஸ்ட் போட்டியிலேயே அது நிதர்சனமாயிற்று. இதற்குக் காரணங்கள் முக்கியமான ஐந்தாறு வீரர்கள் அணியில் இல்லை. எனவே உள்வாங்கப்பட்டவர்கள் புதிய இளம் வீரர்கள்.

அந்தவகையில் இத்தோல்விக்கான மறைமுகக் காரணிகளில் ஒன்றாக கிறிஸ்கெய்ல் டெஸ்ட் விளையாடிமையும் குறித்துக் காட்டப்பட்ட வேளை, இவர் பணம் கொழிக்கும் சர்வதேச நாடுகள் நடாத்தும் இருபதுக்கு இருபது போட்டி களையே நாடு கின்றார் என்றும் குற்றம் சாட்டு கின்றர்கள். ஆனால் இதனை கெய்ல் மறுக் கின்றார். அப்படியல்ல, நான் டெஸ்ட் விளையாட விரும்புகின்றேன். ஆனால் எனது உபாதைகள், அதனால் எடுத்துக்கொண்ட சத்திரசிகிச்சைகளால் என்னால் அணியில் இடம்பெறாது முடியாது போய்விட்டது. நான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவில்லை. அனேகமாக அடுத்த வருடம் டெஸ்ட் விளையாடுவேன் என்று கூறியுள்ளார். கெய்ல் கூறிய காரணம் சரியாக இருந்தாலும் அவுஸ்ரேலிய Big Bash இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டியில் களம் இறங்குவது நிச்சயம் என்று கூறுகிறார்.

பொதுவாக மேற்கிந்தியக் கிரிக்கெட்டின் நிலை இன்று "ஐரோப்பாவின் நோயாளி துருக்கி" என்று முன்னர் கூறியதுபோல "கிரிக்கெட்டின் நோயாளி மே.இந்தியத் தீவுகள்" என்றமைந்துவிட்டது மகிழ்ச்சியான விடயம் அல்ல. முன்பும் எல்லோரும் கூறியது போலவே தற்போது, முன்னாள் மே.இந்திய வேகப்பந்து வீச்சுப்புயல் மைக்கல் ஹோல்டிங் கருத்துக் கூறுகிறார். மே.இந்திய கிரிக்கெட் சபை செயலற்று முடங்கிக் கிடக்கிறது. நம்பகமற்றது, யாராலும் விருப்பப் படாதது. இத்தகைய வர்களால் கிரிக்கெட்டை வளர்க்க முடியாது என்று நிரம்பவே ஆதங்கப்பட்டுள்ளார். அதேவேளை கிறிஸ்கெய்ல், தற்போதைய அணி மிகவும் இளைய அணி என்று ஆறுதல் கூறுகிறார். அணி வளரும் என்று நம்புகிறார். ஆனால் எப்போது வளரும் என்று தான் தெரியவில்லை. ஏனைய சர்வதேச கிரிக்கெட் போல மே.இந்தியக் கிரிக்கெட் வளர, அதன் பல்வேறு குறைகள் என்று தீரும் என்றும் தெரியவில்லை. வெறுங்கை முழம் போடாது என்பது மட்டும் உண்மை. பாவம் மே.இந்திய கிரிக்கெட் அணி.




# நிழல் தேடும் நட்சத்திரம்

19வயது மட்டுமே நிறைந்த, கேகாலை சென்.ஜோசப் மகளிர் கல்லூரியில் பயிலும் ருமேஷிகா ரத்நாயக்க எனும் குறுந்தூர (100 மீ, 200மீ) ஓட்ட இளவரசி ஒருவர் பற்றிய குறிப்பு இது. ஒரு தசாப்தத்திற்கு முன் இலங்கைத் தடகள வட்டாரத்தில், ஆசிய வட்டகையில் கலக்கிய சுசந்திகா ஜயசிங்க, தமயந்தி தர்ஷா இருவருக்குப் பின், அந்த எல்லைகளைத் தாண்டக் கூடியவர் என்று எதிர்பார்க்கப்படும் ஒருவர் ருமேஷிகா. அகில இலங்கைப் பாடசாலை மட்ட 100 மீற்றர் சாதனைகள் பலவற்றைத் தகர்த்தவர் இவர். ஆசிய அளவில் இளையோர் தடகள 100 மீற்றர் போட்டியில் ஆறாவது இடம் பெற்றவர். எதிர்காலத்தில் சுசந்திகாவின் பின் இலங்கைக்கு ஒரு ஒலிம்பிக் பதக்கம் பெற்றுத் தருவார் என்று எதிர்பார்க்கப்படுவர்.

ஆனால் இவரின் நிலை என்ன? இவரின் துயரத்தை கொழும்பு ஆங்கில ஊடகமொன்று எடுத்துக் காட்டுகிறது.

இவர் இலங்கை ஒலிம்பிக் சங்கம், ஏன் விளையாட்டுத்துறை அமைச்சாலோ கண்டு கொள்ளப்பட வில்லை என்று சுட்டிக் காட்டுகிறது. பயிற்சிக்கான பொருளாதார வசதி இந்தச் சிறுமியிடம் பெரிதாக இல்லை. ஊரில் இருந்து பயிற்சிக்காக தூர இடங்களிற்குச் சென்றுவர போதிய வசதி இல்லை. இவரின் பயிற்சியாளர் நந்தா கூறும்போது, இந்தப் புதிய கண்டுபிடிப்பைப் பற்றி விளையாட்டுத்துறை அமைச்சரிடம் எடுத்துக்கூறி விஷேட அக்கறை காட்டுமாறு கேட்டுக்கொண்டேன். அவர் உரிய பணிப்புரைகளை விடுத்தார். ஆனால் கீழ்நிலை அதிகாரிகள் இவரைக் கண்டுகொள்ளவில்லை... இப்படியாக நீண்டு செல்கிறது இந்த எதிர்கால நட்சத்திரத்தின் துயரம். நாங்கள் கேட்கிறோம் உரியவர்களின் கண்களில் படவேண்டுமென்றால் தலைநகர் கொழும்பில் தான் இருக்க வேண்டுமா? பெருத்த பொருளாதார வசதிகள் கொண்ட, எலைட் மக்கள் கூட்டமாக இருக்க வேண்டுமா? அல்லது கிரிக்கெட் விளையாடுபவராக இருக்க வேண்டுமா? இப்படியான தகுதிகள் இல்லாவிட்டால் நொந்து நூலாகி, ஆர்வம் குன்றி தானாகவே தன்திறமையை அழித்துக்கொள்ள வேண்டுமா? இது ருமேஷிகா சார்பாக மட்டுமன்றி அவர் போன்ற நூற்றுக் கணக்கானோர் சார்பாக கேட்கப்படும் கேள்வி.




ஜோசப் கிருஷ்ணா

# தினச்செய்தி வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டம் ஜனவரியில்

கொழும்பில் பிரபலமாகவுள்ள 6 உதைபந்தாட்ட அணிகள் வடமாகாணத்தில் தெரிவுசெய்யப்படவுள்ள இரண்டு உதைபந்தாட்ட அணிகளும் இணைந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை "தினச்செய்தி" வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் மோதவுள்ளன.

இந்த இரண்டு அணிகளும் வடமாகாணத்திலுள்ள 12 அணிகளான பலாலி விண்மீன், வல்வெட்டித்துறை ஆதிசக்தி, கம்பர்மலை யங்கம்பன்ஸ், பாசையூர் சென்.அன்ரனீஸ், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்கென்றீஸ், நாச்சிக்குடா சென்மேரிஸ், மன்னார் சென்.ஜோசப், மன்னார் கில்லரி, மன்னார் சென்.அந்தோனியார்புரம், முல்லைத்தீவு சென்யூட், வவுனியா யங்ஸ்ரார் ஆகிய அணிகளுக்கிடையில் 1ஆம் திகதி தொடக்கம் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ள போட்டிகளின் பெறுபேறுகளை வைத்தே தெரிவுசெய்யப்படவுள்ளன.

இப் போட்டி வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்த தினச்செய்தி திட்டமிட்டுள்ளது. ஆரம்பத்தில் லீக் முறையில் போட்டி ஆரம்பித்து பின்னர் விலகல் முறையில் போட்டிகள் நிறைவடையும்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை கொழும்பில் உள்ள இலங்கை உதைபந்தாட்ட சமாசத்தில் தினச்செய்தி பிரதம ஆசிரியருடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் அனுர டி சில்வா, செயலாளர் சியாலேந்திரா அந்தோனி பிரதம நிறைவேற்று அதிகாரி ஆனந்த் அந்தோனிப்பிள்ளை ஊடகத்துறைப பணிப்பாளர் யூரியன் ருவி ஒன்டாயி ஆகியோர் பேச்சுக்களை நடாத்தினர்.

இந்தப் பேச்சின் முடிவில் தினச்செய்தி வெற்றிக்கிண்ணத்திற்கான இப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ரூபா ஐந்து இலட்சமும், வெற்றிக்கிண்ணமும், தினச்செய்தி சுழல் கிண்ணமும் வழங்கப்படும். இரண்டாவது இடத்தைப் பெறும் அணிக்கு இரண்டு இலட்சம் ரூபாவும் கிண்ணமும் வழங்கப்படும். மூன்றாவது இடத்தைப் பெறும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் மாதம் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டு மைதானத்தில் தினச்செய்தியின் அனுசரணையுடன் ஒரு மாத காலமாக மின்னொளியில் 'வடக்கின் வல்லவன் 2015' உதைபந்தாட்டத்தொடர் நடாத்தப்பட்டது. இதில் வடக்கின் வல்லவனுக்கான பட்டத்தை யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் தனதாக்கியது. இதில் முதலிடம் பிடித்த அவ்வணிக்கு ரூபா இரண்டு இலட்சம் பணப்பரிசும் தினச்செய்தியின் சுழல் கேடயமும் தினச்செய்தியால் வழங்கி வைக்கப்பட்டது.

இரண்டாம் இடத்தைப் பிடித்த மன்னார் கில்லரி அணிக்கு ரூபா ஒரு இலட்சம் பணப்பரிசும் மூன்றாம் இடத்தைப் பிடித்த மன்னார் சென்லூசியஸ் அணிக்கு ரூபாஐம்பதாயிரம் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்தை வளர்க்கும் நோக்குடன் தினச்செய்தி பல்வேறு போட்டிகளை தொடர்ச்சியாக நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(17 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# மலையக மாணவர்களின்...

சூழந்துள்ள தமது சமுகத்தின் மீதும் குற்றம் சாட்டிவிட்டு தமது கல்வியை இடை நிறுத்தி வருகின்றனர் எனக் கூறிய கிராம சேவகர் இந்த மாணவர்களின் இடை விலகலைத் தடுக்க தம்மாலான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது பலனளிக்கவில்லை என மிகுந்த உருக்கத்துடனும் கவலையுடன் தெரிவித்தார்.

கல்வி என்பது இலங்கையில் முன்னிலை பெற்று வருவதுடன் அனைத்து மாகாணங்களிலும் மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை செலுத்தி கற்றுவருகின்ற இன்றைய காலகட்டத்தில் ஹற்றன் பிரதேசம் மட்டும் ஏன் கல்வியில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது? இங்கிருக்கின்ற மாணவர்களே அதிகமாக பாடசாலையினை விட்டு இடைவிலகி வருகின்றனர். இதற்கான காரணம் என்ன? மக்களே! சிந்தித்துப் பாருங்கள்...

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது..? உங்களது குழந்தைகளின் கனவுகள் சிதறடிக்கப்படுமா? இங்கிருக்கும் அரசியல் தலைவர்ளுக்கு மக்களின் வாக்கு மட்டுமே போதுமா? இல்லை சிறந்த மக்களும் சிறப்பான எதிர்கால இளம் சந்ததியினரும் தேவைதானா? சிந்திப்போம்....

அங்கிருந்த மாணவன் ஒருவன் விளையாடுவதை கண்டு பாடசாலை விடுமுறையாகையால் இவன் தனது உடலுக்கும் மூளைக்கும் தேவையான பயிற்சியினை விளையாட்டின் ஊடாக பெற்றுக்கொள்கின்றான் என எண்ணியவாறு அவனுடன் கதைத்தால் எமது மனதுக்கு அமைதியாக இருக்கும் என நினைத்து "தம்பி" எனக் கூப்பிட்டு விசாரித்த போது எம் கண்களிலும் இருந்து கண்ணீர் பனித்துளியாக கலங்கிச்சென்று மனதை நெருடிவிட்டது

என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? ஆம் இது உண்மையாகவே ஆச்சரியமான விடயம்தான் இந்தப் பையனின் கதையும்.

இவனுடைய பெயர் கனகவேல் சாந்தகுமார் வயதோ 11 இவன் தரம் 06இல் கற்க வேண்டியவன் ஆனால் கடந்த நான்கு மாதமாக பாடசாலைக்கு செல்வதில்லை காரணம் ஏன் எனக் கேட்டபோது...

எங்கட அம்மா வெளிநாடு போயிட்டா அப்பா வேற கலியாணம் செய்திட்டார். நாங்கள் தாத்தா பாட்டியோடதான் இருகிறம். தாத்தாக்கு வயது 58 பாட்டிக்கு வயது 55 இவங்க கொழுந்து பறிக்க போயிடுவாங்க. எனர இரண்டு தங்கச்சியையும் பார்க்கிறதுக்கு ஆக்கள் இல்லை. நான்தான் பார்க்க வேணும் அதால நான் பள்ளிக் கூடம் போறதில்லை. நான் தங்கச்சி ஆக்கள அழாம நல்ல வடிவா பார்ப்பன் எனக்கு ரொட்டியும் சுடத்தெரியும்" என்றான்.

இவ்வாறு கூறியது வேதனையுடன் தாக்கமும் பிரமிப்பும் அடைய வைத்துள்ளது.

இலவசக்கல்வியினை எம் மாணவர்களுக்கு வழங்கும் எம் இலங்கைக்கு இந்தநிலை வேண்டுமா? இந்த நிலை ஏற்படக்காரணம் யார்? அதிகாரிகளின் குற்றமா? பெற்றோரின் குற்றமா? இல்லை கால்கள் கடுகடுக்க வீடு வீடாக வாக்குகளைக் கேட்டுத் திரிந்த அரசியல் வாதிகளின் குற்றமா? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும். கல்வி மேலோங்க வேண்டும். கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட வேண்டும். தரமான ஆசிரியர்கள் தரப்படுத்தல் ஊடாக நியமிக்கப்பட வேண்டும். இது மட்டுமன்றி மாணவர்களுக்கான சிறந்த வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மாணவர்கள், பெற்றோர் இடத்தில் சரியான புரிந்துணர்வையும் கல்வி தொடர்பான விழிப்புணர்வுகளும் கல்வியின் மகத்துவமும் உணர்த்தப்பட வேண்டும். மாணவர்களிடத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வும் ஆசிரியர்களின் பொறுப்பு வாய்ந்த தன்மையும் கட்டி எழுப்ப்படுவதுடன் சிறுவர்கள் குழந்தைகளை பராமரிப்பது நிறுத்தப்பட வேண்டும் இவை அனைத்தும் சிறப்பாக முன்னெடுக்கப்படு மானால் இப்பிரச்சினைகளுக்கு முடிவுகள் சிறப்பாக அமையும்.

(07 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# காலத்தால்...

இவர் தன்ர பயணத்தை தொடர்ந்தார் பிறகு திரும்பி வாறார் இரவாச்சு அதேகுடில் கொஞ்சம் கல்வீடா மாறியிருந்துது இவர் தங்கிற எண்ணத்தோட கதவைத்தட்டினார் பணமும் பொருளும் வந்த தால அவள் அவரை மறந்து போனாள் இவர் கூப்பிட்டார் அவள் கதவைத் திறக்கேல்ல. இவருக்க விசயம் விளங்கீட்டுதா..."அடீ பழைய குருடி கதவைத் திறவடி" எண்டார். பழைய குடிலும் வந்தது அந்தப் பெண்ணும் மீண்டும் குருடியானாள். பிறகு மன்னிப்பு கேட்டாள்தான். ஆனால் சாமி சொல்லிப்போட்டுது பணத்தோட வாழுறது முக்கியமில்லை மனிசத்தனத்தோட வாழுறதுதான் முக்கியம் இப்பிடியே இரு எண்டு.

நாங்கள் எப்ப எங்கட அரசியல் வாதியளுக்கு சொல்லப்போறம். பழையகுருடி கதவைத்திற வெண்டு காலம் போன பிறகு கடும்மழைக்க கான் வெட்டிப்பபோட்ட ரோட்டுகளால மல்லாவி பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் பக்க மெல்லாம் பஸ் போக்குவரத்து மட்டுமில்லை வேற வாகனங்களும் பாண்டியன் குளத்துக்கு இஞ்சாலயே நிக்குதாம். இதேபோல பள்ளிக்கூடப்பிள்ளையள் காலமை வீட்டில குளிக்காம வந்து சேறு கடந்து பிறகு அயல்ல கழுவிப்போட்டு உடுப்பப் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போகினம். என்ன செய்றிறது தெய்வம் வரங்குடுத்தாலும் பூசாரி விடைகுடுக்கயில்லையே...

அரசாங்க கட்டடங்கள் புனரமைக்கப்படுது. பிரதான வீதியள் கவர்ச்சிகரமா மாறிட்டுது. பூங்காக்கள் புனரமைக்கப்படுது. புதிய பஸ் தரிப்பு நிலையங்கள் கட்டி விட்டிருக்கு. எல்லாந் தேவைதான் அதுக்காக வரிகட்டுறவையட தேவையளையும் கொஞ்சம் கவனிச்சா என்ன? எல்லாரும் இந்நாட்டு மன்னர் எண்டதுதான் ஜனநாயகக் கோட்பாடு. மன்னர்களெல்லாம் சேற்றிலே புரள மந்திரிகள் மட்டும் சொகுசு வாகனங்களிலே. காலிலே சேறுபடாமல் ஒரு கிராமத்துக்கு செய்யிற சேவையைக்கூட கிராமத்தைப் போய்பாக்காமலே (கால்ல சேறுபடாம) செய்ய விளையும. மக்கள் பிரதிநிதிகள் பாவம் மக்கள்.

## சேர். பொன் இராமநாதன்...

வாக்களிப்பை அடுத்து, வாக்குகள் எண்ணப்பட்டன. இராமநாதன் 1645 வாக்குகளையும், டாக்டர். மார்கஸ் பெனார்ண்டோ 981 வாக்குகளையும் பெற்றனர். இராமநாதன் 678 வாக்குகளை அதிகப்படியாக பெற்றுத் தேர்தலில் வெற்றிபெற்றார்.

ஆனால் அன்றைய தேர்தல் வாக்கெடுப்பை அடுத்து, வாக்குகளின் எண்ணிக்கை நடைபெற்ற போது திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. காரணம், அந்த இடங்களில் தேர்தலில் தலைமை வகித்த உத்தியோகத்தர்கள் செய்த குழறுபடியால் வாக்குகள் எண்ணப்படவில்லைஆனால் இராமநாதன் தனக்கு ஏகப்பட்ட ஆதரவு இருக்கும் என்று எண்ணிய இடங்களே இவையாகும்.

அன்று யாழ்ப்பாணத்தில் மொத்தமாக 440 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தார்கள். அதில் 410 பேர் இராமநாதனுக்காக வாக்களித்தி ருந்தனர்.

இலங்கையில் முதன்முதலாக நடைபெற்ற தேர்தலில் சாதி, மத, இன பேதமின்றி சகல வாக்காளர்களும் தமிழராகிய இராமநாதனுக்கு வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்தார்கள்.

(10 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# நண்பேண்டா...

செல்வாவைப் பார்த்து குமார் "பொய் சொல்லாத மச்சான் தியேட்டருக்குப் போனியா?"

"ஓம் டா..." எனக் கூறி நண்பர்கள் நம்புவதற்கு தனது மொபைலில் அங்கு பிடித்த போட்டோக்களை காட்டுகிறான். செல்வாவினைத் தவிர மற்ற மூவரின் முகம் கறுத்துவிட ஏமாற்றமும் கோபமுமாக எழுந்து செல்கின்றனர்.

செல்வா தான் உண்மையை உழறிவிட்டதை உணர்ந்து நண்பர்களைப் பார்த்து...

"சொறிடா மச்சான், அத்தான் கூப்பிட்டதால தாண்டா போன சொறிடா..." எனக் கூறியும் நிற்காமல் போக செல்வா என்ன கதைப்பது என அறியாமல் அக் கட்டையிலேயே அமர்கிறான். தான் செய்த தவறை உணர்ந்து கவலைப்படுகிறான்.

"பெரிய வில்லன் எண்ட நினைப்பு இவருக்கு, முதல்ல கத்தியை உள்ளுக்க வைடா" என வினோத் கூற குமார் "முதல்ல முன்னுக்கு பாத்து நட, இல்ல பின்னாடி குத்திடுவன்." "சரி, சரி இதுக்கு ஏன் கோபப்படுறது என வினோத் கூற மூவரும் சிரித்த படியே செல்வாவின் வீட்டை நெருங்கினார்கள். ஒரே அமைதி எங்கும். செல்வாவின் வீட்டை அடைந்ததும் குமார் வினோத்தைப் பார்த்து "வினொத் நீ பொய் மூனு தடவை கதவைத் தட்டு. அவன் வாற சத்தம் கேட்டா உடனே ஓடிவந்திடு" என சொல்லிக் கொண்டே கத்தியை அழுத்திப் பிடிக்கிறான்.

"ஓகே, மச்சான்" என்று வினோத் போய் கதவைத் தட்டுகிறான். இது எதுவும் அறியாத செல்வா கதவு தட்டும் சத்தம் கேட்டு நித்திரையில் இருந்த திடுக்கிட்டு எழுந்த "யார் அது?" என்கிறான். பதில்வராமல் மீண்டும் கதவு தட்டும் சத்தம். பயத்தில் எழுந்து பல்பை ஒன் பண்ணி விட்டு கதவை திறக்கச் சொல்கிறான். செல்வா வரும் அசைவு தெரிய வினோத் பாலா, குமார் மறைந்திருந்த இடத்திற்கு ஓடிச்செல்கிறான்.

கதவைத் திறந்து பார்த்த செல்வா வெளியில் யாரும் இல்லாததால் பயந்த கதவைப் பூட்டிக் கொள்கிறான். பின் பல்பை ஓவ் பண்ணிவிட்டு கட்டிலில் படுக்க இருக்கும் பொழுது மறுபடியும் கதவு தட்டும் சத்தம் மனதில் பயம் கொள்கிறது. இதயம் டிக், டிக் என்று சாதாரண நிலையில் இருந்து வேகமாக அடித்துக் கொண்டிருப்பதை அவனால் உணர முடிகின்றது. பல்பை ஒன் பண்ணாமல் கதவைத் திறக்கிறான். தூக்க கலக்கம் கண்களில் இருக்க திறந்தவனுக்கு இருட்டில் யாரோ ஒருவர் நிற்க மிகவும் பயந்து விடுகிறான். கதவை சாத்திவிட்டு உள்ளே ஓடுகிறான். கதவைத் திறந்துகொண்டு குமார், பாலா, வினோத் வர செல்வா பல்பை ஒன் பண்ண தன் நண்பர்கள் தான் என்பதால் பயம் நீங்கி

"நீங்களாடா நானும் வேற யாரோ எண்டு நினைச்சு பயந்திட்டன்" செல்வா கதைத்தபோதும் நண்பர்கள் மூவரும் அவனை நெருங்கினர்.

பின்னர்தான் செல்வா குமாரின் கையில் கத்தி இருப்பதை கவனிக்கிறான். "என்ன மச்சான் கத்தி எல்லாம்..."

செல்வாவின் கதையைப் பொருட்படுத்தாது, குமார் குத்துவது போல் நெருங்கிவர செல்வாவின் இதயம் படபடக்கிறது. செல்வா பின்னோக்கிச் செல்ல நண்பர்கள் அவனை நோக்கி வருகின்றனர்.

"என்ன மச்சான் கத்தி எல்லாம். உள்ளுக்க வைடா பயமா இருக்கு."

முகத்தில் எவ்வித மாற்றமும் காட்டாமல் குமார். "பிறகு நீ செய்ததற்கு மெடலா குத்துவாங்க. உனக்கு கத்திக் குத்துத்தான்.

பின்னோக்கிச் சென்ற செல்வா தடுக்குப்பட பின்னால் பார்த்தவன் சுவர். திரும்பியவன் தன்னை குமார் பக்கத்தில் வர "சொறிடா மச்சான் சொறி, சொறி" என கூறி ஓட எத்தனிக்க இரண்டு பக்கமும் வினோத், பாலா மறிக்க நின்றுவிடுகிறான் செல்வா. செல்வாவின் பக்கத்தில் வந்து அவன் அருகில் சுவரில் இருந்த தேதியை கிழிக்கிறான். 8–30 எனக் காட்டுகிறது திகதி. செல்வா பதட்டத்தில் அதைக் கவனிக்க தவறுகிறான்.

"இவனுக்கு இன்னிக்கு..." என குமார் சத்தம் போட்டுக் கொண்டே கத்தியை எடுத்து செல்வாவிற்கு நேரே மிக வேகத்தோடு கொண்டுவரும் போது செல்வா கண்களை மூட குமார் கண்ணசைக்க வினோத் பல்ப் ஓவ் பண்ணுகிறான்.

சில வினாடியின் பின் தன்னைக் குத்தாததன் காரணம் அறிய எண்ணி கண் திறக்கிறான் செல்வா. ஒரெ இருட்டு திடீரென ஒரு வெளிச்சம் முதலில் தெளிவாக தெரியவில்லை. கண்ணை கசக்கியபின் மீண்டும் பார்க்க அது மெழுகுதிரி. தான் ஏன் குத்தப்படவில்லை? பல்ப் எதற்காக ஓவ் பண்ணி இருக்கு? மெழுகுதிரி ஏன் எரியவேண்டும்? என அடுக்கிக் கொண்டே போனான். திடீரென்று எழுந்த ஒலியால் அனைத்து சந்தேகங்களும் தீர்ந்தன.

ஹப்பி பர்த்டே ரூ யூ செல்வா என்று கூறி நண்பர்கள் கொண்டு வந்திருந்த கேக்கில் மெழுகுவர்த்தியை ஏற்றி அதனை அணைக்கும் பொழுது பல்பை ஒன் பண்ணி வாழ்த்துப்பாடி வாழ்த்துகின்றனர்.

அதிர்ச்சியில் மீளாத செல்வா ஒரு கணம் மௌனியாகி ஆனந்தக் கண்ணீருடன் கலண்டரைப் பார்க்கிறான் 8–30 என்று காணப்படுகின்றது.

"டேய் நான் ரொம்பவே பயந்துட்டன்டா, கோபத்தில என்னைக் கொல்லப் போறிங்களோ" என்று நினைச்சன்.

"நீ என்ன செய்தாலும் உன்னை பிரிவமா மச்சான்" எனக்கூறி "நண்பேண்டா' என்று சொல்லி நால்வரும் கட்டிப்பிடித்து பின் கேக் ஊட்டிவிட்டு முகத்தில் பூசியும் மகிழ்ச்சியாய் பிறந்தநாளைக் கொண்டாடினர்.

# வத்திக்கானில் ஜனாதிபதி



பாப்பாண்டவர் பிரான்சிஸ் அழைப்பை ஏற்று இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வத்திக்கான் நகரிற்கு விஜயம் செய்தார்.

இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது வத்திக்கான் நகரில் பாப்பாண்டவர் பிரான்ஸிஸ்சை சந்தித்து அளவளாவினார்.

இது இலங்கை ஜனாதிபதி பாப்பாண்டவரை சந்திக்கும் இரண்டாவது சந்தர்ப்பமாகும். இதற்கு முன்னர் பாப்பாண்டவர் இலங்கைக்கு கடந்த ஜனவரி மாதம் 13 ஆம் திகதி விஜயம் செய்தபோது ஜனாதிபதி அவரை முதன்முதலில் சந்தித்தார்.

மேலும், ஜனாதிபதி குறிப்பிடுகையில் பாப்பாண்டவரின் ஆசீர்வாதம் இலங்கையில் நல்லிணக்கத்தினையும், அமைதியையும் உருவாக்குவதற்கு நல்ல பங்கு வகிக்கின்றது என்றார்.

பாப்பாண்டவர் மீது கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி, இலங்கையின் சகல இன, மத மக்களும் நல்ல நம்பிக்கை வைத்துள்ளனர், என்றார்.

வண. மல்க்கம் ரஞ்சித் கர்தினால், ரோம் நகர் வந்த இலங்கை ஜனாதிபதிக்கும், அவருடன் கூட வந்த குழுவினருக்கும் இரவுப் போசனம் வழங்கினார்.

அப்பொழுது அவர் பேசுகின்ற பொழுது இந்த வருட ஆரம்பத்தில் இலங்கைக்கு பாப்பாண்டவர் விஜயம் செய்தபோது மிகவும் ஆடம்பரமற்ற எளிமையான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னைப் போலவே இருக்கின்றார் என்று கூறினார்.

“பாப்பாண்டவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னைப் போலவே இருக்கின்றார்,” எனக் கூறினார். அதற்கு நான் பதிலளிக்கையில், “நீங்கள் தான் மைத்திரிபால சிறிசேன போல் இருக்கின்றீர்கள்,” என்று கூறினேன் என்றார்.

இரண்டுநாள் விஜயத்தினை முடித்துக் கொண்டு ஜனாதிபதி கடந்த 16 டிசம்பர் காலை நாடு திரும்பினார்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு டிச.20,2015 அன்று வெளியிடப்பட்டது.